# ஜாதக சந்திரிகை




தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 352

மகாகவி காளிதாஸன் இயற்றிய

# ஜாதகசந்திரிகை

*பதிப்பாசிரியர்:*

**தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,**

*முன்னாள் மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர்,*

*சரஸ்வதி மகால் நூலகம்,*

*தஞ்சாவூர்.*

*தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்*

**சரசுவதி மகால் நூலகம்,**

**தஞ்சாவூர்.**

*2006* ] [ *விலை :* **ரூ. 30 - 00**

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : ஜாதகசந்திரிகை |
| நூலாசிரியர் | : மஹாகவி காளிதாசன் |
| பதிப்பாசிரியர் | : தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : 352 |
| மொழி | : மூலம் வடமொழி, தமிழாக்கம். |
| பதிப்பு | : ஐந்தாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2006 |
| தாள் | : TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : 21 x 14 செ. மீ. |
| பக்கங்கள் | : 120 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : ஜோதிடம் |
| விலை | : ரூ.30 -00 |

# வெளியீட்டாளர் முகவுரை

அரிய சுவடிகளின் கருவூலமாகத் திகழும் சரசுவதி மகால் நூலகம் இலக்கியம், மருத்துவம், சோதிடம் முதலிய துறைகளைச் சார்ந்த நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பித்து வெளியிடும் அரும்பணியைத் தொடர்ந்து ஆற்றிவருகின்றது.

அவ்வரும்பணியின் வரிசையில் 1994ஆம் ஆண்டு முதற்பதிப்பாக வெளியிடப்பட்ட சோதிட நூலே **ஜாதக சந்திரிகை** என்னும் இந்நூலாகும். இந்நூல் மக்களிடம் பெற்ற வரவேற்பையடுத்து இப்பொழுது ஐந்தாம் பதிப்பாக மலர்கின்றது.

இந்நூலில் கிரகங்களின் பார்வைகள் குரு, சுக்ரன் முதலானோரின் கேந்திராதிபத்ய தோஷம், ராகு-கேதுகளின் தன்மைகள், ராஜயோகங்கள், விவாஹப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷம்

மற்றும் அதற்கான பரிகாரம் முதலான பல மிக முக்கியமான கருத்துக்கள் விவரிக்கப்பெறுகின்றன. இந்நூலினைச் சிறப்பாகப் பதிப்பித்த தேதியூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரியாரின் பணி பாராட்டுக்குரியதாகும்.

ஐந்தாம் பதிப்பாக தற்போது வெளிவரும் இந்நூலினைச் சிறப்பாக அச்சிடுவதற்கு உறுதுணையாகத் திகழ்ந்த நிருவாக அலுவலர் திரு. சாமி. சிவஞானம், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன் ஆகியோர்க்கும், பதிப்புத்துறை பணியாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

இந்நூலினை அச்சிட நிதி உதவி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தஞ்சாவூர்
8 -3-2006

**மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப.,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

## இரண்டாம் பதிப்பின்

# வெளியீட்டாளர் முகவுரை

சரஸ்வதி மகால் நூலகம் மகாகவி காளிதாஸனின் சோதிட நூலான "ஜாதக சந்திரிகை" என்னும் நூலை (ஸம்ஸ்க்ருத — தமிழ் உரையுடன்) இரண்டாம் பதிப்பாக வெளியிடுவது அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.

சரஸ்வதி மகால் நூலகத்தின் மேனிலை ஸம்ஸ்க்ருத பண்டிதர் தேதியூர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற இந்த நூலில் பிற சோதிட நூல்களில் கூறப்படாத சிறப்பான சில கருத்துக்கள் — மாரகஸ்தானங்கள் கேந்திராதிபத்ய தோஷம்— 10 வகைத் திருமணப் பொருத்தங்கள் பற்றியவை சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

முதற்பதிப்புக்குப் பிறகு குறுகிய காலத்தில் இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளியிடும் நிலை ஏற்பட்டதே இந்த நூலின் சிறப்பிற்குச் சான்றாகும்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதற்கு ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் திரு. ப. சுப்ரமணியன் அவர்களுக்கும். நூலக வெளியீட்டு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன், M.A., M.L.I.S., அவர்களுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நூலை வெளியிட நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூலை நல்ல முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகப் பணியாளர்களுக்கும், ஏனையோர்க்கும் என் பாராட்டுக்கள்.

**வி. கு. ஜெயக்கொடி,** இ. ஆ. ப.,
*மாவட்ட ஆட்சித் தலைவர்*
*மற்றும் இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

தஞ்சாவூர்.
22—3—1997.

# பதிப்புரை

## (முதல் பதிப்பு)

சரஸ்வதி மகால் நூலகம் "ஜாதக சந்திரிகை" எனும் சோதிட நூலை வெளியிடுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்நூல், அழியா இலக்கியங்கள் பல படைத்த மகா கவி காளிதாசனால் இயற்றப்பட்டது என்பதே இந்நூலின் பெருமைக்குச் சான்றாகும். சோதிட சாத்திரத்தின் அரிய பல கருத்துக்களைச் சுருக்கமாக ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி, எளிதில் மனதில் பதியும் வண்ணம் எளிய சொற்களடங்கிய சம்ஸ்கிருதச் செய்யுள் வடிவில் இயற்றப் பட்டுள்ள இந்நூல், அளவில் சிறியதாயினும் தரத்தில் மிகவும் உயர்ந்துள்ளது. இந்நூலின் செய்யுட்களை மாற்றமில்லாமல் பிற சோதிட வல்லுநர்களும் தமது நூல்களில் கையாண்டிருப்பதே அதற்குச் சான்றாகும்.

சரசுவதி மகால் நூலகத்திலுள்ள தமிழுரையுடன் கூடிய மிகப் பழமையான ஓலைச் சுவடியையும், கிரந்த எழுத்தில் சம்ஸ்கிருத உரையுடன் உள்ள மிகவும் பழமையான சிறிய தொரு நூலையும் கொண்டு இந்த நூல் பதிப்பிக்கப்படு கிறது. சமீப காலத்தில் சம்ஸ்கிருத உரையுடன் இந்நூல் வெளிவரப் பெறவில்லை.

இதனைத் தமிழில் விளக்கவுரையுடன் பதிப்பித்த நூலக மேநிலை சம்ஸ்கிருத பண்டிட் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளின் முயற்சி பாராட்டிற்குரியது. சரஸ்வதி மகால் நூலகம் இதுபோன்று பலருக்கும் பயன் ஏற்படும் வண்ணம் தமிழுரையுடன் சமஸ்கிருத நூல்களை வெளியிட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. பதிப்பாசிரியர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளுக்கு எனது பாராட்டுக்கள்.

அரிய நூல்களை வெளியிடுவதற்குப் பொருளுதவி நல்கும் மைய அரசுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நல்ல முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சகப் பிரிவினருக்கு எனது பாராட்டுக்கள்.

இ. வேங்கடாசலம், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர்
மற்றும் இயக்குநர் (பொறுப்பு)
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
31—5—1994.

# முன்னுரை

ஆதி அந்தமற்ற கடவுளையும், கடவுள் தத்துவங்களையும் விளக்கும் வேதங்கள் கடவுள் போன்றே ஆதியும் அந்தமும் அற்றதுதான். வேதம் என்பதனை ஒரு புருஷ வடிவுள்ளதாக பாவித்துக் கொண்டால் அதன் வாய் "வியாகரண சாஸ்திர"மென்றும், கண்கள் "ஜ்யோதிஷ சாஸ்திர"மென்றும், காதுகள் "நிருக்தம்" என்றும், கைகள் "கல்ப்பம்" என்றும், மூக்கு "சிக்ஷை"யென்றும், கால்கள் "ச்சந்தஸ்" என்றும் சொல்லப்படும்.

शब्दशास्त्रं मुखं ज्योतिषं चक्षुषी
श्रोत्रमुक्तं निरुक्तं च कल्पः करौ ।
या तु शिक्षाऽस्य वेदस्य सा नासिका
पादपद्मद्वयं छन्द आद्यैर्बुधैः ॥

ஜ்யோதிஷ சாஸ்திரம் வேத புருஷனுடைய கண்ணாகச் சொல்லப்பட்டிருப்பதால் பிற ஏனைய அங்கங்கள் இருப்பினும், கண் இல்லாத மனிதன் எதையும் செய்வதற்குச் சக்தியற்றவனாவது போல் இந்த ஜ்யோதிஷம் எனும் அங்கம் (கண்) இல்லையேல் பிற வியாகரணம் முதலான அங்கங்கள் இருப்பினும் வேத புருஷனால் வகுத்துக் கூறப்படும் செயல்கள், போதனைகள் யாவும் அர்த்தமற்றவையாகும்.

உலகில் உரிய காலத்தில் மழை பெய்து சுபிட்சம் நிலை பெறுவதற்காகவே ஏற்பட்ட யாகங்களையும் தெய்வத் துதிகளையும் போதிக்கவே வேதங்கள் ஏற்பட்டன. அந்த யாகங்களோ வஸந்தம், க்ரீஷ்மம் முதலான ருதுக்களையும் (பருவ காலங்களையும்) சுக்ல, கிருஷ்ண (வளர்பிறை,

தேய்பிறை) பக்ஷங்களையும், அச்வினி முதலான 27 நக்ஷத்திரங்களையும், பிரதமை முதலான திதிகளையும், ஞாயிறு முதலான நாட்களையும் முகூர்த்தம் முதலானவற்றையும் முன் வைத்தே விதிக்கப்பட்டுள்ளன.

யாகங்களையும் பிற அறச் செயல்களையும் செய்வதற்கான நல்ல காலத்தை ஜ்யோதிஷ சாஸ்திரம் ஒன்றே அறிவிக்கக்கூடியது என்பதால்தான் அது வேதாங்கமெனக் கூறப்பட்டது.

எனவேதான்

वेदास्तावद्यज्ञकर्मप्रवृत्ता
यज्ञाः प्रोक्तास्ते तु कालाश्रयेण ।
शास्त्रादस्मात्कालबोधो यतः स्याद्
वेदाङ्गत्वं ज्यौतिषस्योक्तमस्मात् ॥

என்று கூறப்படுகிறது.

இந்த ஜ்யோதிஷ சாஸ்திரம் பதினெட்டு மகரிஷிகளால் பல நூல் வடிவில் கூறப்பட்டு இன்றளவும் உலகில் நிலைப்பெற்றிருக்கிறது. இந்த சாஸ்திரத்தை உலகில் நிலைபெறச் செய்த பெருமை வராஹமிஹிராசார்யர், ஸத்யாசார்யர், கல்யாணவர்மன், பட்டோத்பலர், மந்த்ரேச்வரர் முதலானோரையே சாரும். அவர்களைத் தொடர்ந்து அவர்கள் வழிநின்ற அறிஞர்கள் பலரும் மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக பல மொழிகளிலும் வெளிவந்த ஜ்யோதிஷ தத்துவங்கள் இன்றளவும் தொடர்ந்து உலகில் வேறூன்றி நிற்கின்றன.

நுட்பம் மிகுந்த ஜ்யோதிஷ சாஸ்த்ரத்தைச் சரியாகப் பயிலாதவர்களும், "ஊஹாபோஹ"த் திறனற்றவர்களும் கூறும் சோதிடப் பலன்கள் சரியாக இல்லையென்பதற்காக ஜ்யோதிஷ சாஸ்திரத்தையே ஒருசிலர் குறைகூறுவது பொருத்தமற்றதாகும்.

கடல் போல் பரந்து விரிந்த இந்த சாஸ்திரத்தின் சில முக்கியமான செய்திகளை மட்டும் சுருக்கமாக ஆனால் சந்தேகத்திற்கிடமின்றிக் கூறும் இந்த "ஜாதக சந்த்ரிகை" எனும் சிறு நூல் மகாகவி காளிதாஸனால் இயற்றப்பட்ட தாகச் சொல்லப்படுகிறது.

இதுவரை மஹாகவி காளிதாஸனைப்பற்றி ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் குமாரஸம்பவம், மேகதூதம், ரகுவம்சம், விக்ரமோர்வசீயம், மாளவிகாக்னிமித்ரம், அபிக்ஞான சாகுந்தலம், ருதுஸம்ஹாரம் எனும் இலக்கியங் களை மட்டுமே மஹாகவி காளிதாஸன் இயற்றியுள்ள தாகத்தான் கூறியிருக்கிறார்கள். "ஜாதகசந்த்ரிகை"யும் அவற்றுள் ஒன்று என யாரும் கூறியிருப்பதாகத் தெரிய வில்லை. ஆனால் இந்த நூலின் இலக்கிய நயம் மிக்க முதல் ச்லோகமும் பிற ஜ்யோதிஷ சாஸ்திரக் கருத்துக்க ளடங்கிய ச்லோகங்களும் அவற்றில் உள்ள நயம மிக்க எளிய சொற்களும் இதனை மஹாகவி காளிதாஸனே இயற்றியிருக்கக்கூடும் என்றுதான் எண்ணச் செய்கின்றன.

ஸரஸ்வதி மஹால் நூலகத்தில் தமிழ் உரையுடன் கூடிய ஓலைச்சுவடி (Col S. No. 1300)யையும் கிரந்த எழுத்தில் உள்ள ஸம்ஸ்க்ருத உரையுடன் கூடிய நூலையும் துணைகொண்டு பதிப்பிக்கப்பட்ட இந்த நூலின் முதல் ச்லோகம்.

सिद्धान्तमौपनिषदं शुद्धान्तं परमेष्ठिनः ।
शोणाधरमहं किञ्चिद्वीणाधरमुपास्महे ॥

ஸித்தாந்தம் ஔபநிஷதம் சுத்தாந்தம் பரமேஷ்ட்டின: ।
சோணாதரமஹம் கிஞ்சித் வீணாதரமுபாஸ்மஹே ॥
என்பதாகும்.

இதில் 'சோணாதரம் அஹம்', 'உபாஸ்மஹே' என்பது இலக்கணப் பிழையுடன் கூடிய பாடமாகும். அஹம்–நான்

தன்மை ஒருமைப் பிரதிபெயர்ச்சொல். உபாஸ்மஹே—வழிபடுகிறோம். தன்மை பன்மை பயனிலைச் சொல் ஆகும். இது இலக்கணப்படி பிழையுள்ள பிரயோகமே. இதனை சோணாதரம்—வயம் என்று மாற்றிச் சொன்னால் பிழை நீங்கும்.

ஆனால் 'சோணாதரம் வயம் சிஞ்சித்' என்ற சொற்றொடரைக் காட்டிலும் 'சோணாதர மஹம் கிஞ்சித்' என்ற சொற்றொடர் நயமுள்ளதாகத் தோன்றுகிறது. ஆதலால் அஹம் என்ற சொல்லை தன்மை ஒருமை பிரதிபெயர்ச் சொல்லாகக் கொள்ளாமல்—'ஆக்ருதி கணத்'தைச் சேர்ந்த விபக்தி ப்ரதி ரூபகமான 'அவ்யயம்' என்று (Indeclinable) கொள்வோமாகில் இலக்கணப் பிழை விலகும். இவ்வாறு சொல் நயமும், பொருள் செறிவுள்ள எளிய சொல் பிரயோகமும் கொண்டுள்ள இந்நூல், மஹாகவி காளிதாஸனின் படைப்பாகவே இருக்கக்கூடும் என்றே சொல்லத் தோன்றுகிறது.

இந்நூலில் லக்னம், தன, குடும்ப ஸ்தானம் முதலான 12 பாவங்களைப் பற்றியும் தசா புக்திகளின் விபரங்கள் பற்றியும் சொல்லப்படவில்லை. எனினும் கிரஹங்களின் பார்வைகள், குரு சுக்ரன் முதலானோரின் கேந்திராதிபத்ய தோஷம், மாரக ஸ்தானங்கள், ராகு—கேதுக்களின் தன்மைகள், ராஜயோகங்கள், விவாஹப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷமும், அதன் பரிஹாரமும் முதலான பல மிக முக்யமான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன.

நமது சரஸ்வதி மஹால் பனை ஓலைச் சுவடி (Col. S. No 1300)யில் உள்ள தமிழ் உரையுடனும் கிரந்த எழுத்தில் உள்ள ஸம்ஸ்கிருத உரையுடனும் பிழைநீக்கம் செய்து இந்நூல் அச்சிடப்படுகிறது. தமிழ் உரை ஆசிரியர் பெயரும் சுவடியிலும், நூலிலும் குறிப்பிடப்படவில்லையாதலால் உரையாசிரியர்களைப் பற்றி ஏதும் அறியமுடியவில்லை.

இந்த நூலை வெளியிடுவதற்கு அனுமதியளித்த முன்னாள் இயக்குநர் அவர்களுக்கும் இந்நாள் (பொ) இயக்குநரும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரு மாகிய திரு. இ. வெங்கடாசலம் I. A. S. அவர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றியுணர்வினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூல் வெளிவருவதற்கு ஊக்கமளித்த நூலக (பொ.) நிர்வாக அலுவலர் அவர்களும் நூலக நூல் வெளியீட்டு மேலாளர் அவர்களுமாகிய திரு. அ. பஞ்சநாதன் M. A., M. Lis., அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டளித்த நூலக அச்சுப்பிரிவைச் சேர்ந்த அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்கள்.

**நேதிரூர் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள்,**
மேநிலை ஸம்ஸ்க்ருத பண்டிட்,
சரஸ்வதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்.
19—5—94

# பொருளடக்கம்


| பொருள் | பக்க எண் |
| --- | --- |
| கடவுள் வணக்கம் | 1 |
| அவையடக்கம் கூறும் முகமாக ஆசிரியர், பராசரர் ஹோரையை அனுசரித்த கருத்துக்களையே கூறுவதாகக் கூறல் | 2 |
| லக்னம், தனம், சகோதரத்வம் முதலான பாவங்களைப் பற்றியும், தசா புக்திகள் பற்றியும் பிற நூல்களைக் கொண்டு அறியவேண்டும் என்பது பற்றி | 2 |
| கிரஹங்களின் பார்வை பற்றிக் கூறல் | 3 |
| பாவாதிபதிகளின் சுபாசுபத்வம் பற்றி | 4 |
| லக்ன ரீதியாக சுப — அசுப கிரஹங்கள் பற்றிய அட்டவணை | 5 |
| ஸௌம்ய, க்ரூர கிரஹங்களின் கேந்திராதிபத்யம் பற்றி | 6 |
| சர—ஸ்திர உபய ராசிகள் பற்றியும், பாதக ஸ்தானங்கள் பாதகாதிபதிகள் பற்றியும் | 9 |
| 2, 12ம் இடத்து அதிபதிகளின் பலன் தரும் இயல்புகள் பற்றி | 10 |
| அஷ்டமாதிபதியே லக்னாதிபதியாக இருந்தால் அசுப பலன் தருகிறதில்லை என்பது பற்றி | 12 |
| குரு, சுக்ரர்களுக்கு கேந்திராதிபத்ய தோஷம் அதிகம் என்பது பற்றியும், புதன்—சந்திரன் இவர்களுக்குக் குறைவு என்பது பற்றியும் | 13 |
| சூரிய, சந்திரர்களுக்கு அஷ்டமாதிபத்ய தோஷமில்லை | 15 |
| செவ்வாய் 5மிடம், 10மிடம் இரண்டிற்கும் அதிபனாக இருந்தால்தான் சுபத்தன்மையுள்ளவன் என்பது பற்றி | 15 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| ராகு, கேதுக்கள் சுபாசுப பலனளிக்கும் விதம் பற்றி | 17 |
| கேந்த்ராதிபதிகள் த்ரிகோணாதிபதிகளுடன் சேர்ந்திருந்தால் சுப பலன் தருகிறார்கள் — 6, 8, 11மிடத்தின் அதிபதிகளுடன் சேர்ந்து இருப்பின் சுப பலன் தருவதில்லை என்பது பற்றி | 19 |
| மேலே கூறப்பட்டுள்ளதை விளக்கும் அட்டவணை | 21 |
| இது முதல் 7 ச்லோகங்களால் ராஜயோகம் பற்றி | 22 |
| தர்மகர்மாதிபதிகள் துஸ்ஸ்தானங்களில் இருந்தாலும் ராஜயோகம் அளிப்பர் என்பது பற்றி | 22 |
| இதில் பேதம் | 23 |
| தர்ம கர்மாதிபதிகஸ் ராஜயோகமளிப்பதில் உள்ள க்ரமங்கள் பற்றி | 23 |
| கேந்த்ராதிபதிகள் த்ரிகோணாதிபதிகளுடன் சம்பந்தப்பட்டால் ஏற்படும் ராஜயோகம் பற்றி | 24 |
| தசாபுக்தி காலங்களில் ராஜயோகம் ஏற்படுவது பற்றி | 25 |
| ராஜயோகம் தரும் கிரஹங்களுடன் கூடிய பாப கிரஹங்களின் புக்தி காலத்திலும் சுபபலன் ஏற்படும் | 27 |
| ராகு, கேதுக்கள் இருவருக்கும் விசேஷ சுபபலன் தரும் யோக்யதை பற்றி | 29 |
| ஒரு கிரகம் கேந்த்ரத்திற்குட் த்ரிகோணத்திற்கும் அதிபதியாகில் ராஜயோகத்தை அளிப்பதுபோல் வேறு ஒரு த்ரிகோணாதிபதியுடன் சம்பந்தப் பட்டாலும் ராஜயோகமளிப்பார் என்பதுபற்றி | 29 |
| தர்மகர்மாதிபதிகள் 8, 11க்கும் அதிபதிகளாயின் ராஜயோகம் தருவதில்லை | 32 |

| பொருள் | பக்க எண் |
| --- | --- |
| ஆயுள் பாவம் பற்றி | |
| ஆயுஸ் ஸ்தானங்கள் யாவை என்பது பற்றியும் மாரக ஸ்தானங்கள் யாவை என்பது பற்றியும் | 32 |
| மாரக ஸ்தானங்களான 2மிடம் 7மிடம் பற்றியும் அவ் விடங்களில் உள்ள கிரஹங்களின் மாரக குணம் பற்றியும் | 33 |
| மாரகத்தைச் செய்யும் கிரஹங்களுள் தசாபுக்திகளில் ஏற்படும் மரணம் பற்றி | 34 |
| மாரக கிரஹ தசை ஏற்படாத நிலையில் பாப கிரஹ தசையிலும் மாரக குணமுள்ள கிரஹங்களின் புக்திகளில் மரணம் ஏற்படுவது பற்றி | 35 |
| மாரகம் செய்வதில் சனி பகவானுக்குள்ள விசேஷ தன்மை பற்றி | 39 |
| எல்லா கிரஹங்களும் தம் தசைகளில் சுயபுக்திகளில் சுபபலன் தருவதில்லையென்பது பற்றி | 40 |
| கிரஹங்கள் தம்முடன் சம்பந்தப்பட்ட கிரஹங்களின் தசாபுக்தி காலங்களில் பாவாதிபத்யத்திற்கு ஏற்ப சுபாசுப பலன்கள் தருவர் என்பது பற்றி | 41 |
| தசாநாதன் அளிக்கும் பலனுக்கு விரோதமான பலன் தரும் புக்திநாதர்களின் பாவ ஸ்திதி பாவாதிபத்யம் பற்றி | 43 |
| பாபகிரஹ சம்பந்த மற்ற த்ரிகோணாதிபதியின் தசையில் கேந்திராதிபதிகளின் புக்திகளில் சுபபலன் ஏற்படும் என்பது பற்றி | 43 |
| ராஜயோக புக்திகளின் லக்ஷணம் — விவரித்தல் | 44 |
| ராகு கேது இருவரும் ராஜயோகம் தருவார்களா ! எப்பொழுது ? | 47 |
| பாபகிரஹ தசாபலன் | 48 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| மாரக கிரஹ தசாபலன் | 49 |
| லக்னங்களுக்கு ஏற்ப கிரஹங்களின் சுபத்வமும் அசுபத்வமும் பற்றி | 51 |
| மேஷ லக்னத்திற்கு | 52 |
| விருஷப லக்னத்திற்கு | 53 |
| மிதுன லக்னத்திற்கு | 54 |
| கடக லக்னத்திற்கு | 56 |
| சிம்ம லக்னத்திற்கு | 57 |
| கன்யா லக்னத்திற்கு | 58 |
| துலா லக்னத்திற்கு | 60 |
| விருச்சிக லக்னத்திற்கு | 61 |
| தனுர் லக்னத்திற்கு | 62 |
| மகர லக்னத்திற்கு | 63 |
| கும்ப லக்னத்திற்கு | 63 |
| மீன லக்னத்திற்கு | 64 |
| புத்ரன், மனையாள் ஏற்படும் காலம் பற்றி | 65 |
| பாவ பலன்கள் இப்படித்தான் ஏற்படும் என்று தீர்மானமாகக் கூறவியலாது என்பது பற்றி | 65 |
| ராஜயோக தசைகளே ஆயுட்காலத்தில் ஏற்படாதபொழுது | 66 |
| இயல்பாகவும், லக்ன ப்ரயுக்தமாகவும் பாபிகளாக உள்ள கிரஹங்கள் உச்சம் பெற்றிருப்பினும் சுபபலன் ஏறபடுவதற்கில்லை என்பது பற்றி | 66 |
| பத்துவித விவாஹப் பொருத்தங்கள் | 68 |
| இனப்பொருத்தம் | 69 |
| பிற நூல்களில் கூறப்பட்ட திருமணப் பொருத்தங்கள் பற்றி | 73 |

| பொருள் | பக்க எண் |
|---|---|
| 20 வகைப் பொருத்தங்கள் பற்றி | 74 |
| தினப்பொருத்தம் | 75 |
| கணப் பொருத்தம் | 78 |
| மாகேந்த்ரப் பொருத்தம் | 80 |
| ஸ்த்ரீ தீர்கப் பொருத்தம் | 81 |
| யோனிப் பொருத்தம் | 82 |
| ராசிப் பொருத்தம் | 84 |
| ராசி அதிபதிப் பொருத்தம் | 85 |
| கிரஹங்களின் சத்ருத்வம், மித்ரத்வம், ஸமத்வம் பற்றிய அட்டவணை | 86 |
| வச்யப் பொருத்தம் | 88 |
| ரஜ்ஜுப் பொருத்தம் | 89 |
| வேதைப் பொருத்தம் | 90 |
| நாடிப் பொருத்தம் | 92 |
| ராசி குண விசாரம் | 94 |
| கண குண விசாரம் | 95 |
| ராசி குண விசாரம் | 96 |
| நாடி குண விசாரம் | 96 |
| தினம், கணம் முதலான பொருத்தங்களின் பலன்கள் | 97 |
| மனப் பொருத்தம் அவசியம் என்பது பற்றி | 98 |
| மூலம், ஆயில்யம் முதலான நக்ஷத்ர தோஷங்கள் பெண்களுக்கேயன்றி ஆண்களுக்கல்ல என்பது பற்றி | 99 |
| பொருத்தம் பார்க்கும் முன்பாக ஆண், பெண் ஜாதகங்களின் கணிதம் பற்றி | 100 |
| செவ்வாய் தோஷமும் அதற்கான பரிஹாரமும் | 100 |

# AN APPEAL

Manuscripts on Palmleaf or Paper of the ancient works of the wise men of the past, are the great treasures, solely inherited by the Nation and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also to the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The Manuscripts so presented will be accepted and acknowledged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar King of Tanjore, **Rajah Serfoji**, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world famous **"Sarasvati Mahal Library"**. It is open to you to share the honour of Serfoji, in your own measure by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it. Will you hasten to take it up? The Library waits for your answer.

**DISTRICT COLLECTOR AND DIRECTOR**
**Sarasvati Mahal Library,**
**Thanjavur.**

## OUR OTHER PUBLICATIONS

| | | |
|---|---|---|
| Nauka Charitram | Sanskrit & Tamil | 30-00 |
| Sita Kalyanam | Sanskrit & Tamil | 35-00 |
| Gayatri Kosam | Sanskrit & Tamil | 30-00 |
| Ragaratnakaram | Sanskrit & Tamil | 15-00 |
| Dhanyakumaracharitram (Dharmaneri Kathai) | Sanskrit & Tamil | 44-00 |
| Kandukapura Mahatmyam | Sanskrit & Tamil | 25-00 |
| Ramachinthamani Aarudam (Nandinagari Catalogue) | Sanskrit & Tamil | 25-00 |
| Vruttaratnavali (Chandas Sastram) | Sanskrit & Tamil | 30-00 |
| Kalanandakam | Sanskrit & Tamil | 55-00 |
| Prabodha Chandrika (Grammer) | Sanskrit & Tamil | 70-00 |
| Sirungarakosam | Sanskrit | 12-00 |
| Vedasara Siva Sahasram | Sanskrit | 80-00 |
| Stotra Ramayanam | Sanskrit | 25-00 |
| Mukunda Vilasam | Sanskrit | 35-00 |
| Vinatananda Vyayoga | Sanskrit | 40-00 |
| Kumaresa Satakam | Tamil | 65-00 |
| Lokaswarupam | Tamil | 75-00 |
| Kanakkathikaram | Tamil | 150-00 |
| ThiruvappanurPuranam | Tamil | 50-00 |
| Sowmiya Sagaram | Tamil | 70-00 |
| Jatakachandrika | Tamil | 40-00 |
| Marathi Lavani Songs | Marathi | 35-00 |
| Nakshatra Chinthamani (Part - I) | Tamil | 200-00 |
| Nakshatra Chinthamani (Part - II) | Tamil | 100-00 |

|| श्रीः ||

|| श्रीगुरुभ्यो नमः ||

महाकविकालिदासविरचिता

# || जातकचन्द्रिका ||

மஹாகவி காளிதாஸன் இயற்றிய

# ஜாதகசந்திரிகை

கடவுள் வணக்கம்

ஶ்லோ. सिद्धान्तमौपनिषदं शुद्धान्तं परमेष्ठिनः ।
शोणाधरं वयं किञ्चिद्वीणाधरमुपास्महे ॥ १

தாத்பர்யம் — கருத்து: உபநிஷத் ஸம்பந்தமானதாயும், ப்ரம்மஸ்வரூபமானதாயும், வீணையைத் தரித்தவளாயும், சிவந்த அதரோஷ்டத்தை (கீழ் உதடு) உடையவளாயும் ஆகிய இப்பேர்ப்பட்ட ஸரஸ்வதிதேவியை தியானம் செய்கிறேன்.

விளக்கவுரை: ஆசிரியர்கள் தாமியற்றும் நூல்களின் ஆரம்பத்தில் இஷ்ட தெய்வத்தை வணங்குவதும், இம்முறை பின்னாட்களிலும் பின்பற்றப்படவேண்டும் என்பதற்காக நூல்களின் ஆரம்பத்தில் அதனைக் குறிப்பதும் மரபு. அதனை அனுசரித்து இந்நூலின் ஆரம்பத்தில் ஸரஸ்வதி நமஸ்கார மங்கள ச்லோகம் ஆசிரியரால் சேர்க்கப்பட்டு உள்ளது.

श्लो. फलानि नक्षत्रदशाप्रकारेण विवृण्महे ।
वयं पाराशरीं होरामनुसृत्य यथामति ॥ २

(தா-ம்): நாங்கள் (ஆசிரியர்) நக்ஷத்திர தசாப் பிரகாரப்படிக்கு பலன்களைக் குறித்து பராசர ஸம்பந்தமான ஜ்யோதிஷ சாஸ்திரத்தை அனுஸரித்து பூர்வத்தில் இருந்து(த) மணித்தர், யவனாசார்யர் முதலானவர்கள் சொல்லியபடி வரிசையாய் சொல்லுகிறேன். (ஒருவருடைய ஆயுட்காலத்தில் நிகழவிருக்கும் பலானுபவங்களை முன் கூட்டியே அறிவதற்குப் பல ஜ்யோதிஷ நூல்களைச் சான்றோர்கள் பலரும் இயற்றியுள்ளார்கள். அவர்களுள் பராசர ஹோரா சாஸ்திரத்தையனுசரித்தும் எமது அனுபவம், அறிவு இவைகளுக்கு ஏற்பவும் விளக்குகிறோம் என ஆசிரியர் நூன்முக விளக்கம் அளிக்கிறார்.

श्लो. बुधैर्भावादयः सर्वे ज्ञेयाः सामान्यशास्त्रतः ।
एतच्छास्त्रानुसारेण संज्ञां ब्रूमो विशेषतः ॥ ३

सं. व्याख्या : बुधैरिति--बुधैर्भावादयः लग्नादिद्वादशभावाः । आदिशब्देन दशाभुक्तिविभागकेन्द्रत्रिकोणादिलक्षणा उच्यन्ते । सामान्यशास्त्रतः तदुक्तप्रकारेण ज्ञेयाः । वयं एतच्छास्त्रानुरूपेण वक्ष्यमाणशास्त्रानुगुण्येन । विशेषतः विशेषसंज्ञां ब्रूमः ।

(தா-ம்) பெரியோர்களால் சொல்லப்பட்ட த்வாதச பாவம் முதலானதை முன் சாஸ்த்திரப்படிக்குத் தெரிந்து கொள்ளவேண்டியது. இந்த சாஸ்திரத்தில் அதிகமாகிய சாஸ்திர ஸங்கேதங்களைச் சொல்கிறோம்.

(வி-ரை) அடிப்படையிலான லக்ன பாவம் - தன - சகோதர - மாத்ரு - புத்ர பாவங்கள் முதலானவற்றையும்,

தசைகள், புக்திகள், அவற்றின் கால அளவு முதலானது பற்றியும். பிற பொது நூல்களைக் கொண்டு அறிந்து கொள்ளவேண்டும். இந்நூலில் அவைபற்றிக் கூறப்போவ தில்லை. அவ்வாறு பிற நூல்களிலிருந்து அறிவது அறிஞர் களுக்கு எளிதே. இந்நூலில் விசேஷமான சங்கேதச் சொற்களைக் கூறலிருப்பதாகவும் ஆசிரியர் கூறுகிறார்.

ஸ்லோ. पश्यन्ति सप्तमं सर्वे शनिजीवकुजाः पुनः ।
विशेषतश्च त्रिदशत्रिकोणचतुरश्रगा(का)न् ॥ ४

सं. व्या : पश्यन्ति - सूर्यादयः - सप्तमगान्सप्तमराशिस्थितान्पश्यति(न्ति) । पुनः भूयः । शनिजीवकुजाः विशेषतः विशेषेण त्रि, दश, त्रिकोण, चतुरश्रगान्यथाक्रमं पश्यन्ति । सर्वेऽपि ग्रहाः त्रिदशत्रिकोणचतुरश्रगान्विपश्यन्तीत्याचक्षते तन्माभूदित्येव मुक्तम् ॥

(தா-ம்) ஸூர்யன் முதலான ஸகல கிரஹங்களும் அவாளவாள் (அவரவர்கள்) இருந்த (இருக்குப்) ராசிக்கு 7-மிடத்தைப் பார்க்கிறார்கள். அதில் சனி, குரு, குஜர் (செவ்வாய்)கள் மூவரும் முன் சொன்ன 7-ம் ராசி தவிர இன்னும் அதிகமாக ராசிகளைப் பார்க்கிறார்கள். அது என்னவென்றால் சனி 3-மிடத்தையும், 10-மிடத்தையும் பார்க்கிறார். குரு த்ரிகோணமான 5-மிடத்தையும், 9-ம் இடத்தையும் பார்க்கிறார். குஜன் (செவ்வாய்) சதுரஸ்ர ஸ்தானமான 4-மிடத்தையும், 8-மிடத்தையும் பார்க்கிறார் என்பது.

(வி-ரை) எல்லா கிரஹங்களும் தாமிருக்கும் இடத்தி லிருந்து 7-ஆம் இடத்தைப் பார்க்கிறார்கள் என்பது பொது விதி. சனி — குரு — செவ்வாய் இம்மூவரும் தாமிருக்குமிடத்திலிருந்து முன்கூறிய 7-மிடம் தவிர முறையே, சனி 3-ஆமிடம், 10-ஆமிடங்களையும்; குரு

5-ஆமிடம், 9-ஆமிடங்களையும்; செவ்வாய் 4-ஆமிடம், 8-ஆமிடங்களையும் பார்க்கிறார்கள் என்பது விசேஷ விதி. விசேஷ விதியால் ஏற்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட இடப் பார்வைகள் விசேஷப் பார்வைகளாகும். அவை பலம் மிகுந்த பார்வைகளெனப்படும். சனியின் 7-ஆமிடப் பார்வையைவிட 3-ஆமிடப் பார்வையும், 10-ஆமிடப் பார்வையும் பலம் மிகுந்தவை. குருவின் 7-ஆமிடப் பார்வையை விட 5-ஆமிடப் பார்வையும், 9-ஆமிடப் பார்வையும்; செவ்வாயின் 7-ஆமிடப் பார்வையை விட 4-ஆமிடப் பார்வையும் 8-ஆமிடப் பார்வையும் அதிக பலம் வாய்ந்தவை என்று பொருள் கொள்ளவேண்டும். இம் மூவரைத் தவிர மற்ற கிரஹங்களுக்கு 7-ஆமிடப் பார்வை மட்டுமே உண்டு. அவர்கள் வேறு இடங்களைப் பார்க்கிறதில்லை.

ஶ்லோ. सर्वे त्रिकोणनेतारो ग्रहाः शुभफलप्रदाः ।
पतयस्त्रिषडायानां यदि पापफलप्रदाः ॥ ५

सं. व्या. : सर्वे इति ॥ सर्वे ग्रहाः ॥ त्रिकोणनेतारो यदि पञ्चम-नवमाधिपतयश्चेच्छुभफलप्रदा भवन्ति । एवं त्रिषडायानां तृतीयषष्ठैकादशानां पतयो यदि (तर्हि) पापफलप्रदा भवन्ति, न तु (तत्र) स्थिताः ॥

(தா-ம்) இந்த ச்லோகம் முதல் 4 ச்லோகங்களால் ஸ்தான குணம் சொல்லுகிறோம். அது எப்படியென்றால் ஜன்ம லக்னத்துக்(திற்)கு 5-க்கும், 9-க்கும் உடையவர்கள் சுப பலத்தையே கொடுப்பார்கள். 3-க்கும், 6-க்கும், 11-க்கும் உடையவர்கள் பாப பலத்தையே கொடுப்பார்கள்.

(வி-ரை) ஜன்ம லக்னத்திற்கு 5-ஆமிடம், 9-ஆமிடம், இவற்றிற்கு அதிபதியான கிரஹங்கள் இயல்பாக சுபர்களாயினும், அசுபர்களாயினும் சுப பலனையே கொடுப்

பார்கள். 3-க்கும், 6க்கும், 11-க்கும் உடைய (அதிபதிகளான) கிரஹங்கள் இயல்பான சுபர்களாகவோ, அசுபர்களாகவோ இருந்தாலும் அசுப (பாப) பலனையே கொடுப்பார்கள். அதிபதிகள் என்று கூறப்பட்டதால் மேற்கூறிய 5–9; 3–6–11 ஆமிடங்களில் உள்ள கிரஹங்களுக்கு இது பொருந்தாது. மேற்கூறிய இடங்களின் அதிபதிகளாயிருப்பின் மேலே கூறப்பட்டபடி சுப-அசுப பலன்களை அளிப்பார்கள்.

இக்கருத்தை விளக்கும் முகமாக இங்கு தரப்பட்டுள்ள அட்டவணை வாயிலாக எந்த எந்த லக்னத்திற்கு எந்த எந்த கிரகங்கள் சுப பலன்களையும், அசுப பலன்களையும் அளிக்கக்கூடியவர் என்பதை அறியலாம்.

**லக்ன ரீதியாக சுப–அசுப கிரஹங்கள் பற்றிய அட்டவணை**

| லக்னம் | சுபர்கள் | |
|---|---|---|
| | (5) பஞ்சம த்ரிகோணாதிபதி | (9) நவம த்ரிகோணாதிபதி |
| மேஷம் | சூரியன் | குரு |
| ரிஷபம் | புதன் | சனி |
| மிதுனம் | சுக்ரன் | சனி |
| கடகம் | செவ்வாய் | குரு |
| ஸிம்மம் | குரு | செவ்வாய் |
| கன்னி | சனி | சுக்ரன் |
| துலாம் | சனி | புதன் |
| விருச்சிகம் | குரு | சந்திரன் |
| தனுஸ் | செவ்வாய் | சூரியன் |
| மகரம் | சுக்ரன் | புதன் |
| கும்பம் | புதன் | சுக்ரன் |
| மீனம் | சந்திரன் | செவ்வாய் |

| லக்னம் | அசுபர்கள் | | |
|---|---|---|---|
| | 3க்கு உடையவர் | 6க்கு உடையவர் | 11க்கு உடையவர் |
| மேஷம் | புதன் | புதன் | சனி |
| ரிஷபம் | சந்திரன் | சுக்ரன் | குரு |
| மிதுனம் | சூரியன் | செவ்வாய் | செவ்வாய் |
| கடகம் | புதன் | குரு | சுக்ரன் |
| சிம்மம் | சுக்ரன் | சனி | புதன் |
| கன்னி | செவ்வாய் | சனி | சந்திரன் |
| துலாம் | குரு | குரு | சூரியன் |
| விருச்சிக | சனி | செவ்வாய் | புதன் |
| தனுஸ் | சனி | சுக்ரன் | சுக்ரன் |
| மகரம் | குரு | புதன் | செவ்வாய் |
| கும்பம் | செவ்வாய் | சந்திரன் | குரு |
| மீனம் | சுக்ரன் | சூரியன் | சனி |

श्लो. न दिशन्ति शुभं नृणां शुभाः केन्द्राधिपा यदि ।
क्रूराश्चेदशुभं त्वेते प्रबला उत्तरोत्तरम् ॥ ६

सं. व्या. : न दिशन्तीति । शुभग्रहाः गुरुशशिकविबुधाः । (ते) केन्द्राधिपाः यदि, लग्नचतुर्थसप्तमदशमकेन्द्रनाथाश्चेत् । नृणां शुभफलं न दिशन्तीत्यर्थः । क्रूरास्तदितरे रविभौममन्दाः केन्द्राधिपाश्चेत् अशुभफलं न दिशन्ति । किन्तु शुभफलमेव दिशन्तीत्यर्थः । एते पूर्वोक्ताः सर्वे ग्रहाः उत्तरोत्तरं प्रबलाः भवन्ति । पञ्चमाधिपापेक्षया नवमाधिपः प्रबलः ।

लग्नाधिपापेक्षया चतुर्थाधिपः प्रबलस्तृतीयाधिपापेक्षया षष्ठाधिपः एवमुत्तरोत्तरं प्रबलाः सन्तः तत्तत्फलानि प्रदिशन्तीत्यर्थः ॥

(தா-ம்) ஸௌம்ய கிரஹங்களாகிய புதன் குரு சுக்ரன் சந்திரன் இவாள் (இவர்கள்) 4 பேரும் கேந்திராதிபதிகளானால் சுப பலனைக் கொடுக்கமாட்டார்கள். அசுப பலனைக் கொடுப்பார்கள். க்ரூரகிரஹமா(ங்களா)கிய குஜரவி (ஸூர்யன்) சனி இந்த 3 பேரும் கேந்திராதிபதிகளானால் பாபபலத்தை கொடுக்கமாட்டார்கள். சுப பலத்தையே கொடுப்பார்கள் என்பது. உத்தரோத்தரம் என்பதன் அர்த்தமாவது கேந்திரங்களில் லக்ன கேந்திராதிபதியைவிட சதுர்த்த (4வது) கேந்திராதிபதி அதிக பாப பலத்தைக் கொடுப்பாள் (ர்) ஸப்தம (7-வது) கேந்திராதிபதியைவிட தசம (10-வது) கேந்திராதிபதி அதிக பாப பலனைக் கொடுப்பாள் (ர்). த்ரிகோணங்களில் பஞ்சம (5-வது) த்ரிகோணாதிபதியைவிட நவம (9-வது) த்ரிகோணாதிபதி அதிக சுப பலத்தைக் கொடுப்பாள் (ர்). மூணா (மூன்றா)மிடத்தானைவிட 6 ஆமிடத்தான் அதிக பாப பலத்தைக் கொடுப்பான். இந்த 6 ஆமிடத்தானை விட பதினோராமிடத்தான் அதிக பாப பலத்தைக் கொடுப்பான் (ர்). ஆக இப்படி அறிவது—

(வி-ரை) இவ்வுரையின் ஆரம்பத்தில் 'சௌம்ய (சுப) கிரஹங்களான புதன், குரு, சுக்ர, சந்திரர்கள்' என்று பொதுவாக நான்கு கிரஹங்கள் குறிப்பிடப்பட்டு அவை சௌம்ய (சுப) கிரஹங்களெனக் கூறப்பட்டபோதிலும் அவர்கள் நால்வருள் குருவும், சுக்ரனுமே நைஸர்கிக (Natural) சுபகிரஹங்கள். புதன் பாப கிரஹங்களுடன் சேரா திருந்தால்தான் சுபனாவான். இதுபோல் தேய்பிறை (கிருஷ்ணபக்ஷ) சந்திரன் பாபியானதால் வளர்பிறைச் சந்திரன் என்று பொருள் கொள்ளவேண்டும். எனவே அங்கு பாபிகளுடன் சேராத புதன், வளர்பிறைச் சந்திரன் என்று பொருள் கொள்ளவேண்டும்.

இங்கு சந்தர்ப்பத்தை அனுசரித்துக் கூறவேண்டியது ஒன்று உண்டு. மேஷம் முதல் மீனம் ஈறாகவுள்ள பன்னிரண்டு ராசிகளில் மேஷம் சரராசி என்றும், ரிஷபம் ஸ்திரராசி என்றும், மிதுனம் உபயராசி என்றும், கடகம் சரராசி என்றும், சிம்மம் ஸ்திரராசி என்றும், கன்னி உபய ராசி என்றும் சொல்லப்படும். இவ்வாறே துலாம் முதல் மீனம் ஈறாகவுள்ள ராசிகளையும் சரம்-ஸ்திரம்-உபயம் என்று பார்த்தறியவும்.

மேஷம் சரராசியாவதால் அது லக்னமாகில் அதில் இருந்து 11-ம் இடம் பாதகஸ்தானம் என்றும், அதன் அதிபதி பாதகாதிபதியென்றும் சொல்லப்படும். ரிஷபம் ஸ்திர ராசியாவதால் அதிலிருந்து 9-ம் இடம் பாதக ஸ்தானம் என்றும், அந்த இடத்தின் அதிபதி பாதகாதிபதி என்றும் சொல்லப்படும். உபய ராசி லக்னமாகில் அதில் இருந்து 7-ஆமிடம் பாதகஸ்தானம் என்றும் சொல்லப்படும். பக்கத்தில் உள்ள அட்டவணை எந்தெந்த ராசிக்கு எந்த எந்த இடம் பாதக ஸ்தானம் என்பதையும், எந்த எந்த கிரஹம் பாதகாதிபதி என்பதையும் கூறுகிறது.

பொதுவாக பாதகாதிபதிகள் அதிகம் பாப பலனையே தருவார்கள். நைஸர்கிக (Natural) சுபர்க ளாக இருந்தாலும் பாதகாதிபத்யம் பெற்றவராயின் அசுப பலனையே அளிப்பார். மேலும் பாதக ஸ்தானத்தில் எந்த பாவாதிபதி இருந்தாலும் அந்த பாவம் கெட்டு விடுகிறது. இதுபோல் பாதகாதிபதி எந்த பாவத்தில் இருந்தாலும் அந்த பாவத்திற்கு நன்மை செய்கிறதில்லை. தீமையையே செய்கிறார். இக்கருத்தைப் பலர் அங்கீகரிப்ப தில்லையாயினும் அனுபவம் இக்கருத்தை ஏற்கும்படி வற்புறுத்துவதால் கூறப்பட்டது. ஸ்திர லக்னத்திற்கு 9 ம் இடம் பாக்யஸ்தானமாவதால் அந்த ஸ்தானமோ ஸ்தானாதிபதியோ பாதகம் செய்கிறதில்லை என்பது அறிஞர்கள் கருத்து.

## பாதக ஸ்தானங்கள் — பாதகாதிபதிகளைக் காட்டும் அட்டவணை.

| ராசி லக்னம் | சரராசி | | ராசி லக்னம் | ஸ்திர ராசி | | ராசி லக்னம் | உபய ராசி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | பாதக ஸ்தானம் | பாதகாதி-பதி | | பாதக ஸ்தானம் | பாதகாதி-பதி | | பாதக ஸ்தானம் | பாதகாதி-பதி |
| மேஷம் | கும்பம் | சனி | ரிஷபம் | மகரம் | சனி | மிதுன | தனுஸ் | குரு |
| கடகம் | ரிஷபம் | சுக்ரன் | சிம்மம் | மேஷம் | செவ்வா | கன்னி | மீனம் | குரு |
| துலாம் | சிம்மம் | சூரியன் | விருச்சிக | கடகம் | சந்திரன் | தனுஸ் | மிதுனம | புதன் |
| மகரம் | விருச்சிக | செவ் | கும்பம் | துலாம் | சுக்ரன் | மீனம் | கன்னி | புதன் |

உதாரணமாக கடக ராசி லக்னமாகில் அந்த லக்னத்திற்கு 11ம் இடமான ரிஷபம் பாதகஸ்தானமாகும். அதன் அதிபதி சுக்ரன் பாதகாதிபதியாகிறார். கடக லக்னத்திற்கு 7 ஆமிடமான களத்ரஸ்தானமான மகரத்தில் சுக்ரன் இருந்தாலும் சரி, 7 ஆமிடத்ததிபதியான சனி ரிஷபத்தில் இருந்தாலும் சரி, இந்த கடக லக்ன ஜாதகருக்கு திருமணம் நடைபெறுவதில் அளவு கடந்த தாமதம் ஏற்படவே செய்கிறது. இதேபோல் விருச்சிக லக்ன ஜாதகருக்கு 7 ஆமிடத்தில் ரிஷபத்தில் சந்திரன் இருப்பின், அவர் அங்கு உச்சம் பெற்றதால் பாக்ய விருத்தியைச் செய்யத் தடையில்லையென்றாலும் களத்ரபாவம் அமைவதில் அளவுகடந்த தாமதம் ஏற்படவே செய்கிறது என்பது அனுபவம் கூறும் உண்மை.

ஶ்லோ. लग्नाद्व्ययद्वितीयेशौ परेषां साहचर्यतः ।
स्थानान्तरानुगुण्येन भवतः फलदायकौ ॥ ७

सं. व्या. : लग्नाद्व्यय इति ॥ लग्नाज्जन्मलग्नापेक्षया व्यय-द्वितीयेशौ परेषां तत्तच्छुभाशुभभावेशानां साहचर्यतः सम्बन्धेन स्वकीयशुभाशुभ राश्यन्तराधिपत्य, स्थित्यनुरूपेण फलदायकौ शुभाशुभफलदायिनौ भवतः । एवं च महान्तरसम्बन्धस्य च राश्यन्तरस्थितेश्च स्वकीयराश्यन्तरभावे तदुक्तप्राधान्येन फल-दायकत्वमूह्यम् ॥

(தா·ம்) ஜன்ம லக்னத்து(திற்)கு 2 ஆமிடத்தானும் (அதிபனும்) 12 ஆமிடத்தானும் (அதிபனும்) தன்னுடன் கூடின முன்சொன்ன சுபாசுப பாவாதிபதியினுடைய ஸம்பந்தத்தினால் உண்டான பலனும் அவர்கள் இருந்த ஸ்தானபாவ பலனும் கொடுப்பார்கள். இதுவே ராகு கேதுகளுக்கும் வழி.

(வி-ரை) ஜன்ம லக்னத்திற்கு 2ஆமிடம், 12ஆமிடம் இவற்றிற்கு அதிபதிகள் சுபாசுப பாவாதிபதிகளின் சம்பந்தத்தை அனுசரித்து சுப-அசுப-பலன்களை அளிக்கிறார்கள். இவ்விதமே சுப-அசுப பாவாதிபதிகளுடன் சேர்ந்திருத்தல் சுபாசுப பாவாதிபதிகளின் பார்வை பெறுதல் முதலான காரணமாகவும் தமக்கு உரிய வேறு பாவாதிபத்யத்திற்கேற்ற விதத்திலும் சுப பலன்களையோ, அசுப பலன்களையோ தருகிறார்கள்.

ஜன்ம லக்னத்திற்கு அசுப பலன்களை தரக்கூடிய பாவங்களான 3—6—11 ஆமிடங்களின் அதிபதிகளின் அஷ்டமஸ்தானமும் துஸ்ஸ்தானமானபடியால் 8ம் பாவமும் பாவாதிபதியும் அசுப பலன் தருவதாகவே கருதலாம் என்பதால் 8ஆமிடத்தின் அதிபதி என்றும் பொருள் கொள்ளலாம்.

ஜன்ம லக்னத்திற்கு 2ஆடம் 12ஆமிடம் இவற்றிற்கு அதிபதிகளான கிரஹங்கள் 3, 6, 8, 11 ஆகிய ஸ்தானங்களின் அதிபதிகளான கிரஹங்களோடு சேர்ந்திருத்தல் மேற்படி கிரஹங்களின் பார்வை பெறுதல் கேந்திர த்ரிகோணங்களில் இருத்தல் ஆகிய காரணங்களை யனுசரித்து அசுப பலன்களை அளிப்பர். இதுபோலவே மேற்படி 2/12ம் இடங்களின் அதிபதிகள் சுபஸ்தானாதிபதிகளின் (மேற்கூறிய 3, 6, 8, 11மிடம் தவிர்த்த 1, 2, 4, 5, 7, 9, 10 ஆகிய இடங்களின் என்று பொருள்கொள்ளலாம்) சம்பந்தம்-சேர்க்கை-பார்வை-கேந்திர திரிகோணங்களில் இருப்பது ஆகிய காரணங்களை அனுசரித்து சுபபலன்களையும் அளிப்பர். இதுபோலவே இந்த 2, 12ஆம் இடத்தின் அதிபதிகளுக்கு வேறு ஸ்தானாதிபத்யம் இருந்தால் அதனுடைய சுப-அசுபத் தன்மைக்கேற்ப சுப பலனையோ அசுப பலனையோ தரக்கூடும்.

ஶ்லோ. भ्रात्र्यव्ययाधिपत्वेन रन्ध्रेशो न शुभप्रदः ।

स एव शुभसन्धा(दा)ता लग्नाधीशोऽपि चेत्स्वयम् ॥ ८

सं. व्या. : भाग्येति ॥ रन्ध्रेशः अष्टमाधिपतिः भाग्यव्ययाधिपत्वेन नवमापेक्षया अष्टमस्य तद्व्ययस्थानत्वात्तदधिपतिना तस्य भाग्यव्ययनाशकत्वमेवेत्यर्थः । स एवाष्टमाधिपतिरेव (यदि) लग्नाधीशोऽपिचेत्तदा शुभफलस्य दा(दा)ता भवति । एकस्यैव ग्रहस्य लग्नाधिपत्वरन्ध्राधिपत्वाभ्यां भवितव्यम् । एवं च केवलाशुभप्रदो न भवति अष्टमाधिप इव पापो न भवतीति भावः ॥

(தா-ம்) அஷ்டமாதிபதியானவன் பாக்யஸ்தானத்திற்கு வ்யயாதிபதியானபடியால் சுப பலத்தைக்கு(கொ)டுக்கமாட்டான்(ர்) அவனு(ரு)க்கு லக்னாதிபதித்வம் கிடைத்திருந்தால் சுப பலத்தைக்கு(கொ)டுப்பான் என்பது

இந்த ச்லோகம் மேஷ லக்னம் துலா லக்னம் இவ்விரண்டிற்கும் மட்டும் தொடர்புள்ளதாகும் 9மிடம் பாக்யஸ்தானமெனப்படும். 9ஆமிடத்திற்கு 12ஆமிடமாக (விரய ஸ்தானமாக) அமைவது எட்டாமிடம். எனவே எட்டாமிடம் என்பது பாக்யஸ்தானத்திற்கு விரய ஸ்தானமாகிறது. ஆகையால் பாக்ய வ்யய ஸ்தானத்திற்கு அதிபதியான கிரஹம் 8 ஆமிடத்தின் அதிபதி சுபகிரஹமாகிறதில்லை, எனவே சுப பலனையும் தருவதில்லை. ஆனால் இதே அஷ்டமாதிபதித்வம் உள்ள கிரஹம் லக்னாதிபதியாகவும் இருக்கிற நிலையில் அமையுமானால் அப்பொழுது தாம் அஷ்டமாதிபதி எனும் காரணத்தால் கொடுக்கவேண்டிய அசுப பலனைத் தருகிறதில்லை. அதற்காக அஷ்டமாதிபதித்வம் பெற்ற கிரஹம் லக்னாதிபதித்வமும் பெற்றிருக்கும் காரணத்தால் கேவல சுப பலனையும் கொடுத்துவிடுகிறதில்லை. கேவல அஷ்டமாதிபதித்வம் பெற்ற கிரஹம் போன்று பாபியாக இருக்கிறதில்லை. சுபபலனையும் கொடுக்கிறதில்லை. அசுப பலனையும் கொடுக்கிறதில்லை என்பது கருத்து.

श्लो. केन्द्राधिपत्यदोषस्तु बलवान् गुरुशुक्रयोः ।
मारकत्वेऽपि च तयोर्मारकस्थानसंस्थितिः ॥ ९

सं. व्या. : अथ त्रिभिः श्लोकैर्ग्रहानुद्दिश्य सौम्यकेन्द्रत्व क्रूरकेन्द्रत्व-
लग्नरन्ध्राधिपत्वप्रयुक्तगुणदोषा विविच्यते । केन्द्राधि-
पतित्वप्रयुक्तदोषो गुरुशुक्रयोस्तु बलवान् । तु शब्दो
वैषम्यद्योतकः । गुरुशुक्रौ केन्द्राधिपती चेदत्यन्तमशुभ-
प्रदावित्यर्थः । तयोः केन्द्राधिपत्यादिदोषयुक्तयोर्गुरु-
शुक्रयोः मारकस्थानसंस्थितिः — द्वितीयसप्तमावस्थितिः
मारकत्वविषये बलवती । एवं च द्वितीयसप्तमाधिपत्या-
पेक्षया तत्र स्थितावेव विशेषमारकावित्यर्थः । अयं
मारकत्वदोषस्तयोः केन्द्राधिपत्यादिदोषप्रसङ्गादुक्तः ।
द्वितीयसप्तमयोर्मारकस्थानत्वलक्षणमुत्तरत्र वक्ष्यति (ते) ॥

(தா-ம்) குரு, சுக்ராளுக்கு கேந்திராதிபத்யம் கிடைத்திருந்தால் பலமான தோஷம். அவர்களுக்கு கேந்திராதிபத்வமுண்டாகி அவர்கள் மாரக ஸ்தானத்தில் (2, 7ல்) இருந்தால் ஸந்தேஹமில்லாமல் மாரகம் செய்வார்.

(வி-ரை) நைஸர்கிக (Natural) சுப கிரஹங்களான குருவும், சுக்ரனும் கேந்த்ரங்களுக்கு அதிபதிகளாக இருப்பாராகில் அது (கேந்த்ராதிபத்ய தோஷம்) அவ்விருவர்களுக்கும் கடுமையான தோஷத்தைக் கொடுத்து, பாபிகளாக்கிவிடுகிறது. இந்த கேந்த்ராதிபத்யதோஷம் என்பது குருவுக்கும், சுக்ரனுக்குமே அதிக அசுபத்தன்மைக்குக் காரணமாவதால் அவ்விருவரும் அதிக தோஷத்தைத் தருகிறவர்களாகிறார்கள். மேற்படி கேந்திராதிபத்யம் பெற்ற குருவும், சுக்ரனும் மாரக ஸ்தானத்தில் (அதாவது 2 ஆமிடம், 7 ஆமிடத்தில்) இருந்தால் கேந்த்ராதிபத்யத்தால்

செய்யக்கூடிய தோஷத்தைவிடவும் அதிக தீமையை "மாரகத்தை"ச் செய்கிறவர்களாகிறார்கள். இங்கு ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தில் "2ஆமிடமும், 7ஆமிடமும் மாரக ஸ்தானங்கள்" எனக்கூறப்பட்டதை அனுசரித்து மேலே கூறப்பட்ட 2மிடம், 7மிடம் தவிரவும்; 3ஆமிடமும், 8ஆமிடமும்கூட மாரக ஸ்தானங்களாகின்றன என்பது இந்நூலில் பிற்பாடு சொல்லப்படவிருக்கிறது.

இந்த ச்லோகத்தைக் கூர்ந்து ஆராய்ந்தால் குரு, சுக்ரர்கள் கேந்திராதிபதிகளாக இருப்பினும்—இல்லாதிருப்பினும் அவ்விருவரும் ஏதேனும் ஒரு ஜாதகத்தில் லக்னத்திற்கு 2-லோ, 7-லோ இருக்க நேரிட்டால் அவர்களுடைய தசாபுக்தி காலங்களில் விசேஷ மாரகத்தைச் செய்வர் என்றும் பொருள்கொள்ளமுடிகிறது. மேலும் குரு, சுக்ரர்கள் விஷயத்தில் 7மிடமானது கேந்திரமாகவும் அமைந்து அதிலேயே குரு—சுக்ரர்கள் இருக்க நேரிடின் அவர்கள் மிகக் கடுமையான அசுபத்தை (மாரகத்தைச்) செய்கிறவர்களாகிறார்கள் எனவும் கருத்து கொள்ள இடமிருக்கிறது. மாரக ஸ்தானங்களில் 7மிடம் அதிக வலுவுள்ளதாக ஆகும் என்றும் பொருள்கொள்ள முடிகிறது.

ஶ்லோ. बुधस्तदनु चन्द्रोऽपि भवेत्तदनु तद्विधः ।
न रन्ध्रेशत्वदोषस्तु सूर्याचन्द्रमसोर्भवेत् ॥ १०

सं. व्या. : बुधइति—तदनु तदनन्तरं बुधस्तद्विधः । तदनु चन्द्रस्तद्विधः । पूर्वोक्तविषये गुरुशुक्रापेक्षया बुधदोषस्य किञ्चिद्दौर्बल्यमस्तीति भावः । बुधापेक्षया चन्द्रस्य दोषः (दोषे) किञ्चिद्दौर्बल्यमस्तीति भावः ।

न रन्ध्रेति — अष्टमाधिपतित्वप्रयुक्तदोषः सूर्याचन्द्रमसोर्न भवति । इतरेषां तदधिपतीनामिव तयोर्दोषावहत्वं नास्तीत्यर्थः ।

(தா-ம்) முன்சொன்ன கேந்த்ராதிபத்ய தோஷம் குரு-சுக்ரனைவிட புதனுக்குக் கொஞ்ச (ம் குறைவான) தோஷமுண்டு. முன்சொன்ன அஷ்டமாதிபதித்வ தோஷம் ஸூர்ய சந்திரானுக்கு இல்லை.

(வி-ரை) குரு-சுக்ரானுக்கு உள்ள கேந்திராதிபத்ய தோஷத்தைவிட புதன் கேந்திராதிபதியாக இருந்தால் அவருக்கு (புதனுக்கு) உள்ள தோஷம் குரு சுக்ரர்களின் தோஷத்தைவிடக் குறைவானதாம். எனவே புதன் கேந்திராதிபதியாக கேந்திரத்திலேயே இருந்தால் குரு-சுக்ரர்கள் போலன்றி சற்று குறைந்த அளவு தீமையைச் செய்கிறார் என்பது பொருள். இதுபோன்று சந்திரன் கேந்திராதிபதியாக இருப்பின் அவனால் ஏற்படும் அசுப பலன் புதன் கொடுக்கும் தீமையை விட மேலும் சற்று குறைவாகவே இருக்கும் என்பது பொருள்.

ஸூரியன்-சந்திரன் இவ்விருவரும் அஷ்டமாதிபதியாக இருக்க நேரிட்டால் அது அவர்களுக்கு தோஷமாவதில்லை. "அஷ்டமாதிபத்யம்" எனும் தோஷம் உள்ள செவ்வாய் முதலான பிற கிரஹங்கள் எவ்வளவு தீமைகளைச் செய்யுமோ அந்த அளவு தீமையை அஷ்டமாதிபத்யமுள்ள ஸூர்யனும் சந்திரனும் செய்யமாட்டார்கள். இது முறையே மகர-தனுர் லக்னங்கள் விஷயத்தில் பொருந்தும்.

ஶ்லோ. कुजस्य कर्मनेतृत्वप्रयुक्तशुभकारिता ।
त्रिकोणस्यापि नेतृत्वे न कर्मेशत्वमात्रतः ॥ ११

सं. व्या. : कुजस्येति— कुजस्य क्रूरत्वाद्दशमकेन्द्राधिपतित्वप्रयुक्तशुभकारित्वं त्रिकोणस्यापि नेतृत्वे सत्येव भवति, न केवलं कर्मेशत्वमात्रेण भवति ॥

(தா-ம்) அங்காரகனுக்கு பஞ்சமாதிபத்யம் (5 ஆமிட ஆதிபத்யம்) கிடைத்திருந்தால் தசமாதிபத்யம் சுபம். பஞ்சமாதிபத்யம் (5 ஆமிட ஆதிபத்யம்) கிடைக்கா திருந்தால் தசமாதிபத்தியத்தினால் அசுபபலனுண்டு.

(வி-ரை) பாப கிரஹமான செவ்வாய் கர்மஸ்தான மெனப்படும் 10-ஆம் இடத்திற்கு (தசம கேந்திரத்திற்கு) ஆதிபத்யம் பெறுவாராகில், முன்பு கூறப்பட்டுள்ள 6-வது சுலோகத்தின்படி சுபபலன் தருபவராக ஆகவேண்டும். ஆனால் அது பொது விதியாகக் கூறப்பட்டதாகும். இவ் விடத்தில் விசேஷ விதியாகக் கூறப்படுவதாவது — செவ்வாய் கர்மாதிபத்யம் (10 ஆமிடத்தின் ஆதிபத்யம்) மட்டும் பெறுவாராகில் சுபபலன் தருகிறதில்லை. அவர் கர்மாதிபத்யம் பெற்றிருப்பதுடன் ஒரு த்ரிகோணத்திற்கும் அதிபதியாக இருப்பாராகில் அப்பொழுதுதான் சுப பலன் களை அளிப்பவராகிறார். அவர் தசம கேந்திராதிபதி யாக இருக்கிற காரணத்தாலேயே, சுப பலன் தருபவராக ஆகிறதில்லை. உதாரணமாக, கும்ப லக்னத்திற்கு செவ்வாய் 3, 10 ஆகிய இரு இடங்களுக்கு அதிபதி. இந்த லக்ன விஷயத்தில் செவ்வாய் 10 ஆமிடத்தின் (கேந்தி ரத்தின்) ஆதிபத்யம் பெற்று த்ரிகோணம் எதற்கும் அதிபதியாக இல்லாமலிருப்பதால் சுபபலன்கள் தருகிற தில்லையென்பதுடன். 3 ஆமிடத்தின் அதிபதி என்பதால் தீய பலன்களைத் தருபவராகிறார். கடக லக்ன விஷயத் திலோ, மேற்படி செவ்வாய் 5 ஆமிடத்திற்கும் (த்ரிகோணத் திற்கும்) 10 ஆமிடத்திற்கும், (கேந்திரத்திற்கும்) அதிபதி யாகும் காரணத்தால் சுபபலனை அளிக்கிறார். இதே போல் சிம்ம லக்ன விஷயத்தில் 3க்கும், 10க்கும் உடைய சுக்ரன் சுப பலனைத் தருவதில்லை.

குரு பகவான் மிதுன லக்னத்திற்கு 7 ஆமிடம் 10 ஆமிடம் ஆகிய இரு கேந்திரங்களுக்கு அதிபதி என்பதால் அவர் எந்த பாவத்திலிருந்தாலும், அந்த பாவத்திற்குத் தீமை செய்கிறவராகிறார். இதேபோல்

கன்யா லக்னத்திற்கு குருபகவான் 4-ஆமிடம், 7-ஆமிடம் ஆகிய இரு கேந்திரங்களுக்கும் அதிபதியாகிற காரணத்தால் அவர் சுபபலன் தருகிறதில்லையென்பதுடன் அவர் எந்த பாவத்திலிருந்தாலும், அந்த பாவ பலனை அளிக்கத் தடையாக இருப்பார் என்று ஆகிறது. மேலே கூறிய கேந்திராதிபத்ய தோஷப் பெற்ற குரு, ஸப்தம கேந்திரத்திலேயே இருந்துவிட்டால் விசேஷ மாரகத்தையே செய்யக் கூடியவர். இவ்விதமே, மேஷ—விருச்சிக லக்ன விஷயத்தில் சுக்ரன் ஸப்தம கேந்திராதிபதியாவதால் சுப பலன் தருவது இல்லை. அவர் எந்த பாவத்தில் இருந்தாலுமே, அந்த பாவத்தின் பலனை அளிக்கிறதில்லை. இந்த சுக்ரன் ஸப்தம கேந்திரத்திலும் இருந்துவிட்டால் மாரகத்தைச் செய்கிறார்.

குரு-சுக்ரர்களுக்கு அடுத்தபடியாக புதன் கேந்திராதிபதியாக இருப்பாராகில் (தனுஸ்-மீன லக்னங்களுக்குப் பொருந்தும்) சுப பலனைத் தருகிறதில்லை. ஆனால் குரு-சுக்ரர்கள்போல அவ்வளவு அதிக தீய பலன் தராமல் சற்று குறைவான பலனையே அளிப்பார். இதேபோல் சந்திரன் கேந்திராதிபதியாக இருக்கநேரிட்டால் (மகர லக்னத்திற்கு பொருந்தும்) அசுப பலனையே அளிப்பார் என்றும், தீய பலன்களை அளிக்கிற விஷயத்தில் புதனுக்கும் அடுத்தபடியாகவேதான் சந்திரன் இருப்பார்.

ஸ்லோ. यद्यद्भावगतौ वापि यद्यद्भावेशसंयुतौ ।
तत्तत्फलानि प्रबलौ प्रदिशेतां तमोग्रहौ ॥

सं. व्या. यद्यदिति — राहुकेत्वोः स्वस्थानाभावात्तयोः किं फलदातृत्वमित्याकाङ्क्षायामाह यद्यद्भावगतौः — यस्मिन्यस्मिन्भावे स्थितौ यद्यद्भावेशसंयुतौ यैर्यैर्भावेशैः संयुक्तौ संयुतौ वीक्षितौ वापि । अत्र वीक्षणरूपसंयोगोऽप्यवगम्यते । तमोग्रहौ राहुकेतु

तत्तत्फलानि स्वकीयस्थानभूतभावेशा यानि फलानि । स्वस्व-सम्बन्धिनो ग्रहा यानि फलानि प्रदिशन्ति तान्येव तेभ्यःप्रबलौ सन्तौ प्रदिशेताम् । स्वस्वसम्बन्धिनो ग्रहा एव बहवः सन्ति(चेत्) तेषु च प्रबलस्यैव फलं प्रदिशतः ॥

(தா-ம்) ராகு-கேதுக்கள் இருவரும் எந்த பாவத்தில் இருந்தார்களோ (இருக்கிறார்களோ) அந்த பாவ பலனும், எந்த பாவாதிபதிகளுடன் கூடினார்களோ அந்த பாவ பலனும் கொடுப்பார்கள்.

(வி-ரை) ராகு—கேது இருவரும் சாயா கிரஹங்கள். அவர்களுக்குத் தமக்கென்று வீடு எதுவுமில்லை. அவர்கள் எவ்வாறு பலனைக் கொடுக்கிறார்கள் என்னும் விஷயத்தினை எப்படி நாம் அறிவது என்றால் — ராகு, கேதுக்கள் எந்தெந்த பாவத்தை அடைந்திருக்கிறார்களோ அல்லது எந்த எந்த பாவாதிபதிகளுடன் சம்பந்தப்பட்டவர்களாக இருக்கிறார்களோ அந்த அந்த பாவ பலன்களை சம்பந்தப் பட்ட பாவாதிபதிகளைக் காட்டிலும் பலம் மிக்கவர்களாக மாறி கொடுக்கிறார்கள்.

ராகு — கேதுக்களுக்கு எந்த ஸ்தான (ராசி) ஆதிபத்யமும் இல்லாவிட்டாலும் அவர்கள் லக்னம் முதற் கொண்டு உள்ள எந்த எந்த பாவாதிபதிகளுடன் சேர்ந்து இருக்கிறார்களோ அல்லது பாவாதிபதிகளால் பார்க்கப் படுகிறார்களோ அந்தந்த பாவாதிபதிகள் என்ன பலனைத் தருவாரோ அந்தப் பலனைவிட அதிகப் பலனை (அந்த பாவாதிபதிகளைவிட அதிக வலிமை பெற்றவர்களாக ஆகிக்) கொடுக்கிறார்கள்.

ராகு-கேதுக்களுடன் கூடிய அல்லது ராகு-கேதுக் களைப் பார்க்கும் கிரஹங்கள் பல இருப்பின் அந்த கிரஹங் களுள் எந்த கிரஹம் வலிமை வாய்ந்ததோ அந்த கிரஹத் தின் மூலம் ஏற்படக்கூடிய பலன்களை அவ்விரு கிரஹங் களும் கொடுக்கிறார்கள்.

श्लो. केन्द्रत्रिकोणपतयः सम्बन्धेन परस्परम् ।
इतरैरप्रसक्ताश्चेद्विशेषफलदायकाः ॥ १३

सं. व्या.: केन्द्रेति — केन्द्रत्रिकोणपतयः केन्द्रपतयः त्रिकोणपतयश्च परस्परमन्योन्यं सहावस्थानपरस्परवीक्षणान्यतरवीक्षणलक्षणेन सम्बन्धेन । परस्परसम्बन्धो नाम केन्द्राधिपतीनां त्रिकोणाधिपैः सम्बन्धः इत्यर्थः । इतरैः तृतीयषष्ठैकादशाष्टमाधिपैः अप्रसक्ताश्चेत् असम्बन्धा(द्धा)श्चेद्विशेषेण शुभफलप्रदायका भवन्ति । तेषु केषाञ्चित्स्थानमहिम्ना सामान्यतः शुभदायकत्वे सत्यपि परस्परसम्बन्धाद्विशिष्य फलदायकत्वमस्तीति भावः । इतरैरप्रसक्ताश्चेदित्यनेन स्वकीयभावान्तरदोषोऽप्यवगम्यते । तथा च तद्रहिताश्चेदित्यर्थः । प्रसक्तौ चेत् तादृशफलाधिक्यप्रदा न भवन्तीति भावः ॥

(தா-ம்) கேந்திராதிபதிகளுக்கு (1-4-7-10 மிடத்தின் அதிபதிகளுக்கு) த்ரிகோணாதிபதிகளுடைய ஸம்பந்தம் உண்டாயிருந்தால் சுப பலத்தைக் (கொ)டுப்பார்கள்). ஷஷ்டாஷ்டம, லாபாதிபதி (6-8-11மிடத்தின் அதிபதி (களின்)களுடைய ஸம்பந்தம் இல்லாதிருந்தால் அதிகமான சுப பலத்தைக் கொடுப்பார்கள் என்பது.

(வி-ரை) கேந்திராதிபதிகளான 1–4–7–10 ஆமிடத்தின் அதிபதிகள் 5—9 ஆமிடத்தின் அதிபதிகளான த்ரிகோணாதிபதிகளுடன் சேர்ந்து ஒரே ராசியில் இருப்பது அல்லது ஒருவரை ஒருவர் பார்ப்பது அல்லது யாரேனும் ஒருவரால் மட்டும் பார்க்கப்படுவது எனும் இந்த வகையிலான சம்பந்தப்பட்டு, 6-8-12க்கு உடைய கிரஹங்களின் மேலே கூறப்பட்ட சம்பந்தங்களில் ஏதேனும் ஒரு

சம்பந்தமும் இல்லாதவர்களாக இருப்பாரேயாகில் விசேஷமான நற்பலன்களை அளிப்பர். தமிழ் உரையில் சொல்லப்படாவிட்டாலும் ஸம்ஸ்க்ருத வியாக்யானத்தில் 6-8-11மிடத்தின் அதிபர்களுடன் 3 ஆமிடத்தின் அதிபதியின் சம்பந்தமும் இருக்கலாகாது என்று குறிப்பிட்டிருப்பதாலும், 3 ஆமிடத்தின் அதிபதியும் "पतपस्विवकायानां" என்றவாறு அசுபராவதாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் அவருடைய சம்பந்தமும் இருக்கலாகாது என்றே கொள்ள வேண்டும். 3-6-8-11 ஆமிடத்தின் அதிபதிகளின் சம்பந்தம் இல்லாதிருந்து, கேந்திர-த்ரிகோணாதிபதிகளுக்கு மேலே கூறப்பட்டவாறு சம்பந்தம் ஏற்படுமானால் அவர்கள் சுப பலனையே தருவார்கள்.

இங்கு ஒரு விஷயத்தைக் கவனித்தல் வேண்டும். கேந்திரத்ரிகோணாதிபதிகள் 3-6-8-11 மிடத்தின் அதிபதிகளின் சம்பந்தம் இல்லாதவர்களாக இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அத்துடன் கேந்திராதிபதியாகவோ, த்ரிகோணாதிபதியாகவோ ஆகிற கிரஹம் தோஷ யுக்தமான வேறு பாவங்களுக்கு அதிபதியாக இல்லாதிருத்தலும் அவசியம். எனவே 3-6-8-11ம் இடத்தின் அதிபதிகளின் சம்பந்தமில்லாமல் இருந்து, ஆனால் தோஷயுக்தமான பாவங்களுக்கு அதிபதியாக இருந்து கேந்திர அல்லது த்ரிகோணாதிபதியாக உள்ள கிரஹங்களுக்குள் முன்கூறியவாறு சம்பந்தம் ஏற்படுமாகில் யோக பலன் இல்லாமல் போகாது—ஆனால் விசேஷ பலன் இல்லையென்று பொருள் கொள்ளவேண்டும். 3-6-8-11 ஆமிடத்தின் அதிபதிகளின் சம்பந்தமில்லாதிருந்து, தோஷமுள்ள வேறு பாவத்திற்கும் அதிபதியாக இல்லாமலிருந்து கேந்திர — த்ரிகோணாதிபதிகள் ஏதோ ஒருவகையில் சேர்ந்து ஒரே ராசியில் இருப்பது / ஒருவரை ஒருவர் பார்ப்பது / ஒருவர் இடத்தில் மற்றவர் மாறி இருப்பது எனும் சம்பந்தம் பெறுவாராகில் விசேஷ சுபபலன் உண்டு. கேந்திர — த்ரிகோணாதிபதிகள் இயற்கையாகவே சுப

பலனை அளிப்பவராயிருந்தாலும், மேலே கூறப்பட்டவாறு சம்பந்தமும் ஏற்படுமாகில் விசேஷ சுப பலன்களை அளிப்பார்.

3-6-8-11-12 ஆமிடத்தின் சம்பந்தம் பெறாத கேந்திர–த்ரிகோணாதிபதிகள் பற்றிய விபரம், 12 ஆமிடமும் வ்யய ஸ்தானமென்பதால் (துஸ்ஸ்தானமாகக் கொள்ளவேண்டும் என்பதால்) 12 ஆமிடமும் இங்கே சேர்க்கப்பட்டது.

| ராசிகள் | 3-6-8-11-12 ஆமிடத்தின் சம்பந்தமில்லாத கேந்திர — த்ரிகோணாதிபதிகள் |
|---|---|
| மேஷம் | சூரியனும், சந்திரனும் |
| ரிஷபம் | சூரியனும், சனியும் |
| மிதுனம் | சுக்ரன் வியயாதிபதியாவதால் த்ரிகோணாதிபதியாகக் கொள்ளமுடியவில்லை. சிலர் புதனும், சிலர் சுக்ரனும் என்பர். |
| கடகம் | சந்திரனும், செவ்வாயும் |
| ஸிம்மம் | சூரியனும்' செவ்வாயும் |
| கன்னி | குருவும், சுக்ரனும் (குரு 3-6-11-12க்கு உடையவரல்லவானாலும் கேந்திராதிபத்ய தோஷம் உள்ளவரே. |
| துலாம் | சனியும், செவ்வாயும் |
| விருச்சிகம் | குருவும், சூரியனும் |
| தனுஸ் | குருவும், சூரியனும் |
| மகரம் | சனியும், சுக்ரனும் |
| கும்பம் | சூரியனும், சுக்ரனும் |
| மீனம் | குருவும், செவ்வாயும் |

श्लो. केन्द्रत्रिकोणनेतारौ दोषयुक्तावपि स्वयम् ।
सम्बन्धमात्रात्प्रबलौ भवेतां योगकारकौ ॥ १४

सं व्या. : सप्तभिः श्लोकैः राजयोगा उच्यन्ते —
केन्द्रेतिः — बलिनौ केन्द्रत्रिकोणनेतारौ "प्रबला उत्तरोत्तर"-मिति पूर्वमुक्तत्वाद्धर्मकर्माधिपौ । तयोः स्थानयोः सर्वोत्तरत्वात् । स्वयं दोषयुक्तावपि सम्बन्धमात्रात् सहावस्थानादिसम्बन्धमात्रात् योगकारकौ राजयोगप्रदौ भवेताम् ॥

(தா-ம்) இதுமுதல் ஏழு ச்லோகங்களால் ராஜயோகம் சொல்லுகிறோம். கேந்த்ர-த்ரிகோணாதிபதிகள் ஷஷ்ட-அஷ்டம வியயாதிபதிகளுடன் (6-8-12 ஆமிடங்களின் அதிபதிகளுடன்) கூடியிருந்தாலும், தர்மகர்மாதிபதிகளின் (9-10 ஆமிடங்களின் அதிபதிகளின்) சம்பந்தம் இருந்தால் ராஜயோகம் கொடுப்பார்கள்.

(வி-ரை) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேஷம் முதல் மீனம் வரையிலான லக்னங்களுக்கு 3-6-8-11-12 ஆமிடங்களின் அதிபதிகளின் சம்பந்தம் இல்லாத மேற்படி கேந்திர-த்ரிகோணாதிபதிகள் ஒரே ராசியில் சேர்ந்து இருந்தாலோ அல்லது ஒருவரை ஒருவர் பார்த்தாலோ அல்லது யாரேனும் ஒருவர் மற்றவரைப் பார்த்தாலோ விசேஷ சுபபலன்களை அளிப்பர்.

प्रबला उत्तरोत्तरम् என்று முன்பு கூறப்பட்டுள்ளது இங்கும் மேற்கொள்ளப்படுகிறது. கேந்திர — த்ரிகோணாதிபதிகளில் பலம் வாய்ந்தவர்களாகச் சொல்லப்படுகிறவர்கள், 9 ஆமிடம், 10 ஆமிடம் இவைகளின் அதிபதிகளே. எனவே, 9 ஆமிடம், 10 ஆமிடம் இவற்றின் அதிபதிகள், 6-8-12 முதலான துஸ்ஸ்தானங்களுக்கும் அதிபதிகளாக இருந்தாலும் அவ்விருவரும் 9-10 ஆம் இடங்களின் அதிபதிகள்

(தர்ம-கர்மாதிபதிகள்) ஒரே ராசியில் சேர்ந்திருப்பது ஒருவரை ஒருவர் பார்ப்பது முதலான சம்பந்தம் பெறுவார்களாயின் ராஜயோகத்தை அளிப்பார்கள்.

இக்கருத்தைச் சில ஆசிரியர்கள் முழுமையாக அங்கீகரிக்கவில்லை. भावार्थरत्नाकर நூலின் ஆசிரியரான ஸ்ரீ ராமானுஜர் மேஷ-மிதுன லக்னங்களுக்கு தர்ம-கர்மாதிபதிகளான குரு-சனி இருவருடைய சம்பந்தமும் ராஜயோகத்தை* அளிக்கிறதில்லை என்று கூறுகிறார். ராஜயோகத்தை அளிக்கும் தர்ம-கர்மாதிபதிகள் பிற தோஷமற்றவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது அந்த ஆசிரியரின் கருத்தாகும். இக்கருத்து இந்த நூலிலேயே பின்னால் கூறப்படவிருக்கிறது.

ஸ்லோ. निवसेतां व्यत्ययेन तावुभौ धर्मकर्मिणौ ।
एकत्रान्यतरौ वापि वसेच्चेद्योगकारकौ ॥

ஸ. வ்யா. निवसेतामिति ॥ तावुभौ धर्मकर्मनेतारौ धर्मकर्मणोरधिकारिणा- व्यत्ययेन विनिमयेन भाग्यस्थाने कर्माधिपः कर्मस्थाने भाग्याधिपश्च निवसेताम् । उभयोर्मध्ये अन्यतरः एकत्र वा धर्मकर्मस्थानयोर्मध्ये अन्यतरराशौ वा व्यत्ययेन भाग्यस्थाने कर्माधिपः कर्मस्थाने भाग्याधिपो वा निवसेच्चेत् तेऽपि योगकारका भवन्ति ॥

---

* "मेषकन्ये तु जातस्य राजयोगो न लभ्यते ।
भाग्यराज्येशसम्बन्धमात्रेण हि न संशयः ॥"
—श्रीरामानुजीयभावार्थरत्नाकरे-4

"न शुभं योगमात्रेण प्रभवेत् शनिजीवयोः ।" — 'पराशर'

(தா-ம்) நவமாதிபதி (9ஆமிடத்தின் அதிபதி) தசமத்திலும் 10ஆமிடத்திலும், தசமாதிபதி (10 ஆமிடத்தின் அதிபதி) நவமத்திலும் (ஒன்பதாமிடத்திலும்) மாறி இருந்தால் ஒரு ராஜயோகம் கு(கொ)டுப்பார்கள். நவமாதிபதியும் தசமாதிபதியும் நவமத்தில் இருந்தால் ஒரு ராஜயோகம் உண்டு. நவமாதிபதியும் தசமாதிபதியும் நவம—தசம ஸ்தானங்கள் தவிர இதர ஸ்தானத்தில் ஸம்பந்தப்பட்டிருந்தால் ஒரு ராஜயோகமுண்டு. இந்த நவமாதிபதியும் தசமாதிபதியும் ஒருவரை ஒருவர் பார்த்தாலும், இவர்கள் இருவரும் ஒரே நக்ஷத்திரத்தில், ஒரே பாதத்தில் இருந்தாலும் ஒரு ராஜயோகம் உண்டு.

(வி-ரை) 9ஆமிடத்தின் அதிபதி 10ஆமிடத்திலும், 10ஆமிடத்தின் அதிபதி 9ஆமிடத்திலும் மாறி இருந்தாலும் என்பதிலிருந்து பாக்யாதிபதி (9ஆமிடத்தின் அதிபதி) ஒன்பதிலேயே இருந்து. கர்மாதிபதி (10ஆமிடத்தின் அதிபதி) பத்தாமிடத்திலேயே இருந்தால் ராஜயோகம் உண்டு என்பது ஸித்தமாகிறது. மேலும், இந்த தர்ம—கர்மாதிபதிகள் இருவருக்குள் யாரேனும் ஒருவர் இந்த 9 அல்லது 10ஆமிடத்திலிருந்தாலும்கூட ராஜயோகம் உண்டு என்றும் பொருள் கொள்ளலாம்.

இந்த சுலோகத்திற்குப் பலவாறு பொருள் கொள்ள முடிகிறது.

i. 9ல் 10க்கு உடைய கிரஹமோ, 10ல் 9க்கு உடைய கிரஹமோ இருந்தால் அது ஒருவகை ராஜயோகம்.

ii. 9லேயே 9-10க்கு உடைய கிரஹங்கள் சேர்ந்து இருந்தாலும் அது ஒருவகை ராஜயோகம்,

iii. 10லேயே 9-10க்கு உடைய கிரஹங்கள் இருந்தால் அது ஒருவகை ராஜயோகம்.

iv. 9-10க்கு உடைய கிரஹங்கள், 9லும் இல்லாமல், 10லும் இல்லாமல் வேறு இடத்தில் (இந்த இடம் 6-8-12ஆமிடமாக இல்லாதிருப்பது நல்லது) சேர்ந்து இருந்தால் அதுவும் ஒருவனை ராஜ யோகம்.

v. இந்த 9-10க்கு உடைய கிரஹங்கள் ஒருவரை ஒருவர் பார்த்தாலும் ராஜயோகம் உண்டு

vi. இந்த 9-10மிடத்தின் அதிபர்கள் ஒரே ராசியில், ஒரே நக்ஷத்திரத்தில் அதிலும் ஒரே நக்ஷத்திர பாதத்தில் ஸஞ்சரித்தாலும் ராஜயோகம் உண்டு.

श्लो. त्रिकोणाधिपयोर्मध्ये सम्बन्धो येन केनचित् ।
केन्द्रनाथस्य बलिनो भवेद्यदि स योगकृत् ॥ २६

सं. व्या. त्रिकोणेति -बलिनः केन्द्रनाथस्य कर्माधिपतेः त्रिकोणाधिपयोर्मध्ये येन केनचित् सम्बन्धो भवेद्यदि स योगकृत् योगकारको भवति । तत्सम्बन्धिराजयोगकारक इत्यर्थः ॥

(தாம்) (1-4-7-10 இடங்களான) கேந்திராதிபதிகள் (5-9ஆமிடங்களின் அதிபதிகளான) த்ரிகோணாதிபதிகளுடன் ஸம்பந்தப்பட்டால் ராஜயோகம் கொடுப்பார்கள்.

(வி-ரை) இங்கு "பலின:"—"பலம் வாய்ந்த" என்னும் விசேஷணம் (adjective) "கேந்திரநாதஸ்ய" (கேந்திராதிபதிக்கு) என்ற சொல்லிற்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸம்ஸ்க்ருத வ்யாக்யானத்தில் இதனை மேலும் விளக்கப்படுத்தி 'கர்மாதிபதி' என்றே கூறப்பட்டிருக்கிறது. எனவே, பலம் வாய்ந்த கேந்திராதிபதிக்கு — அதாவது பத்தாமிடத்தின் அதிபதிக்கு, ஏதேனும் ஒரு த்ரிகோணாதிபதியின் (5 ஆமிடத்தின் அதிபதியுடனோ, 9ஆமிடத்தின் அதிபதியுடனோ) ஸம்பந்தம் இருக்குமாகில் (இந்த

சம்பந்தம் என்பது முன் கூறப்பட்டதுபோல் 3-6-8-11-12ம் இடத்தின் அதிபதிகளின் ஸம்பந்தமில்லாமலும், 3-6-8-11-12ஆமிடங்களில் ஏதேனும் ஒன்றில் நிகழாமலும் இருப்பது அவசியம்) ராஜயோகத்தை அளிப்பர்.

ஶ்லோ. दशास्वपि भवेद्योगः प्रायशो योगकारिणोः ।
दशाद्वयी(ये)मध्यगतास्तदयुक्छुभकारिणाम् ॥ १७

सं. व्या. : दशास्विति—योगकारिणां राजयोगकारकयोः व्यवहितदशाद्वये मध्यगताः तदयुजो योगकारकसम्बन्धरहितास्ते च शुभकारिणो ग्रहाश्चेत् तेषामपि दशासु प्रायशः प्रायेण राजयोगो भवेत् । प्रायश इत्यनेन तत्र तत्र राजयोगकारकदशापेक्षया किञ्चिन्न्यूनत्वं दृश्यत इति भावः ॥

(தா-ம்) யோககாரகாள் இருவருடன் கூடின கிரஹங்கள் ராஜயோகத்தைக் கொடுக்காவிட்டாலும், சுப கிரஹங்களின் தசையில் இவர்கள் ராஜயோகம் கொடுப்பார்கள் என்பது.

(வி-ரை) ராஜயோகம் — அநேகமாக தசாபுக்தி காலங்களிலும் ஏற்படலாம். எந்த தசை நடந்தாலும் தர்மகர்மாதிபதிகளின் புக்தி காலத்திலும் ராஜயோக பலன்கள் உண்டு. மேலும் ராஜயோகத்தைச் செய்யக் கூடிய தர்மகர்மாதிபதிகளின் தசா காலங்களிலும் — புக்தி காலங்களிலும் — ராஜயோகம் ஏற்படலாம். இதுவும் தவிர, தர்மகர்மாதிபதிகளின் (ராஜயோக காரகர்களின்) ஸஹஸ்திதி, கூடவே இருத்தல் — ஒருவரை ஒருவர் பார்த்தல் இவர்களுக்குக் கேந்திரத்திலோ, த்ரிகோணத்திலோ இல்லாதிருந்தும்கூட அந்தந்த ஜாதக ரீதியாக—ஒரு குறிப்பிட்ட லக்ன ரீதியாக—சுபத்தைச் செய்கிறவர்களாக இருப்பினும் சரியே, அவர்களுடைய

புக்தி நடக்கும் காலத்திலும் ராஜயோக பலன் ஏற்படும். प्रायशः என்று மூலச்லோகத்தில் இருப்பதால் பெரும்பாலும் ராஜயோககாரக கிரஹங்களால் ஏற்படும் சுபபலன்களின் அளவு, தரத்தைவிட, ஜாதக ரீதியாகவுள்ள சுபர்களின் தசாபுக்தி காலத்தில் ஏற்படும் சுபபலனின் தரம் சற்று குறைந்ததாகவே இருக்கும்.

श्लो. योगकारकसम्बन्धात्पापिनोऽपि ग्रहाः स्वतः ।
तत्तद्भुक्त्यनुसारेण दिशेयुर्यौगिकं फलम् ॥ १८

सं. व्या. : योगकारकेति – ग्रहाः स्वतः पापिनोऽपि तृतीयषष्ठाद्यधिपतयोऽपि योगकारकैः सम्बन्धात् तत्तद्भुक्त्यनुसारेण राजयोगभुक्तिप्रधानतया यौगिकं राजयोगसम्बन्धिफलं प्रदिशेयुः । भुक्तिलक्षणान्युत्तरत्र वक्ष्यन्ते । योगकारकसम्बन्धेन पापग्रहाणामप्येवं फलगमकत्वे योगकारकसम्बन्धेन शुभग्रहाणां सम्पूर्णयोगफलदातृत्वे कः सन्देहः इत्यर्थः ॥

(தா-ம்) ராஜயோக(ர் தரும்) கிரஹங்களுடன் கூடின பாப கிரஹ புக்தி வரும்போது(ம்) ராஜயோகத்தைக் கொடுப்பார்கள்.

(வி-ரை) ஜன்ம லக்னத்திற்கு 3-6-8-11 ஆமிடத்தின் அதிபதிகள் அசுபர்கள் ஆகிறார்கள். மேஷ லக்னத்திற்கு 10 ஆமிடத்தின் அதிபதி என்னும் காரணத்தால் சனி சுபர் என்றாலும், 11 ஆமிடத்தின் ஆதிபத்யம் இருப்பதால் அசுபர் ஆகிறார். மிதுன லக்னத்திற்கு சனி ஒன்பதுக்கு உடையவன் என்பதால் சுபன் என்றாலும், அஷ்டமாதிபத்யம் காரணமாக அசுபனாகிறார். கடக லக்னத்திற்கு 9 ஆமிடத்தின் ஆதிபத்யம் காரணமாக குரு சுபர் என்றாலும், 6க்கு உடையவர் என்பதால் அசுபர் ஆகிறார்.

இதுபோல் கும்பத்திற்கு 10க்கு உடையவர் என்ற காரணத்தால் செவ்வாய் சுபர் என்றாலும், 3க்கு உடையவர் என்னும் காரணத்தால் அசுபர் ஆகிறார். இப்படி சனி, குரு, செவ்வாய் இவர்கள் யோககாரர்களுடன் சேர்ந்திருப்பின் ராஜயோகத்தைச் செய்கிறார்கள். இதன் மூலம் மேஷ லக்னத்திற்கு தர்மகர்மாதிபதிகளான குருவும் சனியும், மிதுன லக்னத்திற்கு தர்ம-கர்மாதிபதிகளான சனியும், குருவும் தத்தமது தசா புத்திகளில்—சனி தசையில் குரு புக்தி நடக்கும்பொழுதும், குரு தசையில் சனி புக்தி நடக்கும் பொழுதும்—சுப பலன் ஏற்படும் என்பது ...த்தாகிறது. ஆனால்,

"धर्मकर्माधिनेतारौ रन्ध्रलाभाधिपौ यदि ।
तयोः सम्बन्धमात्रेण न योगं लभते नरः ॥"

என்று பின்னால் சொல்லப்படவிருக்கும் சுலோகத்தின் கருத்தைக் கொண்டு பார்த்தால் தர்ம-கர்மாதிபதிகள் 8-11க்கும் உடையவர்களாக இருப்பின் ராஜயோகத்தைச் செய்கிறதில்லை என்று ஆகிறது. எனவே மேஷ லக்னத்திற்கும், மிதுன லக்னத்திற்கும் சனி பகவான் முறையே 11க்கு உடையவராகவும், 8க்கு உடையவராகவும் ஆவதால் மேற்படி இரண்டு லக்னங்களில் விஷயத்தில் குரு, சனி இருவருடைய சம்பந்தம் ராஜயோகமளிப்பதில்லை என்றாகிறது.

யோக காரக கிரஹங்களின் சம்பந்தம் பெற்ற பாப கிரஹங்களும்கூடத் தம் தசா புக்திகளில் சுப பலன்களைத் தருகிறார்கள் என்றால், யோக காரக கிரஹங்களின் சம்பந்தம் பெற்ற சுப கிரஹங்கள் தத்தம் தசா புக்திகளில் சுப பலனைத் தருவார்கள் என்பதில் ஐயமில்லையல்லவா!

ஶ்லோ. यदि केन्द्रे त्रिकोणे वा निवसेतां तमोग्रहौ ।
नाथेनान्यतरस्यैव सम्बन्धाद्योगकारकौ ॥ १९

सं. व्या. : यदीति — केन्द्रे त्रिकोणे वा तमोग्रहौ राहुकेतू निवसेतां यदि केन्द्रत्रिकोणानां मध्ये अन्यतरस्य नाथेन सह सम्बन्धात् योगकारकौ भवतः ।

अयमर्थः — केन्द्रस्थितौ चेत् केन्द्राधिपतिना सम्बन्धाद्योगकारकौ भवतः । त्रिकोणे स्थितौ चेत् त्रिकोणाधिपतिना सह सम्बन्धात् योगकारकौ भवतः । प्रबलस्थानप्रबलग्रहसम्बन्धानुगुण्येन तयोर्विशेषफलगमकत्वमस्तीत्यवगम्यते ॥

(தா-ம்) கேந்த்ர — த்ரிகோணங்களில் ராஹு கேதுக்களிருந்தால் அந்யதரஸ்தானாதிபதி ஸம்பந்தமிருந்தால் ராஜயோகம் கொடுப்பார்கள்.

(வி ரை) ராகு-கேதுக்கள் ஜன்ம லக்னத்திற்குக் கேந்திரத்திலோ, திரிகோணத்திலோ இருப்பின், அந்த கேந்திராதிபதியுடனோ அல்லது த்ரிகோணாதிபதியுடனோ சம்பந்தம் இருப்பின்-கேந்திரத்தில் இருப்பின் கேந்திராதிபதியுடன் சம்பந்தப்பட்டிருந்தால், த்ரிகோணத்தில் இருப்பின்-த்ரிகோணாதிபதியுடன் சம்பந்தப்பட்டிருந்தால் ராஜயோகத்தை அளிப்பார்கள். ராகு-கேதுக்கள் இருக்கும் கேந்திரம் அல்லது த்ரிகோணம் இவற்றின் ஸ்தானபலம், கிரஹபலம் இதனையொட்டி அவ்விருவருக்கும் விசேஷ பலனைத் தரும் யோக்யதை ஏற்படுகிறது என்று அறியலாகிறது.

**श्लो. केन्द्रत्रिकोणाधिपयोरैक्ये तौ योगकारकौ ।**
**अन्यत्रिकोणपतिना सम्बन्धो यदि किम्पुनः ॥ २०**

सं. व्या. : केन्द्रेति — केन्द्रत्रिकोणाधिपयोरैक्ये एकत्वे सति, ते केन्द्रत्रिकोणाधिपा योगकारका भवन्ति । तेषामन्यत्रिकोणाधि-

पतिना अन्यस्य त्रिकोणस्य पत्यापि सम्बन्धो यदि, किंपुनः फलाधिक्यप्रदाने, सन्देहो नास्तीति भावः । तेषां प्राबल्यानुगुण्येन फलगमकत्वमूह्यम् ।

(தா-ம்) கேந்திரத்துக்கும், த்ரிகோணத்துக்கும் அதிபதி ஒருவனாயிருந்தால் ராஜயோகம் கொடுப்பான். அப்படி ஒருவனாயிருந்து, அவன் அன்ய த்ரிகோணாதிபதியுடன் சம்பந்தப்பட்டால் அதிகமான ராஜயோகத்தை கொடுப்பான் என்பது.

(வி-ரை) ஒரு கிரஹம் கேந்திரத்திற்கும், த்ரிகோணத்திற்கும் அதிபதியாக இருப்பின், அந்த கிரஹம் ராஜயோகத்தைத் தரும். உதாரணமாக ரிஷப லக்னத்திற்கு 9க்கும் 10க்கும் உடையவர் சனி பகவான். எனவே ரிஷப லக்னத்திற்குச் சனி ராஜயோகத்தைச் செய்கிறவர் ஆகிறார். (கடக லக்னத்திற்கு 5க்கும், 10க்கும் உடையவர் செவ்வாய். அதுபோல்) சிம்ம லக்னத்திற்கு 4க்கும், 9க்கும் உடையவர் செவ்வாய் என்பதால் சிம்ம லக்னத்திற்கு செவ்வாய் ராஜயோகத்தைச் செய்கிறவராகிறார். கும்ப லக்னத்திற்குச் சுக்ரன் 4க்கும், 9க்கும் உடையவர் என்பதால் மேற்படி கும்ப லக்ன விஷயத்தில் சுக்ரன் ராஜயோககாரகனாகிறார்.

இப்படி மேலே கூறப்பட்டவாறு ரிஷப லக்னத்திற்குக் கேந்திராதிபதியாகவுள்ள சனிபகவான், வேறு த்ரிகோண அதிபதியுடன் — உதாரணமாக ரிஷப லக்னத்திற்குப் பஞ்சம - த்ரிகோணாதிபதியான புதனுடன் ஸம்பந்தம் (சேர்க்கை) அல்லது பார்வை அல்லது ஒருவருக்கொருவர் கேந்திரம் அல்லது த்ரிகோணத்தில் இருப்பது போன்ற சம்பந்தம்—பெறுவாராகில் ராஜயோக பலனைத் தருவார் என்றும் பொருள் கொள்ளவேண்டும். ராஜயோகத்தின் பலனில் தாரதம்யம் (ஏற்றதாழ்வு) அந்த கேந்திராதிபதி—த்ரிகோணாதிபதிகளின் பலாபலத்தைப் பொருத்திருக்கும் என்பது அறியத்தக்கது.

श्लो. धर्मकर्माधिनेतारौ रन्ध्रलाभाधिपौ यदि ।
तयोः सम्बन्धमात्रेण न योगं लभते नरः ॥ २९

सं. व्या. : धर्मेति — धर्मकर्माधिनेतारौ नवमदशमाधिपौ रन्ध्रलाभाधिपौ यदि अष्टमैकादशाधिपौ यदि । तयोः एवमुपाधिवशाद् द्विधाभूतयोः सम्बन्धमात्रेणेत्यनेनान्ययोगकारकसम्बन्धाद्योगं न प्राप्नोतीत्यर्थः ॥

*(த-ாம்) நவம — தசமாதிபதியுடன் அஷ்டமாதிபதி யாவது, லாபாதிபதியாவது சம்பந்தப்பட்டிருந்தால் ராஜ யோகத்தைக் கொடுக்கமாட்டார்கள். (இந்தத் தமிழுரை சரியில்லை.)*

(விரை) மேலே கூறப்பட்ட தமிழுரை பிழை பொருந்தியதாகக் காண்கிறது. இந்த சுலோகம் மேஷ லக்னம், மிதுன லக்னம் இவ்விரண்டு லக்னத்திற்காகவே அமைந்துள்ளதாகும். தர்ம-கர்மாதிபதிகளாகவுள்ளவர்கள், அஷ்டம — லாபாதிபத்யமும் பெற்றவர்களாக இருப்பின், அவ்விருவருடைய ஸம்பந்தம் ராஜயோகம் தருவதில்லை என்பதுடன், அஷ்டம-லாபாதிபத்யம் பெற்ற தர்ம — கர்மாதிபதிகளுடன் வேறொரு யோககாரக கிரஹம் சேருமானாலும் ராஜயோகம் தருவதில்லை யென்பதே பொருள்.

உதாரணமாக மேஷ லக்னத்திற்கும், மிதுன லக்னத்திற்கும் முறையே 9க்கு உடைய குருவும், 10க்கு உடைய சனியும்; 9க்கு உடைய சனியும். 10க்கு உடைய குருவும் தர்மாதிபதியாகவும், கர்மாதிபதியாகவும் ஆகிறார்கள். எனவே, அவ்விருவருடைய ஸம்பந்தம் **मिथसेतौ व्यत्ययेन** என்ற ச்லோகத்தில் கூறப்பட்டவாறு ராஜயோகத்தைக் கொடுக்கவேண்டியதுண்டு. ஆனால் அது ஸாமான்ய விதி என்பதால் அதற்கு விசேஷ விதியாக இந்த சுலோகம்

கூறப்படுகிறது. மேஷ லக்னத்தை எடுத்துக்கொண்டால் பாக்யாதிபதி குரு, கர்மாதிபதியான சனியுடன் ஸம்பந்தமுடையவராகில் ராஜயோகம் தருவதில்லை. கர்மாதிபதியான சனி, 11ஆமிடத்திற்கும் அதிபதியாவதே காரணம். இதுபோலவே மிதுன லக்னத்திற்குக் கர்மாதிபதியான குருவுக்கு, பாக்யாதிபதியான சனியின் சம்பந்தம் ராஜயோகம் தருவதில்லை. சனிக்கு அஷ்டமாதிபத்யம் இருப்பதே காரணம். எனவே மேஷ, மிதுன லக்னங்களைப் பொறுத்த வரையில் தர்ம-கர்மாதிபதிகளின் ஸம்பந்தம் ராஜயோகம் தராது. சரி; இவ்விரு லக்னங்கள் விஷயத்தில் தர்ம—கர்மாதிபதிகள்—குரு, சனி மற்றும் சனி, குரு — இவர்களின் ஸம்பந்தம் ராஜயோக பலன் தருவதில்லை போகட்டும்; அவ்விரு கிரஹங்களில் மேஷ லக்னப்படி 10க்கு உடைய சனிக்கு வேறு த்ரிகோணாதிபதி 5மிடத்தின் அதிபதியுடைய சூர்யனுடைய சம்பந்தம் ஏற்பட்டால் ராஜயோக பலன் தருமா! மிதுன லக்னப்படி தசம கேந்திர அதிபதியான குருவுக்கு வேறொரு (பஞ்சம) திரிகோணாதிபதியுடன் (சுக்ரனுடன்) சம்பந்தம் ஏற்படின் அது ராஜயோகத்தை நயமளிக்குமா! என்றால் இல்லையென்பதே பதிலாகும்.

अथ आयुर्दाय उच्यते —

श्लो. अष्टमं ह्यायुषः स्थानं अष्टमादष्टमं तथा (च यत्) ।
तयोरपि व्ययस्थानं मारकस्थानमुच्यते ॥ २२

सं. व्या.: अष्टममिति — आयुषःस्थानं लग्नापेक्षया अष्टमं, अष्टमादष्टमं लग्नापेक्षया तृतीयं तच्च आयुषः स्थानमुच्यते । तयोरपि अष्टमतृतीययोरुभयोरपि व्ययस्थानं लग्नापेक्षया सप्तमं द्वितीयं च मारकस्थानमुच्यते । एवं द्वादशभावानामपि व्ययस्थानं द्रष्टव्यम् ॥

(தா-ம்) இது முதல் ஆறு சுலோகங்களால் ஆயுர் தாயம் சொல்லுகிறார். ஜன்ம லக்னத்திற்கு அஷ்டம ஸ்தானமும் அதுக்கு (அதற்கு) அஷ்டம ஸ்தானமான த்ருதிய ஸ்தானமும் ஆயுஸ் ஸ்தானமாகும். இது இரண்டுக்கும் வியயஸ்தானமான 2 ஆமிடமும், 7 ஆமிடமும் மாரக ஸ்தானமாம். இந்தப்படி 12 பாவத்துக்கும் அறிவது.

(ஷி-ரை) ஒரு ஜாதகத்தில் ஜன்ம லக்னத்திற்கு 8ம் இடமும், அதிலிருந்து எட்டாமிடமான மூன்றாமிடமும் ஆயுஸ்ஸ்தானங்கள் எனப்படும். அந்த எட்டாமிடத்திற்கு வியயஸ்தானமாகிய 7 ஆமிடமும், 8 ஆமிடத்திற்கு 8 ஆமிடமான மூன்றாமிடத்திற்கு வியயஸ்தானமான இரண்டாம் இடமும் மாரக ஸ்தானம் எனப்படும். எட்டாமிடமும், மூன்றாமிடமும் ஆயுஸ்ஸ்தானம் என்றால்; 7 ஆமிடமும், இரண்டாமிடமும் மாரக ஸ்தானங்களாகும். இவ்விதமே ஜன்ம லக்னத்திற்கு 12ம் இடமும் மாரகஸ்தானம் என்று பொருள் கொள்ளமுடிகிறது.

ஸம்ஸ்க்ருத வியாக்யானத்தில் இவ்விதமே 12 பாவங்கள் விஷயத்திலும் அந்தந்த பாவங்களுக்கும் 12 ஆமிடம் வியய ஸ்தானமாகும் என்பது அறியப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது உதாரணமாக மேஷ லக்ன ஜாதகத்தில் லக்னத்தில் சுக்ரன் இருப்பதாக வைத்துக்கொண்டால், குடும்பாதிபதி குடும்பஸ்தானத்திற்கு 12ல் இருப்பதாக வைத்து, அதற்கேற்ப பலன் காணவேண்டியதாகும். இவ்வாறே 9க்கு உடைய குரு, 9 ஆம் பாவத்திற்கு (வியய ஸ்தானமான 12ல் — 8ல்) இருந்தால் அதையனுசரித்து அதற்குரிய பலன் காணப்படவேண்டியதாகும்.

ஸ்லோ. तत्राप्याद्यव्ययस्थानादुत्तरं बलवत्तरम् ।
तदीशितुस्तत्रगताः पापिनस्तेन संयुताः ॥ २३

सं. व्या.: तत्रापीति — तत्र व्ययस्थानद्वितयेऽपि आद्यव्ययस्थानात्सप्तमा-
त्तदपेक्षया उत्तरं व्ययस्थानं जन्मापेक्षया द्वितीयं बलवत्तरं

भवति ॥ ननु जन्मलग्नमारभ्य गणनया द्वितीयापेक्षया सप्तमस्यैवोत्तरत्वात् तदपेक्षया द्वितीयस्य कथमुत्तरत्वमित्याशङ्कायामुच्यते । आयुःस्थानत्वेन प्रथमतो निर्दिष्टाष्टमस्य व्ययस्थानत्वात् सप्तमस्य तदपेक्षया द्वितीयपर्यायेण निर्दिष्टस्यायुःस्थानस्य व्ययस्थानभूतं लग्नापेक्षया द्वितीयमुत्तरं भवति । तस्मात्प्रबलं उत्तरोत्तरमिति न्यायेन तस्यैव बलवत्त्वं सिद्धं तदीशितुः द्वितीयाधिपापेक्षया तत्र गताः द्वितीयस्थाने स्थिताः पापिनः । तेन द्वितीयाधिपेन संयुक्ताः पापिनः बलवत्तरा भवन्ति । एवं सप्तमाधिपापेक्षया तत्र स्थिताः तेन संयुक्ताश्च पापिनः प्रबला भवन्ति । सप्तमद्वितीयाधिपयोर्बलाबलतारतम्येन तत्सम्बन्धिनामपि बलवत्त्वमूह्यम् ॥

(தா-ப்) ப்ரதமமாரக ஸ்தானமான ஸப்தம ராசியை விட த்விதீய மாரக ஸ்தானமான 2ஆமிடம் பலம். இந்த ஸப்தம—த்விதீய ஸ்தானாதிபதியைவிட அந்த ஸப்தம—த்விதீய ஸ்தானத்தில் இருந்த (இருக்கிற) கிரஹங்கள் பலமான பாபிகளாம் என்பது.

(வி-ரை) முன்பு கூறப்பட்ட சுலோகங்களின்படி 8ஆம் இடமும், அதற்கு 8ஆமிடமான லக்னத்திற்கு 3ஆமிடமும் ஆயுஸ்ஸ்தானம் என்றும், அவற்றிற்கு அதாவது 8ஆமிடத்திற்கு வியயஸ்தானமாகிய (12ஆமிடமான) 7ஆமிடமும், 8க்கு 8ஆமிடமான மூன்றாமிடத்திற்கு வியயஸ்தானமான 2ஆமிடமும் மாரக ஸ்தானங்கள் எனப்பட்டன. எனவே 7ஆமிடமும், 2ஆமிடமும் மாரக ஸ்தானம் எனப்பட்டன.

இவ்விரண்டினின்றும் முன்கூறிய "ப்ரபலா உத்தரோத்தரம்" என்ற நியாயப்படிக்கு, 7ஆமிடம் மாரக ஸ்தானம் ஆவதைக்காட்டிலும், இரண்டாமிடம் அதிக சக்திவாய்ந்த மாரக ஸ்தானமாக ஆகும் என்பது பொருள் கொள்ளப்பட

வேண்டும். இரண்டாமிடம் சக்திவாய்ந்த மாரக ஸ்தானம் என்றால் 7ஆமிடம் மரணத்திற்குச் சமமான கஷ்டத்தை அளிக்கக்கூடியது என்று பொருள் கொள்ளப்பட வேண்டியதாகும்.

இந்த சுலோகத்தின் பொருள் :— இரண்டாமிடம் மாரக ஸ்தானம் ஆவதைக் காட்டிலும், இரண்டாமிடத்தில் உள்ள கிரஹங்கள் மாரகம் செய்கிற விஷயத்தில் அதிக பலம் வாய்ந்தவர்கள். மேலும், இரண்டாமிடத்தின் அதிபதியுடன் சேர்ந்திருக்கும் கிரஹம் அல்லது கிரஹங்கள் மாரகம் செய்யும் விஷயத்தில் முன்னிலும் அதிக பலம் வாய்ந்தவர்கள் என்பதாம்.

இங்கு ஸம்ஸ்க்ருத வியாக்யானத்தில் ஒரு ஆக்ஷேபமும், அதற்கு ஸமாதானமும் கூறப்படுகிறது. "ப்ரபலா உத்தரோத்தரம்" என்று முன்பு கூறப்பட்ட நியாயத்தை ஒட்டி இரண்டாமிடம் பலம் வாய்ந்த மாரக ஸ்தானம் என்றும், அதற்கு அடுத்துள்ள 7ஆமிடம் அதனினும் பலம் வாய்ந்த மாரக ஸ்தானம் என்றும் பொருள் கொள்ள வேண்டியதிருக்க, அதற்கு மாறாக முதலில் 7ஆமிடம் மாரக ஸ்தானமாவதைக் காட்டிலும், அதற்கு அடுத்த இரண்டாமிடம் மேலும் பலம் வாய்ந்த மாரக ஸ்தானம் ஆகும் என்று பொருள் சொல்வது எங்ஙனம் என்றால் அதற்குச் சமாதானம் பின்வருமாறு :— 22வது சுலோகத்தில் ஆயுஸ்ஸ்தானமாக முதலாவதாகக் கூறப்பட்டது 8ம் இடமாகும். அதற்கு அடுத்து 3ஆமிடமும் ஆயுஸ்ஸ்தானம் எனப்பட்டது. அதை அனுசரித்து 8ஆமிடத்திற்கு விரய ஸ்தானம் — அதாவது 7ஆமிடம் மாரகஸ்தானம் எனப் பட்டது. அதுபோல் 3ஆமிடத்திற்கு வியயஸ்தானம் அதாவது 2ஆமிடம் மாரக ஸ்தானம் எனப்பட்டது. எனவே முதலில் மாரக ஸ்தானமாகக் கூறப்பட்டது 7ஆம் இடமே அதற்கு அடுத்தபடியாக மாரக ஸ்தானமாகக் கூறப்பட்டதுதான் இரண்டாமிடம். எனவே 7ஆமிடம் மாரக ஸ்தானமானாலும், அதற்கு அடுத்தபடியாகச்

சொல்லப்பட்ட இரண்டாமிடமும், இரண்டில் உள்ளவரி அல்லது உள்ளவர்களும், இரண்டாமிடத்தின் அதிபதியுடன் சேர்ந்தவர்களும் மாரகம் செய்யும் விஷயத்தில் அதிகம் சக்தி வாய்ந்தவர்கள் என்று கொள்க.

ஶ்லோ. तेषां दशाविपाकेषु सम्भवेन्निधनं नृणाम् ।
तेषामसम्भवे साक्षाद्व्ययाधीशदशास्वपि ॥ २४

सं. व्या. तेषामिति — तेषां व्ययस्थानानां व्ययाधीशसम्बन्धिनां च पापानां दशाविपाकेषु नृणां निधनं मरणं सम्भवेत् । तेषामसम्भवे साक्षाद्व्ययाधीशदशास्वपि निधनं भवेत् ॥

(தா-ம்) ஸப்தம — த்விதீய ஸ்தானத்தில் இருந்த (இருக்கும்) கிரஹங்களும், ஸப்தம — த்விதீயாதிபனுடன் சம்பந்தப்பட்ட கிரஹங்களும் அவரவர்கள் தசா புக்திகளும் போது மாரகம் செய்வார்கள். அவர்கள் மாரகம் செய்யாத பக்ஷத்தில் ஸப்தம — த்விதீயாதிபதியினுடைய தசா புக்திகளில் பாப கிரஹங்கள் மாரகம் செய்வார்கள் என்பது.

(வி-ரை) ஜாதகர்களுக்கு, ஜன்ம லக்னத்திற்கு 7 ஆமிடம், 2 ஆமிடம் இவற்றில் இருப்பவர் (பாபி) களுடையவோ அல்லது 7 ஆமிடத்தின் அல்லது 2 ஆம் இடத்தின் அதிபதியுடன் கூடியவர் (பாபி) களுடையவோ; தசை அல்லது புக்தி நடக்கும் ஸமயத்தில் மாரகம் ஏற்படலாம். ஒருக்கால், மேலே கூறப்பட்ட மாதிரி கிரஹ அமைப்பு சம்பவிக்காவிட்டால், 6 ஆமிடம், 8 ஆமிடத்திற்கு வியயஸ்தானங்களான 7 ஆமிடத்திற்கு அல்லது 2 ஆமிடத்திற்கு அதிபதிகளின் தசாபுக்தி காலங்களிலும் மரணம் ஏற்படலாம். அந்தந்த 7 ஆமிடம், 2 ஆமிடம் இந்த ஸ்தானாதிபதிகளுக்குரிய விதத்தில் மரணம் ஏற்படலாம். ஒவ்வொரு கிரஹத்தின் மூலமும் இன்ன மாதிரி வியாதிகள்

ஏற்படலாம் என்று கிரந்தாந்தரங்களில் சொல்லப்பட்டு இருப்பதை அனுசரித்து 7 அல்லது 2வது இடத்தின் அதிபதிக்குரிய ரோகம் ஏற்பட்டு அதன் மூலம் மரணம் சம்பவிக்கலாம்.

இங்கு "साक्षाद् व्ययाधीशदशास्वपि" என்று சொல்லப் பட்டதில் "ஸாக்ஷாத் 12மிடத்தின் அதிபதிகளின் தசைகளில்" என்று சொல்றப்பட்டுள்ளதற்கு 12ம் இடத்தின் அதிபதிகளின் தசைகளில் என்றும் பொருள் கொள்ள முடியும். ஆனால் மாரகத்தன்மை மிகுந்தவர்களாக 7 அல்லது 2ஆமிடத்திலுள்ள 7க்கு அல்லது 2க்கு உடையவருடன் கூடிய கிரஹங்கள் என்றே பொருள் கூறப்படுவதில் 7 ஆமிடமும், 2ஆமிடமுமே பேசப்படுவதால் முன்னால் கூறப்பட்ட பொருளே ஸமஞ்ஜஸமாகும்.

श्लो. अलाभे पुनरेतेषां सम्बन्धेन व्ययेशितुः ।
क्वचिच्छुभानां च दशास्वष्टमेशदशासु च ॥ २५

सं. व्या. : अलाभे इति — तेषां पुनः व्ययेश, व्ययस्थितव्ययसम्बन्धिनां च पापिनामलाभे अनागमे व्ययेशितुः सम्बन्धेन शुभानां च योगकारकव्यतिरिक्तशुभग्रहाणां च दशासु निधनं क्वचित् भवेत् । एतेषामलाभे अष्टमेशदशासु अष्टमेशः, तदष्टमेशः इत्यर्थः । एतेषामायुष्कारकत्वे सत्यपि एतेषां दशास्वगत्या क्वचित्क्वचिन्निधनं भवेत् ॥

(தா-ம்) "த்விதீய - ஸப்தமாதிபதிகளும், த்விதீய - ஸப்தமத்திலிருக்கும் (பாப) கிரஹங்களும். (த்விதீய-ஸப்தமாதிபதிகளுடன் சேர்ந்த (பாப) கிரஹங்களும்) மாரகம் செய்யாத பக்ஷத்தில் திருதீய-அஷ்டமாதிபதிகள் மாரகம் செய்வார்கள்" என்பது.

(வி-ரை) 7ஆமிடம், 2ஆமிடம் இவற்றிற்கு அதிபதி அல்லது, 7 அல்லது 2ஆயிடத்தில் இருக்கிற அல்லது, 7 அல்லது 2ஆமிடத்தின் அதிபதியுடைய சம்பந்தம் பெற்ற கிரஹங்களின் தசை அல்லது புக்தி காலம் ஏற்படாத நிலையில், 7 அல்லது 2ஆமிடத்தின் அதிபதிகளின் சம்பந்தம் பெற்ற யோககாரகர்களாக இல்லாத சுப கிரஹங்களின் தசைகளிலும் மரணம் சம்பவிக்கலாம். क्वचित् சில இடங்களில்-மரணத்திற்கு ஹேது சொல்ல முடியாத சில ஜாதக விஷயங்களில் மட்டுமே என்பது பொருள். எனவே, எல்லா இடங்களிலுமே இப்படி அமையும் என்பதற்கில்லை. இவை எதுவுமே நேருவதற் கில்லையென்ற பக்ஷத்தில், எட்டாமிடம் அதற்கு 8ஆமிட மான ஆயுஸ்தானமாகிய 3ஆமிடம் இவற்றின் அதிபதி களின் தசையிலும் சம்பவிக்கலாம். பொதுவாக 8ஆமிடம் அதற்கு 8ஆமிடமான 3ஆமிடம் இவை ஆயுஸ்தானம் ஆகின்றன. இவர்கள் மாரகம் செய்கிறதற்கில்லைதான். ஆனால் வேறு வகையில் மரணம் சம்பவிக்கிறதற்கில்லை யென்ற நிலையில் இப்படிப் பொருள் சொல்லலாம்.

श्लो. केवलानां च पापानां दशासु निधनं क्वचित् ।
कल्पनीयं बुधैर्नृणां मारकाणामदर्शने ॥ २६

सं. व्या. : केवलेति — मारकाणां मारकरूपमारकलक्षणलक्षितानाम-
दर्शने अनागमे केवलानां पापानां मारकसम्बन्धरहितपापानां
च दशासु बुधैः नृणां निधनं क्वचित्कल्पनीयम् ॥

(தா-ம்) "பாப கிரஹங்களுடைய தசையில் மாரகாதி பதியினுடைய புக்தியில் மாரகம் செய்வார்கள்" என்பது.

(வி-ரை) ஒரு சில ஜாதக விஷயத்தில் இதுவரையில் பின்னால் கூறப்பட்டவாறு மாரகராக இருப்பதற்குரிய லக்ஷணங்களைக் கொண்ட கிரஹங்களின் தசை, புக்தி

களைக்கொண்டு அந்த ஜாதகரின் மரணத்தைப் பற்றிய பலனைத் தீர்மானிக்க முடியாதபடி இருக்கலாம். அப்போது மாரகர்களாக கிரஹங்களின் ஸம்பந்தம் பெறாத பாப கிரஹங்களின் — முன்னால் சொல்லப்பட்டவாறு 3-6-11 ஆமிடங்களின் அதிபதிகளான பாபிகளின் தசா காலங்களில் கூட மரணம் பற்றிச் சொல்லவேண்டியிருக்கும். இவ்வாறு எல்லா ஜாதக விஷயத்திலுமே தீர்மானிக்க இயலாது என்பதனைக் குறிப்பிட क्वचित् சில இடங்களில் என்ற சொல் மூலத்தில் உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

ஸ்லோ. मारकैः सह सम्बन्धान्निहन्ता पापकृच्छनिः ।
अतिक्रम्येतरान् सर्वान् भवत्येव न संशयः ॥ २७

सं. व्या. : मारकैः इति — पापकृत् पापलक्षणलक्षितः शनिः मारकैः सह सम्बन्धात् - इतरमारकान् सर्वानतिक्रम्य स्वयमेव निहन्ता भवत्येव । इतरान्सर्वानित्यनेन स्वापेक्षया पूर्वमागतान् पश्चादागन्तुं योग्यांश्च मारकानतीत्य स्वयमेव निहन्ता भवति इत्यर्थः । अस्मिन्नर्थे संशयो नास्ति ॥

(தா-ப) மாரக கிரஹங்களுடன் ஸம்பந்தப்பட்ட சனியானவன் அந்த மாரக கிரஹங்களைவிட தானே மாரகம் செய்வான் என்பது.

(வி-ரை) சனிபகவான் இயற்கையிலேயே பாபி. பாப பலன்களைத் தருகிறவர். மேலும், அவர் பாப லக்ஷணங்களுடன்கூடி 3-6-11க்கும் உடையவராகி மாரக கிரஹங்களுடன் சம்பந்தமும் பெற்றவரானால் மேலும் பாப பலன் தருவதற்குத் தடையில்லை. மாரகம் செய்யத் தடையில்லை. ஆனால், அவரைவிட வேறு காரணங்களால் (2 அல்லது 7ஆமிடத்தின் ஆதிபத்யம், இரண்டு அல்லது 7ஆமிடத்தில் இருத்தல் அல்லது 2 அல்லது 7க்குடையவர்

களுடன் சேர்ந்திருத்தல் முதலான காரணங்களால்) மாரகர்களாக ஆகின்றவர்களனைவரையும் மீறித் தானே மாரகம் செய்கிறவராகிறார். இதில் சந்தேஹமில்லை.

श्लो. न दिशेयुर्ग्रहाः सर्वे स्वदशायां स्वभुक्तिषु ।
शुभाशुभफलं नृणामात्मभावानुसारतः ॥ २८

सं. व्या. : न दिशेयुरिति — सर्वे ग्रहाः स्वदशासु विद्यमानासु आदौ स्वस्वभुक्तिषु आत्मभावानुरूपतः स्वकीयभावानुगुण्येन शुभाशुभफलं नृणां न दिशेयुः । किन्तु पूर्वदशानुगुण्येन शुभाशुभफलं दिशेयुरित्यर्थः ॥

(தா-ம்) இதுமுதல் நான்கு சுலோகத்தினால் புக்தி லக்ஷணம் சொல்லு(சொல்லப்படு)கின்றது. ஸகலமான கிரஹங்களும் பாப கிரஹ ஸம்பந்தமாவது பாப ராசி அதிபதித்வமாவது பெற்றிருந்தால் அவாளவாள் தசையிலே, அவாளவாள் புக்தியிலே அவர்கள் பாப கிரஹ ஸம்பந்தமானாலும், பாப க்ஷேத்ராதிபதியானாலும் அவர்களுக்கேற்ற சுபபலம்-பாப பலன்களைக் கு(கொ)டுக்க மாட்டார்கள் என்பது.

(வி-ரை) எல்லா கிரஹங்களுமே தம் தசையில் தமது சொந்த புத்தி நடக்கும் ஸமயம், தம்முடைய பாவத்திற்கு ஏற்றபடிக்குச் சுப பலனையோ அல்லது அசுப பலனையோ மனிதர்களுக்குத் தருவதில்லை. ஸம்ஸ்க்ருத வியாக்யானத்தில் கடைசி வாக்யத்தில் கூறியவாறு ("किन्तु पूर्वदशानुगुण्येन शुभाशुभफलं दिशेयुरित्यर्थः" ஆனால் தம்முடைய தசைக்கு முந்திய தசையில் எம்மாதிரியான பலன் நடைபெறுகிறதோ அதற்கேற்ற வகையில் சுப பலனையோ, அசுப பலனையோ கொடுப்பார்கள் என்று) தம் தசைக்குப் பூர்வ தசையில் சுப பலன்கள் நடைபெற்றிருந்தால் தம் தசையில், தம் புக்தியில்

சுப பலன்களையும் தம் தசைக்கு பூர்வ தசையில் அசுப பலனே நடைபெற்றிருந்தால் தம் தசையில் தம் புக்தியில் அசுப பலன்களையும் கொடுப்பார்கள் என்று பொருள். இதனால் தசாநாதர்கள் பொதுவாக ஸ்வபுக்தியில் சுப பலனையளிக்கிறதில்லை. கெட்ட பலனைத்தான் அளிக்கிறார் என்ற கருத்து நிராகரிக்கப்படுகிறது. ஒரு தசையில் ஸ்வபுக்தி காலத்தில் நல்ல பலன்கள் நடக்குமானால், அது பூர்வ தசானுகுணமானது என்பதால், அடுத்து வரும் புக்தி காலங்களில் சுப பலன் நடக்கிறதில்லை. அசுப பலனே நடக்கும் என்ற பரவலான கருத்தும் அங்கீகரிக்கக்கூடியதாகவே தெரிகிறது.

ஶ்லோ. आत्मसम्बन्धिनो ये च ये ये निजसधर्मिणः ।
तेषामन्तर्दशास्वेव दिशन्ति स्वदशाफलम् ॥ २९.

सं. व्या.: आत्मेति — सर्वे ग्रहाः ये च आत्मसम्बन्धिनः आत्मनः सहावस्थानादिधर्मः येषां ते च ये ये निजसधर्मिण आत्मसम्बन्धिना सहिताः शुभाशुभभावाधिपत्येन स्वदशासु तेषामन्तर्दशास्वेव भूक्तिष्वेव स्वदशाप्रयुक्तशुभाशुभफलं दिशन्ति ॥

(தா-ம்) ஒருவரோடொருவர் சேர்ந்த க்ரஹங்களும், ஸ்வக்ஷேத்திரத்திலிருந்த (?) கிரஹங்களும் அவரவர் தசையில், அவரவர் புக்தியில் சுபாசுப பலன்களைக் கொடுப்பார்கள்.

(வி-ரை) எல்லா கிரஹங்களுமே தம்முடன் சம்பந்தமுள்ள கிரஹங்களின் தசா காலங்களில், தம்முடைய அந்தர் தசை (புக்தி) நடக்கும் சமயம் தமது பாவாதிபத்யத்திற்கு ஏற்றபடி சுப பலன்களையோ, அசுப பலன்களையோ தருவார் என்று பொருள். உதாரணமாக ஒரு த்ரிகோணாதிபதியின் சுப தசை நடக்கும்பொழுது, அத்தசையில் தன்

சுய புக்தி நடக்கும்போது சுபபலன் தருவதுபோல் அதனுடன் சேர்ந்துள்ள இன்னொரு திரிகோணாதிபதியின் தசாபுக்திகளிலும் சுபபலன்கள் ஏற்படும். அசுப ஸ்தானத்தி லுள்ள கிரஹத்தின் சுயபுக்தியில் அசுப பலன் அமைவது போல அந்த கிரஹத்துடன் சேர்ந்த கிரஹத்தின் தசா புக்தியில் அசுப பலனே அமையும்.

ஶ்லோ. इतरेषां दशानाथविरुद्धफलदायिनाम् ।
तत्तत्फलानुगुण्येन फलान्यूह्यानि भुक्तिषु ॥ ३०

सं. व्या. : इतरेति — इतरेषां दशानाथविरुद्धफलदायिनां वर्तमानदशानाथस्य यद्विरुद्धं फलं तद्दायिनां इतरेषामात्मसम्बन्धरहितानां ग्रहाणां भुक्तिषु तत्तत्फलानुगुण्येन फलान्यूह्यानि ॥

(தா-ம்) தசாநாதனுக்கு விரோதமான கிரஹங்களின் புக்தியில் அந்த சத்ரு ஸ்தானாதிபதிகள் எந்த பாவத்தில் இருந்தார்களோ அதை அறிந்து அவர்கள் புக்திக்குப் பலன் சொல்வது.

(வி-ரை) ஒரு தசாநாதன் சுபபலனைக் கொடுப்பதாக வைத்துக்கொண்டால் அதற்கு விருத்தமான பலன் தருகிற வேறு கிரஹங்களின் புக்தி காலங்களில் ஏற்படக்கூடிய பலன்கள் விஷயத்தில் அந்த புக்திநாதன் இருக்கும் பாவத் திற்குத் தகுந்தவாறு அறியவேண்டும். உதாரணத்திற்கு ரிஷப லக்னத்தை எடுத்துக்கொள்வோம் இந்த லக்னத் திற்கு 9—10க்குடையவன் என்பதால் சனி யோககாரகன். சனி தசையில் பொதுவாக சுபபலன்களே நடக்கவேண்டும், ஆனால் அவனுடன் அசுப பாவாதிபதிகள் 3–6–11க்கு உடையவர்கள் சேர்ந்திருப்பின் அவர்களின் தசைகள் நடக்கும் காலத்தில் — யோககாரகனாகிய சனியின் புக்தி நடக்கும் காலத்தில் — சுபபலன்கள் ஏற்படாமல் மாறாக அசுப பலனே நடக்கும். இதுபோலவே பாப பலனைத்

தரவேண்டிய ஒரு அசுப கிரஹத்தின் (3–6–11க்கு அதிபதி களின்) தசைகள் நடக்கும்போது அவர்களுடன் சேர்ந்த சுப பலன் தருகிற த்ரிகோணாதிபதிகளின் தசையில், அசுப கிரஹங்களின் புக்தி காலம் வரும்போது, அசுப பலன் ஏற்படாது—சுப பலனே ஏற்படும் என்றும் மேற்கூறிய சுலோகத்திற்கு உட்பொருள் கொள்ளவேண்டியதாகிறது. இவ்விதமே பிற சுபாசுப கிரஹ விஷயத்திலும் பொருள் கொள்ளவேண்டியதாகிறது.

श्लो. स्वदशायां त्रिकोणेशो भुक्तौ केन्द्रपतेःशुभम् ।
दिशेत्सोऽपि तथा नो चेदसम्बन्धेऽपि पापकृत् ॥ २१

सं. व्या. : स्वदशायामिति — त्रिकोणेशः पापकृत् स्थानान्तराधिपत्यादि-दोषदुष्टो न चेत् असम्बन्धेऽपि केन्द्राधिपेन साकं सम्बन्धे असत्यपि स्वदशायां केन्द्राधिपतेः भुक्तौ शुभं दिशेत् । सोऽपि-तथा एतद्विशेषणविशिष्टः केन्द्राधिपोऽपि स्वदशायां त्रिकोणाधिपभुक्तौ शुभं दिशेदित्यर्थः । दशानाथभुक्तिनाथयोः उभयोरपि दोषराहित्येन भवितव्यमिति ज्ञेयम् ॥

(தா-ம்) த்ரிகோணாதிபதியான கிரஹங்கள் பாப கிரஹ ஸம்பந்தமில்லாதிருந்தால் அந்த த்ரிகோணாதிபதி யினுடைய தசையில் கேந்திராதிபதிகளின் புக்திகளில் சுப பலத்தைக் கொடுப்பார்கள்.

(வி-ரை) ஒருத்ரிகோணாதிபதி 3–6–11 போன்ற துஸ்ஸ்தானாதிபத்யமில்லாதவராக இருந்தும், ஒரு கேந்தி ராதிபதியின் சம்பந்தமும் பெறாமலிருந்தாலும்கூட, த்ரிகோணாதிபதிகளின் புக்தி காலங்கள் வரும்போது சுப பலனையே கொடுப்பார்கள் என்று ஆகிறது. உதாரணம்—கடக லக்னத்திற்கு குரு 6, 9 ஆகிய இரு இடங்களுக்கு

அதிபதியாகிறார். அவர் 9க்கு உடையவராவது காரண மாக சுபன். 8க்குடையவர் என்பதால் அசுபன். இப்படிக் கில்லாமல் கேவலம் சுப ஸ்தானமான ஒரு த்ரிகோணத் திற்கு மட்டும் அதிபதியாக இருப்பின் அந்த கிரஹம் பூர்ண சுபனாகக் கருதப்படுவார், அந்த கிரஹத்திற்கு எந்த கேந்திராதிபதியின் சம்பந்தமும் இல்லாமலிருந் தாலும் பூர்ண சுபனான அந்த த்ரிகோணாதிபதியின் தசையில் உடன் இருக்கும் துஸ்ஸ்தான சம்பந்தமில்லாத கேந்திராதிபதியின் புக்தி காலத்தில் சுபபலனே ஏற்படும். எனவே, தசாபுக்திநாதர்களான த்ரிகோணாதிபதியோ, கேந்திராதிபதியோ துஸ்ஸ்தான (அசுபஸ்தான) சம்பந்த மற்றவராக இருந்தாக வேண்டும் என்பது கருத்து. பொதுவாக ஒரு த்ரிகோணாதிபதியும் கேந்திராதிபதியும் சேர்ந்திருப்பின் சுபபலன் ஏற்படும் என்பது நியதியல்லவா! அப்படிக்கு ஒரு திரிகோணாதிபதிக்கு கேந்திராதிபதியின் சம்பந்தமோ அல்லது கேந்திராதிபதிக்கு த்ரிகோணாதி பதியின் சம்பந்தமோ இல்லாதிருந்தாலும் தசாநாதனான த்ரிகோணாதிபதியும் கேந்திராதிபதியும் புக்திநாதனான கேந்திராதிபதியும் த்ரிகோணாதிபதியும் அசுபஸ்தான சம்பந்தமில்லாதவர்களாக இருந்தாக வேண்டியது அவசியம்.

अथ राजयोगभुक्तिलक्षणमुच्यते —

श्लो. आरम्भो राजयोगस्य भवेन्मारकभुक्तिषु ।
प्रथयन्ति तमारब्धं क्रमशः पापभुक्तयः ॥ ३२

सं. व्या.: आरम्भेति — प्रधानस्यैव मारकस्य भुक्तिषु राजयोगस्यारम्भो भवेत् । आरब्धं तं राजयोगं क्रमशः पापभुक्तयः प्रथयन्ति । योगकारकदशायां भुक्तिनाथानां पापत्वप्रयुक्तदोषो नास्तीत्यर्थः ॥

(தா·ம்) மாரகாதிபதியின் புக்தியின் ஆரம்பத்தில் சுபபலனும், பாப கிரஹங்களின் புக்தியில் ராஜயோகமும்

மார்கமும் கொடுப்பார்கள். தசா நாதனுடன் சம்பந்தப் பட்ட கிரஹ புக்தியில் ராஜயோகம் தசா நாதனுடன் ஸம்பந்தமில்லாத சுபகிரஹ புக்தியில் ஸமமான பலனும் தசா நாதனுடன் சம்பந்தமில்லாத யோககாரகனின் புக்தியில் ராஜயோகமுமாக இந்தப்படிக்குக் கொடுப்பார்கள் என்பது.

(வி-ரை) ராஜயோககாரக கிரஹங்கள், தத்தம் தசையில் ராஜயோகத்தை அளிக்கவே செய்கிறார்கள். ராஜயோக தசை நடக்கும் காலத்தில் தொடர்ந்து வருகிற பாப கிரஹ புக்தி காலங்களிலும்கூட சுபபலனே நடக்கும் என்பது பொதுக் கருத்தாகிறது. ஸம்ஸ்கிருத ச்லோகத்திலோ "मारकभुक्तिषु राजयोगस्य आरम्भो भवेत्" என்று சொல்லியிருப்பதைக் காணும்போது, "ராஜயோகம் மாரக கிரஹங்களின் புக்தி காலங்களில் ஆரம்பமாகும் என்று பொருள் ஆகிறது. அத்துடன் அவ்வாறு ஆரம்பமான ராஜயோக பலன்கள் தொடர்ந்து ஏற்படக்கூடிய அசுப ஸ்தானாதிபதி களின் புக்தி காலங்களில் மேலும் பெருக்கமடைகின்றன என்று கூறப்பட்டிருக்கிறது. இதன் உட்பொருளாவது, ஒருவருக்கு ராஜயோக தசை நடக்கும் ஸமயத்தில் இதர பாப கிரஹங்களின், மாரக கிரஹங்களின் புக்திகள் ஏற்படும்பொழுது. பிரதான ராஜயோக பலன்கள் தடையின்றி நடக்கும். புக்தி நாதர்களான பாப கிரஹங்களும், மாரக கிரஹங்களும் ராஜயோக பலன்களைத் தடை செய்கிறதில்லை என்பதேயாகும்.

श्लो. तत्सम्बन्धिशुभानां च तथा पुनरसंयुजाम् ।
शुभानां तु समत्वेन नासम्युग्योगकारिणाम् ॥ ३३

सं. व्या. : तत्सम्बन्धीति — तत्सम्बन्धिशुभानां च योगकारकसम्बन्धि शुभानां च भुक्तयः राजयोगान् प्रयच्छन्ति, । पुनरसंयुजां शुभानां तु असम्बन्धिशुभग्रहाणां तु भुक्तयः समत्वेन प्रयच्छन्ति,

यथापूर्वं स्थापयन्ति । "आत्मसम्बन्धिनो ये च" इति श्लोके-नैवास्यार्थस्य सिद्धत्वेऽपि योगकारकलक्षणस्य प्रकारान्तरत्वा-द्योगशब्दार्थवैशद्यार्थं पुनरप्युक्तः । असंयुक्तयोगकारिणां भुक्तिस्तत्सम्बन्धिराजयोगकारकभुक्तय: क्रमशोऽपि समत्वे-नापि प्रथयन्ति । किन्तु राजयोगफलानि स्वीकुर्वन्तीत्यर्थः । अस्मिञ्छ्लोकेऽयं विशेषः ।

(தா-ம்) தசா நா தனுடன் சம்பந்தப்பட்ட சுப கிரஹங்களின் புக்தியில் ராஜயோகமும் தசா நா தனுடன் ஸம்பந்தமில்லாத சுபகிரஹங்களின் புக்தியில் ஸமமான பலனும் தசா நா தனுடன் சம்பந்தமில்லாத யோககாரகர் புக்தியில் வரிசையாய் ஸமமான பலனும் ஆக இப்படிக்கு (கொ)டுப்பார்கள் என்பது.

(விசே-ர) சுபகிரஹங்கள், ராஜயோககாரக கிரஹ ஸம்பந்தம் பெற்றிருப்பின் சுபபலன்கள் ஏற்படத் தடையில்லை. அப்படி ராஜயோககாரக ஸம்பந்தம் பெறா திருக்கும் சுபகிரஹங்களின் புக்தி காலத்தில் ஏற்படும் பலன்களில் விசேஷமான உயர்ந்த பலன்கள் ஏற்படுமெனக் கூறுவதற்கில்லை. சுமாரான பலன்களையே எதிர்பார்க்கலாம். சுபகிரஹ ஸம்பந்தம் பெறா திருக்கும் ராஜயோக காரகர்களின் புக்திகளில், நல்ல பலன்கள் இருக்கும் என்பதன்றி, விசேஷித்து உயர்வான பலன்கள் ஏற்படுமென்று சொல்வதற்கில்லை. சுபகிரஹ ஸம்பந்தம் பெறா திருக்கும் ஒரு கிரஹத்தின் தசாகாலத்தில் ஏற்படும் ராஜயோககாரக கிரஹத்தின் புக்தியில் உயர்வான பலன் ஏற்படுவதற்கில்லை, என்பது தாத்பர்யம்.

श्लो. शुभस्य स्वावियुक्तस्य दशायां योगकारकः ।
स्वस्वभुक्तिषु यच्छन्ति क्वचिद्योगजं फलम् ॥ ३४

सं. व्या. : शुभदयेति — योगकारकग्रहाः स्ववियुक्तस्य स्वसम्बन्धरहितस्य शुभग्रहस्य दशायां स्वभुक्तिषु योगजं फलं क्वचिद्यच्छन्ति दिशन्ति । स्वस्वभुक्तिषु स्वेषां भुक्तिषु योगजं फलं क्वचिद्दिशन्तीत्यर्थः ॥

(தா-ம்) யோககாரக கிரஹங்கள் தன்னுடன் சம்பந்தமில்லாத கிரஹ தசையில் தங்களுடைய புக்தியில் ராஜ யோகம் கொடுப்பார்கள் என்பதாம்.

(வி-ரை) சுபக்ரஹங்கள் ராஜயோககாரக கிரஹ ஸம்பந்தமில்லாதிருந்து ராஜயோககாரக கிரஹ புக்தி நடக்கும் சமயத்தில் கொடுக்கவேண்டிய ராஜயோக பலன்களை சில ஸந்தர்பங்களில் அளிக்கிறார்கள் என்பதன்றி எப்போதுமே கொடுக்கிறதில்லை.

श्लो. तमोग्रहौ शुभारूढावसम्बन्धौ च केनचित् ।
अन्तर्दशानुरूपेण भवेतां योगकारकौ ॥ ३५

सं. व्या. : तमोग्रहाविति — शुभारूढौ शुभराशिस्थितौ येन केनचित् असम्बन्धौ — ग्रहान्तर — सम्बन्धरहितौ तमोग्रहौ राहुकेतू अन्तर्दशानुसारेण योगकृद्भुक्त्यनुसारेण योगकारकौ योगजं फलं प्रदिशेताम् ॥

(தா-ம்) சுபஸ்தானத்திலிருக்கிற ராஹு கேதுக்கள் ஒரு கிரஹ(ங்களு)த்தோடும் சம்பந்தப்படாமல் தனித்திருந்தால் அவாளுடைய (அவர்களுடைய) தசையில் (?) ராஜ யோகம் கு(கொ)டுப்பார்கள் என்பது.

**ராஹு — கேது இருவரும் ராஜயோகம் தருவார்களா? அவ்வாறு தரும் காலம் எது?**

(வி-ரை) 5ஆமிடம், 9ஆமிடங்கள் சுபராசிகளாகும். ராஹு அல்லது கேது மேற்படி சுப ராசியில் இருக்க நேரிட்டு, அவ்விடத்தில் வேறு கிரஹத்தின் சம்பந்தத்தை அடையாமலுமிருந்து, மேற்படி சுபஸ்தானாதிபதிகளின் தசைகள் நடக்கும் சமயம், தமது புக்தி காலங்களில், ராஜ யோக பலனைக் கொடுப்பார்கள் என்பது கருத்து.

पापग्रहदशाफलम् —

श्लो. पापा यदि दशानाथाः शुभानां तदसम्युजाम् ।
भुक्तयः पापफलदास्तत्सम्युक्छुभभुक्तयः ॥ ३७

सं. व्या.: श्लोकद्वयस्याप्येकान्वयः पापा यदीति : — तदसंयुजां तत्सम्बन्धरहितानां शुभानां ग्रहाणां भुक्तयः पापफलदा भवन्ति । तत्सम्युक्छुभभुक्तयः तद्दशानाथसम्बन्धिनां शुभ-ग्रहाणां भुक्तयः मिश्रफलदा भवन्ति । दशानाथाः पापाः यदीति सर्वत्रान्वयः ।

(தா-ம்) பாப கிரஹங்களின் தசையில் அவாளுடன் கூடாத சுபகிரஹ புக்தியில் பாப பலமும், அந்த தசையில் அந்த பாபர்களுடன் ஸம்பந்தப்பட்ட சுபகிரஹங்களின் புக்தியில் மிச்ரமான — சுபபலனும் பாபபலனும் கலந்த பலனும், அந்த பாபர்களுடன் சம்பந்தப்பட்ட (படாத) யோககாரகாள் (காரகர்கள்) புக்தியில் அதிகமான பாப பலனும் ஆக இந்தப்படி கு(கொ)டுப்பார்கள் என்பது.

### பாப கிரஹ தசா பலன்

(வி-ரை) 3—6—11 ஆகிய பாபஸ்தானாதிபதிகளின் தசைகள் நடக்கிறதாயிருந்தால், அந்த பாப கிரஹங்களின்

தசைகளில், மேற்படி தசாநாதர்களான பாபகிரஹங்க ளுடன் சம்பந்தமேதுமில்லாத கிரஹங்களுடைய புக்தி காலங்களில் பாபபலனே அனுபவமாகும். பாபியான் மேற்படி தசாநாதர்களுடன் கூடிய (சம்பந்தப்பட்ட) சுப கிரஹங்களின் புக்தி நடக்கும்போது புக்திநாதனான சுபக் கிரஹானுஸாரம் சுபபலனும் தசாநாதனின் (பாபியின்) ஸ்வபாவானுஸாரம் பாபபலனுமாக இரண்டும் கலந்த சுப-அசுப பலன்கள் நடக்கும். மேற்படி தசாநாதர்களான பாபிகளுடன் சம்பந்தம் ஏதும் பெறாத ஆனால் ராஜயோகம் தரக்கூடிய கிரஹங்களுடைய புக்திகள் வரும் போது மிக அதிக பாப பலன்களே அனுபவமாகும். இரு ச்லோகங்களுமே ஒரே கருத்தை உபதேசிப்பவையாகும்.

मारकग्रहदशाफलम् —

श्लो. सत्यपि स्वेन सम्बन्धे न हन्ति शुभभुक्तिषु ।
हन्त्यसत्यपि सम्बन्धे मारकः पापभुक्तिषु ॥ ३९

सं. व्या. : सत्यपीति — मारकस्तल्लक्षणलक्षितो ग्रहः स्वदशायां भुक्तिनाथस्य शुभस्य स्वेन सम्बन्धे न सत्यपि तच्छुभभुक्तिषु न हन्ति । स्वेन भुक्तिनाथस्य सम्बन्धे असत्यपि पापभुक्तिषु हन्ति । अन्यदपि मारकभुक्तिफलं सर्वं पूर्वोक्तमेव द्रष्टव्यम् ॥

(தா-ம்) மாரக கிரஹங்கள் தன் தசையிலே தன்னுடன் சம்பந்தப்பட்ட சுபகிரஹ புக்தியில் மாரகம் செய்யமாட்டார்கள். மாரகாதிபதி சம்பந்தமில்லாத பாப கிரஹ புக்தியில் மாரகம் செய்வார்கள் என்பது.

மாரக கிரஹ தசாபலன்

(விரை) மாரக கிரஹங்கள் யாவர் என்பது முன்னரே சொல்லப்பட்டது. 2-7க்கு உடையவர்கள்.

அவர்களோடு சேர்ந்தவர்கள் முதலானோர் மாரக கிரஹங்களாகக் கூறப்பட்டது. ஒரு மாரக கிரஹத்தின் தசை நடக்கும்பொழுது அதனுடன் சம்பந்தம் பெற்றுள்ளது சுபகிரஹமானால் அதன் புத்தியில் மரணம் ஏற்படுத்துவதில்லை. மாரகனுடன் சேர்ந்தவனும் மாரகம் செய்யலாம். என்று முன்பு கூறப்பட்டிருந்தாலும் இங்கு மாரக கிரஹ தசை நடக்கும்போது அவனுடன் கூடியது சுபகிரஹமாகில் அந்த மாரக கிரஹத்தின் தசையில் சுப கிரஹ புக்தியில் மாரகம் சம்பவிக்காது. மேலும் மாரக தசை நடக்கும் போது மாரக கிரஹ ஸம்பந்தமே இல்லாத பாபியான புக்திநாதனுடைய காலத்திலும் கூட மாரகத்தைச் செய்வர் மரணத்தை ஏற்படுத்தலாம்.

ஶ்லோ. परस्परदशायां तु स्वभुक्तौ सौरिभार्गवौ ।
प्रदिशेतां व्यत्ययेन विशेषेण शुभाशुभम् ॥ ५०

सं. व्या. : परस्परमिति — सौरिभार्गवौ – शनिशुक्रौ परस्परदशायां विमनान्नायां स्वभुक्तौ व्यत्ययेन विनिमयेन विशेषेण शुभाशुभं प्रदिशेताम् । शनिदशायां शुक्रभुक्तौ शुक्रदशायां शनिभुक्तौ तद्दशाभुक्तिप्रयुक्तशुभाशुभफलानि विशेषेण भवन्ति इत्यर्थः ॥

(தா-ம்) சனி தசையில் சுக்ர புக்தியிலும், சுக்ர தசையில் சனி புக்தியிலும் தசா நாயகன் சுபனானால் சுபபலனும் பாபியானால் பாப பலனும் குறைகொடுப்பார்கள் என்பது.

(விசே-ர) "परस्परदशायां तु स्वभुक्तौ सूर्यभार्गवौ" என்று ஒரு சுலோகம் சில நூல்களில் காணப்படினும், இந்நூலகத்தில் உள்ள மூலச்சுவடியில் **सौरिभार्गवौ** என்ற சுலோகம் மட்டுமே உள்ளதால் அதனையனுசரிந்து பொருள் கூறப்படலாகிறது.

ஒரு ஜாதகத்தில் சனி சுபனாக இருப்பின் அவனுடைய தசையில் சுக்ர புக்தி காலத்தில் சுபபலன்கள் விசேஷமாக ஏற்படும். அதே போல் ஒரு ஜாதகத்தில் சுக்ரன் சுபனாக

இருந்தால் அவருடைய தசையில் சனி புக்தியில் விசேஷமாக சுப பலன்களே நடக்கும். இதுபோல் சனி சுக்ரர்கள் அசுபர்களாகியிருப்பின் சனி தசையில் சுக்ர புக்தியிலும், சுக்ர தசையில் சனி புக்தியிலும் விசேஷ அசுப பலனே நடக்கும்.

ग्रहाणां लग्नप्रयुक्तशुभाशुभत्वम् —

श्लो. प्रतिलग्नं समालक्ष्य पूर्वोद्दिष्टाविरोधतः ।
तत्तद्ग्रहस्वरूपाणि क्रमेणैव विवृण्महे ॥ ४१

सं. व्या. : प्रतिलग्नमिति — प्रतिलग्नं मेषमारभ्य प्रतिलग्नं समालक्ष्य समारभ्य पूर्वोद्दिष्टाविरोधतः ग्रहाणां पूर्वोद्दिष्ट—पूर्वोक्तशुभाशुभत्वाविरोधेन तत्तद्ग्रहस्वरूपाणि तत्तद्ग्रहाणां शुभाशुभत्वमारकत्व तारतम्यानि क्रमेणैव शुभाशुभ – प्राबल्य – क्रमेणैव विवृण्महे । तच्च प्राबल्यं प्रथमोद्दिष्टापेक्षया तदनन्तरोद्दिष्टस्य किञ्चिन्न्यूनत्वं तदपेक्षया तदनन्तरोद्दिष्टस्येत्येवं क्रमेणैवेति भावः । क्रमेण मेषादीनां फलानि मन्दसौम्येत्यादिश्लोकैरुच्यन्ते । तेषां श्लोकानां स्पष्टार्थत्वान्न व्याख्यातम् ॥

(தா-ம்) மேஷம் முதலான 12 ராசிகளுக்கு நவக்ரஹங்களின் சுபாசுபத்வ விரோதமில்லாமல் கிரஹங்களின் சுபாசுபத்வ தாரதம்யத்தைச் சொல்லுகிறார்.

(வி-ரை) லக்ன ரீதியில் கிரஹங்களின் சுப- அசுபத்வம் இதில் சொல்லப்படுகிறது.

கிரஹங்களில் நைஸர்கிக சுபாசுபத்வம் என்பது பொதுவான தர்மம். இதற்குமுன் சொல்லப்பட்டிருப்பதற்கு அனுஸரணையாக (கிரஹங்களின் சுபாசுபத் தன்மைக்கு

விரோதமில்லாமல்) மேஷம் முதல் மீனம் வரையிலான 12 லக்னங்களுக்கும் சூரியன் முதலான கிரஹங்கள் சுபர்களாகவோ, அசுபர்களாகவோ ஆகின்றனர். முன்பு கூறியுள்ள தற்கேற்பவே கிரஹங்களின் சுபத்வம், அசுபத்வம், மாரகத்வம் முதலானவற்றின் தாரதம்ய பாவத்தை (Comparative value/Difference) இதுமுதல் முறையாக விளக்குகிறோம்.

ஸ்லோ. मन्दसौम्यसिताः पापाः शुभौ गुरुदिवाकरौ ।
न शुभं योगमात्रेण प्रभवेच्छनिजीवयोः ॥ ४२

परन्तु तेन जीवस्य पापत्वमपि सिध्यति ।
कविः साक्षान्निहन्ता स्यान्मारकत्वेन लक्षितः ॥ ४३

मन्दादयो निहन्तारो भवेयुः पापिनो ग्रहाः ।
शुभाशुभफलान्येवं ज्ञातव्यानि क्रियाभुवः ॥ ४४

குறிப்பு: இது முதல் சுலோகங்களின் கருத்து எளிதாக இருப்பதால் ஸம்ஸ்கிருத உரை இல்லை.

(தா-ம்) மேஷ லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு சனி, புதன், சுக்ரா(ரர்க)ள் பாபிகள். குரு, சூர்யா(ர்க)ள் சுபர். சனியானவன் பிரஹஸ்பதி (குரு)வுடன் ஸம்பந்தப் பட்டிருந்தால் குருவானவர் சுபபலத்தைக் கு(கொ)டுக்க மாட்டார். பாப பலத்தைக் கு(கொ)டுப்பார். மாரக கிரஹங்களுடன் சம்பந்தப்பட்ட (?) சுக்ரனும், சனி முதலான பாப கிரஹங்களும் மாரகம் செய்வார்கள் என்பது,

(வி-ரை) மேஷ லக்னத்திற்கு உரிய சுபாசுப—மாரக கிரஹங்கள் பற்றி சொல்லப்படுகிறது.

மேஷ லக்னத்திற்கு 10-11க்கு உடைய சனி, 3-6க்கு உடைய புதன், 2-7க்கு உடைய சுக்ரர் மூவரும் பாபிகள்

ஆவர். 9-12க்கு உடைய குருவும், சூர்யனும் சுபர்கள் ஆவர். 9-10க்கு உடைய கிரஹங்கள் சேர்க்கை/பார்வை முதலானது இருப்பின் பொதுவாக ராஜயோக பலனை அளிப்பர் என்பதாகப் பொதுவிதி. இருப்பினும், மேஷ லக்னம் சம்பந்தப்பட்ட வரையில் 9க்கு உடைய குருவும், 10க்கு உடைய சனியும் சேர்க்கையேற்படின் ராஜயோக பலனைத் தருவதில்லை. இக்கருத்தை "பாவார்த்த ரத்னாகரம்" என்னும் நூலின் ஆசிரியரான ஸ்ரீ ராமாநுஜா சார்யார் அவர்களும்,

" मेषलग्ने तु जातस्य राजयोगो न लभ्यते ।
भाग्यराज्येशसम्बन्धमात्रेण हि न संशयः ॥ "

என்றவாறு கூறுகிறார். அதுமட்டுமின்றி அந்தச் சனியின் ஸம்பந்தத்தால் குருவுக்கு அசுபத்வம் கூட ஸித்திக்கிறது (ஏற்படுகிறது). 2-7க்கு உடையவனாவது பற்றி சுக்ரன் கேந்திராதிபத்ய யோகம் காரணமாகவும், 7ஆமிடத்திற்கு மாரகஸ்தானத்திற்கு அதிபதி என்ற காரணத்தால் மாரக னாகிவிடுகிறார், எனவே சுக்ரன் ஸாக்ஷாத்தாகவே (இதர மாரகாதி கிரஹ சம்பந்தமின்றியே) மாரகனாகிவிடுகிறார். சனியும், புதனும், சுக்ரனும் ஆகிய இந்த பாப கிரஹங்கள் மாரகர்களாகவே ஆகிறார்கள். அவர்கள் தம் தசா புக்தி காலத்தில் மாரகம் செய்வர். இவ்வாறே ரிஷபம் முதலான லக்ன விஷயத்திலும் பலன்கள் கண்டறிந்து சொல்ல வேண்டும்.

ஸ்லோ. जीवशुक्रेन्दवः पापाः शुभौ शनिदिवाकरौ ।
राजयोगकरः साक्षादेक एवाम्शुमत्सुतः ॥ ४५

जीवादयो ग्रहाः पापा घ्नन्ति मारकलक्षणाः ।
बुधस्तत्तत्फलान्येवं ज्ञेयानि वृषजन्मनः ॥ ४६

(தா-ம்) விருஷப லக்னத்தில் பிறந்தவானுக்கு குரு சுக்ர சந்திரர்கள் (ஏர்கள்) பாபிகள். சனி சூரியன் சுபர்.

சனி ஒருவனும்(னே)ராஜயோகர் கு(கொ)டுக்கப்பட்டவன். முன் சொன்ன பாப கிரஹங்கள் மாரகம் செய்வார்கள் என்பது.

(வி-ரை) விருஷப லக்னத்திற்கு 8-11க்கு உடைய குருவும், 1-6க்கு உடைய சுக்ரனும் 3க்கு உடைய சந்திரனும் பாபிகள். 9-10க்கு உடைய சனியும் 4க்கு உடைய சூர்யனும் சுபர்கள். ஸூர்யனின் புத்ரரான சனி ஒருவரே இந்த லக்னத்திற்கு ராஜயோகம் செய்யக்கூடியவர். குரு, சுக்ரன், சந்திரன் இம்மூவரும் மாரக லக்ஷணம் பொருந்தியவர் என்பதால் இந்த லக்னத்திற்கு, மேலே கூறப்பட்ட குரு, சுக்ர, சந்திரர்கள் தத்தம் தசாபுக்தி காலத்தில் மாரகம் செய்வார்கள், இவ்விதம் விருஷப லக்னத்தில் பிறந்தவர்கள் விஷயத்தில் வித்வான்கள் பலன்களை ஊகித்தறிந்து சொல்லவேண்டும்.

ஸ்லோ. भौमजीवारूयाः पापा एक एव शुभःकविः ।
शनैश्चरेण जीवस्य योगो मेषभुवो यथा ॥ ४७
नालं शनिर्निहन्तुं तल्लक्षणात्पापिनस्त्वलम् ॥

(தா-ம்) மிதுன லக்னத்தில் பிறந்தவா(வாக)னுக்கு செவ்வாய், குரு, ஸூர்யன் பாபிகள். சுக்ரன் சுபன். குருவானவர் சனியுடன் ஸம்பந்தப்பட்டால் மேஷத்திற்குச் சொல்லியதுபோல் யோகத்தைக் கு(கொ)டுப்பார்.

(வி-ரை) மிதுன லக்னத்திற்கு 6-11க்கு உடைய செவ்வாயும், நைஸர்கிக சுபனாகி கேந்திராதிபதியான காரணத்தால் குருவும், 3க்கு உடைய சூரியனும் பாபிகள். 5-12க்கு உடைய சுக்ரன் ஒருவனே சுபன். 9ஆமிடத்துக்கு உடையவனாயினும் 8ஆமிடத்திற்கும் உடையவனான சனியுடன் 7-10க்கு உடைய குரு ஸம்பந்தப்பட்டால் மேஷ லக்னத்தில் ஜனித்தவனுக்குச் சொல்லப்பட்டது போன்ற பலன் சொல்லப்படவேண்டும். மிதுன லக்னத்தில் ஜனித்தவனுக்கு சனி மாரகன் அல்லன்; கொல்லமாட்டார்.

ஆனால் மாரக லக்ஷணம் பொருந்திய மற்ற மேலே கூறப்பட்ட பாபிகள் தத்தம் தசாபுக்தியில் மாரகம் செய்வார்கள்.

मतान्तरम् —

श्लो. कुजभान्विन्दवः पापा एक एव शुभः कविः ।
राजयोगकरौ शुक्रसोमपुत्रौ शुभान्वितौ ॥ ४८

शनिजीवसमायोगात्फलं मेषभुवो यथा ।
शनिः साक्षान्नहन्ता स्यान्मारकत्वेन लक्षितः ॥ ४९

भौमादयो निहन्तारो भवेयुः पापिनो ग्रहाः ।
शुभाशुभफलं ह्येयं ज्ञातव्यं युगजन्मनः ॥ ५०

**மிதுன லக்ன விஷயத்தில் — இன்னொரு கருத்து**

(தா-ம்) அங்காரக ஸூர்ய சந்திரர் பாபிகள். சுக்ரன் சுபன். சுபனுடன் ஸம்பந்தப்பட்ட சுக்ர. புதன் (சுக்ரனும் புதனும்) ராஜயோகம் கொடுப்பார்கள். சனியானவன் குருவுடன் சம்பந்தப்பட்டால் மேஷ லக்னத்திற்குச் சொல்லியபடிக்கு பலம் கொடுப்பபன். சனி மாரகம் செய்யமாட்டான். அங்காரகன் முதலான பாப கிரஹங்கள் மாரகம் செய்வார்கள் என்பது கருத்து.

(வி-ரை) இவை ஸரஸ்வதி மகால் நூலகச் சுவடி Coll. No. 1300ல் மட்டும் காணப்படும் மாறுபட்ட கருத்து அமைந்த சுலோகங்கள் 6, 11க்கு உடைய செவ்வாய், 3க்கு உடைய சூரியன், 2க்கு உடைய சந்திரன் (குரு சேர்க்கப்பட வில்லை) இவர்கள் பாபிகள். இந்த லக்னத்திற்கு சனி மாரகன் அல்ல, மற்ற பாபிகள் மூவரும் தத்தம் தசாபுக்தி காலத்தில் மாரகம் செய்வர்.

श्लो. भार्गवेन्दुसुतौ पापौ भूसुताङ्गिरसौ शुभौ ।
एक एव भवेत्साक्षाद्भार्गवो योगकारकः ॥ ५१

निहन्ता रविरन्ये तु पापिनो मारकाह्वयाः ।
कुलीरसम्भवस्यैवं फलान्यूह्यानि सूरिभिः ॥ ५२

(வி-ரை) கடக லக்னத்திற்கு சுபாசுப மாரக கிரஹங்கள் பற்றிக் கூறப்படுகிறது. இந்த லக்னத்திற்கு 4-11க்கு உடைய சுக்ரனும் 3-12க்கு உடைய புதனும் இருவரும் பாபிகள். செவ்வாயும், குருவும் சுபர்கள். சுக்ரன் ஒருவனே ராஜயோககாரகன் 2க்கு உடைய சூரியன் மாரகனாகிறான். மற்ற பாபிகள் மாரகர்களாகிறார்கள் என்று வித்வான்கள் பலன்களை ஊகித்தறிய வேண்டும். இந்த சுலோகத்தில் 4-11க்கு உடைய சுக்ரன் ஒருவனே யோககாரகன் எனக் கூறப்பட்டுள்ளது, ஆய்வுக்குரியது. இந்த கடக லக்னம் சம்பந்தமாக, இந்த ஸரஸ்வதி மஹால் நூலக ஓலைச் சுவடியில் Coll. No. 1300 கூறப்பட்டுள்ள வேறு சுலோகங்களும் தரப்படுகின்றன. அவைகளின் கருத்து வேறுபட்டதாக இருக்கிறது.

**கடக லக்னத்திற்கு சுபாசுபர் — மாரகர் பற்றிய மாறுபட்ட கருத்தமைந்த சுலோகங்கள்.**

श्लो. शुक्रमन्दबुधाः पापाः विदुर्धिषणभूसुतौ ।
राजयोगकरः साक्षादेक एव धरासुतः ॥ ५३

भवेतां राजयोगस्य कारकौ गुरुभूमिजौ ।
रविः साक्षान्न हन्ता स्यान्मारकत्वेन लक्षितः ॥ ५४

शुक्रादयो निहन्तारो भवेयुः पापिनो ग्रहाः ।
कुलीरसम्भवस्यैवं फलान्यूह्यानि सूरिभिः ॥ ५५

(தா-ம்) கடக லக்னத்தில் பிறந்தவா(ர்க)ளுக்கு சனி, புதன், சுக்ரன் பாபிகள். குரு 6க்கு உடையவர் என்பதால் அசுபர் — பாபி; 9க்கு உடையவர் என்பதால் சுபர். அங்காரகன் ஒருத்தனே ராஜயோககாரகன். குரு, குஜன் இருவரும் ராஜயோகம் செய்யப்பட்டவர்கள். மாரகாதிபதியான ஸூர்யன் மாரகம் செய்யமாட்டான். சுக்ரன் முதலான பாபிகள் மாரகம் செய்வார்கள். கடக லக்னத்தில் ஜனித்தவர் விஷயத்தில் இவ்வாறு வித்வான்களால் பலன்கள் ஊஹிக்கத்தக்கவையாகும்.

ஶ்லோ. रौहिणेयसितौ पापौ कुज एव शुभावहः ।
प्रभवेद्योगमात्रेण न शुभं कुजशुक्रयोः ॥ ५६

घ्नन्ति सौम्यादयः पापा हन्तृलक्षणलक्षिताः ।
एवं फलानि ज्ञेयानि सिंहजस्य मनीषिभिः ॥ ५७

(வி-ரை) சிம்ம லக்னத்தில் பிறந்தவர் விஷயத்தில் சுபாசுப மாரக கிரஹங்கள் பற்றிக் கூறப்படுகிறது. சிம்ம லக்னத்திற்கு புதனும், சுக்ரனும் பாபிகள் ஆவர். செவ்வாய் ஒருவரே சுபர். தர்மகர்மாதிபதிகளின் சம்பந்தம், ராஜயோகத்தைத் தரும் என்னும் பொதுவிதி இந்த லக்னத்திற்கும் பொருந்தப்படவில்லை. சுக்ரன் 10க்கு உடையவர் என்றாலும், 3ஆமிடத்தின் அதிபதியாவதால் பாபியாகி விடுகிறார். எனவே 9க்கு உடைய செவ்வாயும், 10க்கு உடைய சுக்ரனும் சம்பந்தப்பட்டிருந்தால் சுபபலன் ஏற்படுவதற்கில்லை புதன் 2க்கு உடையவன் என்பதுடன் 11க்கும் உடையவன் என்பதால் புதனும், 3க்கு உடையவன் என்பதால் சுக்ரனும் மாரக லக்ஷணம் பொருந்தியுள்ள காரணத்தினால் மாரகம் செய்வார்கள்.

(ஸரஸ்வதி மஹால்) இந்நூலகச் சுவடியில்
சிம்ம லக்ன விஷயத்தில் காணப்படும் பாடபேதம்

श्लो. मन्दसौम्यसिताः पापाः कुज एव शुभावहः ।
प्रभवेद्योगमात्रेण न शुभं गुरु (कुज) शुक्रयोः ॥ ५८

गुरुयुक्तो यदा (यथा) भौमो विशेषफलदायकः ।
बुधः साक्षान्न हन्ता स्यान्मारकत्वेन लक्षितः ॥ ५९

घ्नन्ति सौम्यादयः पापाः मारकत्वेन लक्षिताः ।
एवं फलं विनिश्चेयं सिंहजस्य मनीषिभिः ॥ ६०

(தா-ப.) சிம்ம லக்னத்தில் பிறந்தவர்களுக்கு சனி, புதன், சுக்ரன் பாபிகள். குஜன் (செவ்வாய்) ராஜயோக காரகன். குரு-சுக்ரன் சம்பந்தப்பட்டால் சுபபலமில்லை. (இங்கு குரு என்பதற்கு பதில் குஜன் என்று இருத்தல் சரியாகும்) குஜனானவன் (செவ்வாய்) குருவுடன் சம்பந்தப் பட்டால் விசேஷமான பலத்தைக் கொடுப்பான். (இங்கு கடக லக்ன விஷயத்தில் குருவுடன் சம்பந்தப்பட்டால் செவ்வாய் விசேஷ பலனைக் கொடுப்பதுபோல் செவ்வாய் சுக்ரன். சம்பந்தப்பட்டால் கொடுப்பதில்லை என்ற கருத்தே பொருத்தமுடையது) மாரகாதிபதித்வம் கிடைத்த புதனானவன் மாரகம் செய்ய மாட்டான். பாபிகளான புதன் முதலானவர்கள் மாரகம் செய்வார்கள். 2க்கும் 11க்கும் உடைய காரணத்தால் புதன் மாரக லக்ஷண முள்ளவன், தம் தசா புக்தியில் மாரகத்திற்கொப்பான கண்டத்தை நயவிப்பான் எனப் பொருள் கொள்ளலாம்.

श्लो. कुजजीवेन्दवः पापा एको भृगुसुतः शुभः ।
भार्गवेन्दुसुतावेव भवेतां योगकारकौ ॥ ६१

न हन्ति कविरन्ये तु मारकाख्याः कुजादयः ।
घ्नन्ति पापाः फलान्यूह्यान्येवं कन्याभुवो बुधैः ॥ ६२

சரசுவதி மகால் சுவடியில் உள்ளவாறு:

ஶ்லோ. जीवशुक्रेन्दवः (कुजजीवेन्दव) पापा एको भृगुसुतः शुभः ।
राजयोगकरः सौम्यो भृगुपुत्रसमन्वितः ॥ ६३

न हन्ति कविरन्ये तु मारकाख्याः कुजादयः ।
घ्नन्ति पापाः फलान्यूह्यान्येवं कन्याभुवो बुधैः ॥ ६४

जीवार्कमहिजाः पापाः शनैश्चरबुधौ शुभौ ।
भवेतां राजयोगस्य कारकाविन्दुतत्सुतौ ॥ ६५

(தா-ம்.) கன்யா லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு குருசுக்ர (செவ்வாய்) சந்திரா(ரர்க)ள் பாபிகள். சுக்ரன் சுபன். இந்த சுலோகத்தில் சுக்ரஸ என்பதை பாபியாகச் சேர்த்தது சரியில்லையென்பது சுலோகத்தில் 2வது பாதமே கூறுவதால் சுக்ரனை மாரகன் எனக் கூறுவது சுவடியை எழுதியவரின் கருத்தல்ல. குஜன் என்று எழுதப் பட்டிருக்க வேண்டும்) சுக்ரன் புதன் சுபர்கள். 2–9க்கு உடைய சுக்ரனுடன் 1–10க்கு உடைய புதன் கூடினால் (இருவருக்கும் சேர்க்கை ஏற்படின்) ராஜயோகம் அளிப் பார்கள் சுக்ரன் மாரகம் செய்யமாட்டான். செவ்வாய் முதலான பாபிகள் மாரகம் செய்வார்கள்.

(வி-றை) கன்யா லக்னத்தில் பிறந்தவருக்கு 4–7க்கு உடைய குருவும், 3–8க்கு உடைய செவ்வாயும், 11க்கு உடைய சந்திரனும் பாபிகள். சுக்ரன் ஒருவனே சுபன். 10க்கு உடைய புதனும், 9க்கு உடைய சுக்ரனும் சேர்ந்தால் தர்மகர்மாதிபதி சம்பந்தம் என்பதால் ராஜயோகத்தை அளிப்பர். சுக்ரன் 2க்கு உடையவராயினும் மாரகனல்ல. மற்ற குரு, செவ்வாய், சந்திரன் இவர்கள் மாரக லக்ஷணம் உள்ளவர்களாதலால் அவர்கள் மாரகம் செய்வார்கள் என கன்யா லக்ன விஷயத்தில் பலன்களை ஆய்வு செய்து கூறவேண்டும்.

கிரந்த மூலத்திலுள்ள சுலோகங்களின் கருத்துக்கு ஒட்டியவாறே மேலே கூறப்பட்ட கருத்தும் இருப்பதால் விளக்கவுரை தேவையில்லை.

ஸ்லோ. कुजो न हन्ति जीवाद्याःपरे मारकलाञ्छनाः ।
निहन्तारः फलान्येवं ज्ञातव्यानि तुलाभुवः ॥ ६६

சரசுவதி மகால் சுவடியில் உள்ள சுலோகங்கள் :

ஸ்லோ. जीवार्कग्रहिजाः पापाः शनैश्चरबुधौ शुभौ ।
राजयोगकरः साक्षादेक एवाम्शुमत्सुतः ॥ ६७

भवेतां राजयोगस्य कारकाविन्दुतत्सुतौ ।
कुजः साक्षान्न हन्ता स्यान्मारकत्वेन लक्षितः ॥ ६८

जीवादयो निहन्तारो भवेयुः पापिनो ग्रहाः ।
शुभाशुभफलान्येव ज्ञातव्यानि तुलाभुवः ॥ ६९

(தா-ம்.) துலா லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு குரு சூர்யன் குஜன் (செவ்வாய்) பாபிகள். சனி. புதன் சுபர். சனி ஒருவனே ராஜயோகம் கு(கொ)டுக்கப்பட்டவன். புதன் சந்திரர் ராஜயோகம் கொடுக்கப்பட்டவர். மாரகாதிபதியாகிய அங்காரகன் மாரகம் செய்ய மாட்டான். குரு முதலான பாபிகள் மாரகம் செய்வார்கள்.

(வி-ரை.) துலா லக்னத்தில் ஜனித்தவருடைய விஷயத்தில் 3, 6க்கு உடைய குருவும் 11க்கு உடைய சூரியனும் 1-7க்கு உடைய செவ்வாயும் பாபிகள். 4-5க்கு உடைய சனியும் 9-12க்கு உடைய புதனும் சுபர்கள். சந்திரனும் புதனும் தர்மகர்மாதிபதிகள் என்பதால் சேர்க்கை ஏற்பட்டால் ராஜயோகத்தைக் கொடுப்பார்கள். 2-7க்கு உடைய செவ்வாய் மாரகம் செய்யமாட்டான்.

மற்ற மாரக லக்ஷணம் பொருந்திய குரு சூர்யன் முதலானவர்கள் மாரகம் செய்வார்கள். இவ்வாறு துலா லக்னத்தில் பிறந்தவர்கள் விஷயத்தில் பலன்கள் ஊகித்துக் கூற வேண்டும்.

துலா லக்ன விஷயத்தில் ஒரு அம்சம் சுவடியில் விசேஷித்துக் காணப்படுகிறது "4-5க்கு உடைய சனி ஒருவனே யோககாரகன் ஆவான்" என்பது ஏற்கப்பட வேண்டிய அம்சமே. ரிஷப லக்னத்திற்குச் சனி எவ்வாறு கேந்திர-த்ரிகோணாதிபதியான காரணத்தால் ராஜயோக காரகனோ அதேபோல் துலா லக்ன விஷயத்திலும் 4-5க்கு கேந்திர-திரிகோணங்களுக்கு அதிபதியான சனி ராஜ யோகத்தைச் செய்பவனே.

ஸ்லோ. सौम्यभौमसिताः पापाः शुभ एको निशापतिः ।
सूर्याचन्द्रमसावेव भवेतां योगकारकौ ॥ ७०

जीवो न हन्ता सौम्याद्या हन्तारो मारकादयाः ।
तत्तत्फलानि विज्ञेयान्येवं वृश्चिकजन्मनः ॥ ७१

சரகவதி மகால் சுவடியிலுள்ளவாறு:

ஸ்லோ. बुधशुक्रार्कतनयाः पापाः सुरगुरुः शुभः ।
सूर्याचन्द्रमसावेव भवेतां योगकारकौ ॥ ७२

जीवो न हन्ता सौम्याद्या हन्तारो मारकादयाः ।
तत्तत्फलानि विज्ञेयान्येवं वृश्चिकजन्मनः ॥ ७३

(தா-ம்). விருச்சிக லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு புதன் (8-11க்கு உடையவன்) 7-12க்கு உடைய சுக்ரன், 3-4க்கு உடைய சனி இம் மூவரும் பாபிகள். பிருஹஸ்பதி (குரு) சுபன். ஸூர்ய சந்திரர் யோக காரகர். மாரக

ஸ்தானாதிபதியான குருவானவர், மாரகம் செய்ய மாட்டார். மாரக லக்ஷணமுள்ள புதன் முதலான கிரஹங்கள் மாரகம் செய்வார்கள் என்பது.

(வி-ரை.) விருச்சிக லக்னத்தில் பிறந்த ஜாதகர் விஷயத்தில் 8-11க்கு உடைய புதன், 1-6க்கு உடைய செவ்வாய், 7-12க்கு உடைய சுக்ரன் இம்மூவரும் பாபிகளாவர். 9க்கு உடைய சந்திரன் ஒருவனே சுபன். 9க்கு உடைய சந்திரனும் 10க்கு உடைய சூரியனும் சேர்ந்திடின் ராஜயோகத்தை அளிப்பார்கள். 2ஆம் இடம், 5ஆம் இடம் இவற்றிற்கு அதிபனாகிய குரு மாரகன் அல்ல. மாரக லக்ஷணம் பொருந்தியுள்ள புதன், செவ்வாய் சுக்ரர்கள் தத்தம் தசா புக்தி காலங்களில் மாரகம் செய்வார்கள். இவ்வாறு விருச்சிக லக்னத்தில் பிறந்த ஜாதகர் விஷயத்தில் பலன்கள் ஊகித்து அறியப்பட வேண்டியது.

ஶ்லோ. एक एव कविः पापः शुभौ भौमदिवाकरौ ।
योगो भास्करसौम्याभ्यां स्यान्नि(न)हन्ताम्शुभस्सुतः ॥

घ्नन्ति शुक्रादय पापाः हन्तृलक्षणलक्षिताः ।
ज्ञातव्यानि फलान्येवश्चापजस्य मनीषिभिः ॥ ७५

(தா-ம்) தனுர் லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு சுக்ரன் பாபி. குஜ (செவ்வாய்), ஸௌர்யாள்(யர்கள்) சுபர். சூர்ய-புதனால் யோகம் சனி த்விதீயாதிபதியாக இருந்த போதிலும் மாரகம் செய்யமாட்டான். மாரக லக்ஷணத்துடன் கூடிய சுக்ரன் முதலான பாபர்கள் மாரகம் செய்வார்கள் என்பது.

(வி-ரை) தனுர் லக்னத்திற்கு 6-11க்கு உடைய சுக்ரன் ஒருவனே கொடிய பாபி 5-12க்கு அதிபதியான செவ்வாயும் 9க்கு உடைய சூர்யனுமே சுபர்கள். சூர்யன்—புதன் இந்த இருவர்களுடைய சம்பந்தத்தால் யோகம் உண்டாகும்.

கிரந்த எழுத்துப் புத்தகப்படி சனி மாரகன். சுவடியில் காணப்படும் **न हन्ता अशुभस्सुतः** என்ற வாசகப்படிக்கு சனி மாரகம் செய்யமாட்டார். மாரக லக்ஷணமுள்ள மற்ற கிரஹங்கள் மாரகம் செய்வார்கள்.

श्लो. कुजजीवेन्दवः पापाः शुभौ भार्गवचन्द्रजौ ।
राजयोगकरः साक्षादेक एव भृगोः सुतः ॥ ७६

चन्द्रात्मजेन संयुक्तो विशेषफलदायकः ।
स्वयं नैव नि(न)हन्ता स्यात् मन्दो भौमादयःपरे ॥ ७७

निहन्तारः पापिनस्ते मारकत्वेन लक्षिताः ।
तल्लक्षणा निहन्तारः कविरेकः स योगकृत् ।
ज्ञातव्यानि बुधैरेव फलानि मृगजन्मनः ॥

(தா-ம்.) மகர லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு குஜ (செவ்வாய்), குரு, சந்திரன் இவர்கள் பாபிகள். புதன், சுக்ரர் சுபர். சுக்ரன் ராஜயோககாரகன். சுக்ரன் புதனுடன் சம்பந்தப்பட்டால்தான் அதிகமான பலத்தைக் கொடுப்பான். சனி கொல்லமாட்டான். அங்காரகன் முதலான பாபிகள் மாரகாதிபதிகளுடன் சம்பந்தப் பட்டால் மாரகம் செய்வர்.

श्लो. जीवचन्द्रकुजाः पापाः एको दैत्यगुरुः शुभः ।
राजयोगकरो भौमः कविरेको बृहस्पतिः ॥ ७९

न हन्ता भन्ति सौम्याद्या मारकत्वेन लक्षिताः ।
एवमेव फलान्येवान्यूह्यानि घटजन्मनः ॥ ८०

(தா-ம்.) கும்ப லக்னத்தில் பிறந்தவா(வர்க) 2-11க்கு உடைய குரு, 3-10க்கு உடைய குஜன், 6க்கு உடைய

சந்திரன் பாபிகள், சுக்ரன் சுபன். குஜ-சுக்ரர்கள் ராஜயோககாரர்கள், குருவானவர் த்விதீய மாரகாதிபதியானாலும் மாரகம் செய்யமாட்டார். மாரக லக்ஷணமுள்ள குஜர் முதலான பாபர்கள் மாரகம் செய்வார்கள். இவ்வாறு கும்ப லக்னத்திற்குப் பலன்களை ஊஹித்துக் கூறவேண்டும்.

श्लो. मन्दशुक्राम्शुमत्सौम्याः पापा भौमविधू शुभौ ।
महीसुतगुरू योगकारिणौ नैव भूसुतः ॥ ८१

मारको मारकाभिख्या मन्दाद्या घ्नन्ति पापिनः ।
इत्यूह्यानि बुधैरेतत्फलानि झषजन्मनः ॥ ८२

(தா-ம்.) மீன லக்னத்தில் பிறந்தவா(வர்க)ளுக்கு சனி, சுக்ரன், சூர்யன், புதன் பாபிகள். குஜன் (செவ்வாய்) சந்திரன் சுபர். குஜன் (செவ்வாய்), குரு, (இவர்கள்) யோககாரகர். அங்காரகன் மாரகாதிபதியானாலும் மாரகம் செய்யமாட்டான். மாரக லக்ஷணா(ணம்பொருந்தியவர்க)ளான சனி முதலான பாபிகள் மாரகம் என்பது.

(வி-ரை.) மீன லக்னத்திற்கு 11-12க்கு உடைய சனியும் 3-8க்கு உடைய சுக்ரனும் 6க்கு உடைய சூரியனும் 4-7 கேந்திரங்களுக்கு அதிபதியான புதனும் கொடிய பாபிகள். 2-9க்கு உடைய செவ்வாயும் 5-க்கு உடைய சந்திரனும் சுபர்கள். தர்மகர்மாதிபதிகளான செவ்வாயும் குருவும் சேர்ந்தால், ராஜயோகம் அளிப்பர். செவ்வாய் 2ஆமிடத்திற்கு அதிபதியென்ற காரணத்தால் மாரகனே. ஆனால் மாரக லக்ஷணம் பொருந்திய சனி, சூர்யன், புதன் மூவரும் மாரகம் செய்வர். இவ்வாறு மீன லக்னத்தில் ஜனனமாகியவருக்குப் பலனை ஊகித்துக் கூறவேண்டும்.

श्लो. एवं द्वादशभावानां शुभाशुभफलं विदुः ।
तन्वादिद्वादशानां च भावानां योजयेद्बलम् ॥ ८३

(தா-ம்) இந்தப்படிக்கு த்வாதச (பன்னிரண்டு) பாவங்களின் பலன்களை பெரியோர்கள் சொன்னார்கள். லக்னம் முதலான பன்னிரண்டு பாவங்களின் பலன்களை யோசித்து அறிவது அவசியம்.

श्लो. पुत्रदारादिलाभस्य शुभात्मकतया ग्रहाः ।
प्रदिशन्ति शुभा एव स्वदशायां स्वभुक्तिषु ॥ ८४

सं. व्या. पुत्रदारादीति—शुभा ये ग्रहाः पुत्रदारादिलाभस्य शुभात्मकतया स्वदशाभुक्तिष्वपि पुत्रदारादिलाभं प्रदिशन्तीत्यर्थः ॥

பொருள்: சுபகிரஹங்கள்—புத்ரன், பத்னீ முதலான சுப லாபங்களைத் தம் தசா புக்திகளில் கொடுக்கிறார்கள்.

श्लो. फलानि ग्रहचारेण सूचयन्ति मनीषिणः ।
को वा वक्तुं प्रभवति तमेकं वेधसं विना ॥ ८५
(को वक्ता तारतम्यस्य तमेकं वेधसं विना ॥)

सं. व्या. फलानीति—मनीषिणः ग्रहचारेण फलानि सूचयन्ति । तमेकं वेधसं विना फलानां तारतम्यं तावद् द्वादशानां भावानां फलानि विविच्य वक्तुं को वा प्रभवति । शुभाशुभफलानामियत्तां वक्तुमपि वयं न समर्थाः इति भावः ।

பொருள்: வித்வான்கள் கிரஹங்களின் ஸஞ்சார கதிகளின் நிலையைக் கொண்டு அதற்கான பலன்களைக் குறிப்பாகக் கூறுகிறார்கள் (ஸூசனையாகக் குறிப்பிடுவர்). பன்னிரண்டு பாவங்களின் சுபாசுப பலன்களை ஆராய்ந்து ''உயர்வான அல்லது தாழ்ந்த' பலன்களைப் பற்றி ''பலன்கள் இப்படித்தான் இருக்கும்'' என்ற நிலையைத் தீர்மானமான கருத்தை நம்மைப் படைத்த ப்ரம்மதேவனை தவிர வேறு யார்தான் சொல்வதற்கு இயலும்.

श्लो. योगेषु केचिज्जायन्ते मूढाः काश्मीरगर्दभाः ।
योगास्ते किं करिष्यन्ति स्वदशानामनागमे ॥ ८६

सं. व्या. योगेति — केचिन्मूढाः काश्मीरगर्दभा नराः योगेषु जायन्ते । स्वदशानां स्वकीयदशानामनागमे ते योगाः किं करिष्यन्ति । तेषां नराणां किं फलं प्रदिशन्ति ।

பொருள்: காச்மீர தேசத்துக் கழுதைகள் போன்ற சில அறிவற்றவர்கள் சுபமான ராஜயோகங்களில் பிறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு ராஜயோக பலன்களைத் தரக்கூடிய உத்தம சுப தசைகளே வராமலிருப்பின் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாதிருந்தால், அந்த யோகங்கள் என்ன பலனை அளிக்கப்போகின்றன? எனவே, சிலருக்கு சுப ராஜயோகங்கள் அமைந்திருந்தாலும், சுபராஜயோக பலன்களை அளிக்கக்கூடிய தசைகள், அவர்களின் ஆயுள் காலத்திற்குள் வராவிடில் அவர்களுக்கு ராஜயோக பலன் ஏதும் ஏற்படுவதற்கில்லை.

श्लो. पापिनश्चेद्ग्रहास्तेषामुच्चत्वे सति किं फलम् ।
बलवत्वे पातकानां फलं लभ्येत कर्हिचित् ॥ ८७

सं. व्या. पापिन इति — ग्रहा रव्यादयः पापिनः सन्ति चेत्तेषामुच्चत्वे सति यत्फलमस्ति तत्फलं न लभते नरः । शुभानामेव ग्रहाणां उच्चस्वक्षेत्रादिगुणः नीचशत्रुक्षेत्रादिदोषश्च बलवत्त्व–दुर्बलत्वहेतुरिति भावः ॥

(வி-ரை) சூரியன் முதலான கிரஹங்கள் லக்ன ரீதியாக பாபிகளாக ஆவார்களேயாகில் அந்த சூர்யன் முதலான பாப கிரஹங்கள் உச்சம் பெற்றிருப்பினும் பலன் ஏதும் இல்லை. கிரஹங்கள் உச்சம் பெற்றால் எந்த சுப

பலன்கள் ஏற்படுமோ அந்த பலன்கள் ஏற்படுவதில்லை. இதுபோல் சுப கிரஹங்கள் உச்சம், ஆட்சி முதலான சுப நிலையில் இருப்பின் சுப பலன்கள் உண்டாகும். கிரஹங் களுக்கு நைஸர்கிக சுபத்வமும் அசுபத்வமும், லக்ன ப்ரயுக்த சுபத்வமும் அசுபத்வமும் உண்டு இந்த நூலில் கிரஹங் களுக்கு உள்ள நைஸர்கிக—சுபாசுபத்வம் தவிர. "एतदधिप-पत्यानां ग्रहाः पापफलप्रदाः" என்று கூறப்பட்டவாறு 3-6-11ஆம் இடத்ததிபதிகள் நைஸர்கிக / சுபத்வம் உள்ளவராக இருப்பினும் மேலே கூறப்பட்டவாறு 3-6-11ஆமிடத்தின் ஆதிபத்யம் காரணமாக அசுபராகக் கருதப்படுகிறார்கள். தவிரவும் சுபகிரஹங்கள் கேந்திராதிபத்யம் காரணமாக அசுபராகக் கருதப்படுகிறார்கள். எனவே இங்கு கூறப்பட்டு உள்ள சுலோகத்திற்கு மேலே கூறப்பட்டுள்ள இருவகைக் கருத்துக்களுக்கும் கருத்து வேறுபாடு இல்லாமல் பொருள் கொள்ளல் நல்லது. ஸூர்யன் தான் நைஸர்கிக அசுபன் ஆயிற்றே, அப்படியிருக்க வியாக்யானத்தில் "சூர்யன் முதலான கிரஹங்கள் பாபிகளாக இருப்பின்" என்று சொல்லக் காரணம் என்ன? ஆக சூரியன் முதலானோர் நைஸர்கிக அசுபத்வமிருப்பினும் இந்நூல் ஆசிரியரின் கருத்துப்படி 3-6-11ஆமிடத்தின் ஆதிபத்யமும் பெற்றவ ராயின் அசுபத்வம் மேலும் கூடுகிறது. எனவே, அவ்வாறான பாபக் கிரஹங்கள் உச்சம் பெற்றிருப்பின் ஆட்சியில் இருப்பின் சுபபலன்கள் ஏற்படுவதற்கில்லை. இதுபோல் நைஸர்கிக சுபத்வம் பெற்ற ஒரு கிரஹம் இந்த நூலாசிரியரின் கொள்கைப்படி 3, 6, 11ல் இடத்தின் அதிபதியாவதன் காரணமாக அசுபராகிறார். அவர் அவ்வாறு அசுபராகி உச்சம், ஸ்வக்ஷேத்ரம் பெற்றிருப்பினும் அவர் உச்சம் முதலான சுபநிலை பெற்றிருப்பின், நைஸர்கிக சுபன் உச்சம், ஸ்வக்ஷேத்ரம் பெற்றிருந்தால் என்ன என்ன சுப பலன்கள் ஏற்படும் என்று கூறப்பட்டுள்ளதோ அந்த சுப பலன்கள் ஏற்படாது என்று பொருள் கொள்ள வேண்டும். இதுபோல நீசத்வ சத்ரு க்ஷேத்ர ஸம்பந்தம் ஆகியவற்றிற்குத் தக்கவாறு பொருள் கொள்ளவேண்டும்.

॥ अथ दशकूटाः ॥

# தசவித விவாஹப் பொருத்தங்கள்

ஶ்லோ. दिनं गणं च माहेन्द्रं स्त्रीदीर्घं योनिरेव च ।
राशिराश्यधिपौ वश्यं रज्जुर्नाडीति वै दश ॥ ८९

திருமணத்திற்கான வயதை அடைந்த ஆண் பெண்களுக்கு அவரவர்களுடைய ஜனனகால கிரஹநிலை நக்ஷத்திரங்கள் இவற்றின் அடிப்படையிலான பொருத்தங்கள் இருப்பதையும், இல்லாததையும் தீர்மானிக்கப் பொதுவாகப் பத்துவிதப் பொருத்த நிலைகள் சாஸ்திரங்களில் முக்கியமானவை எனக் கூறப்பட்டுள்ளன. (These are ten considerations for determining the suitability or otherwise of the bridegroom to the and vicevarsa). அவையாவன. 1. தினம், 2. கணம், 3. மாகேந்திரம். 4. ஸ்த்ரீ தீர்கம், 5. யோனி, 6. ராசி, 7. ராசி அதிபதி, 8. வச்யம், 9 ரஜ்ஜு, 10. வேதை, (நாடி) என்பனவாகும். இவையாவும் பெண் ஆண்களின் ஜன்ம நக்ஷத்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை யாகும்.

தினப் பொருத்தம் இருப்பின் அதிருஷ்டம், லக்ஷ்மீகடாக்ஷம் உண்டு

| | | | |
|---|---|---|---|
| கணப் | ,, | ,, | தம்பதிகளுக்குள் அன்யோன்ய பாவம், அன்பு வளரும் |
| மாகேந்திர | ,, | ,, | ஐச்வர்யம் ஏற்படும் |
| ஸ்த்ரீ தீர்கம் | ,, | ,, | சௌக்யம் ,, |
| யோனிப் | ,, | ,, | நல்ல சந்ததி லாபம் ஏற்படும் |
| ராசிப் | ,, | ,, | குல விருத்தி ,, |
| ராசி அதிபதி | ,, | ,, | தனதான்ய அபிவிருத்தி ,, |
| வச்யம் | ,, | ,, | வம்ச விருத்தி ,, |
| ரஜ்ஜு | ,, | ,, | தீர்க மாங்கல்ய பலம் ,, |
| வேதை | ,, | ,, | புத்ரஸம்பத்து ஏற்படும் |

இவ்வாறு 10 விதப் பொருத்தங்களில் குறைந்த பக்ஷமாக 5 பொருத்தமாவது இருப்பது அவசியம். நாடிப் பொருத்தம் என்ற ஒன்றும் உண்டு. இந்த பத்துவிதப் பொருத்தங்களும் ஆண் பெண் ஜன்ம நக்ஷத்திரங்களின் அடிப்படையிலானவை. ஆனாலும் இந்த 10 வகைப் பொருத்தங்களில் சிலருக்கு 9 பொருத்தங்கள் இருக்கும். ஆனால் அவர்களுடைய ஜாதகங்களில் உள்ள கிரஹ நிலைகளும் ஒன்றுக்கொன்று அனுகூலமான நிலையி லிருந்தால்தான் சேர்க்கிறது நல்லது. ஜாதகங்களின் வாயிலாக வரன், வது (Bridegroom — Bride) இவர்களின் நீண்ட ஆயுள் நோய்/நோயற்ற தன்மை, ஒற்றுமை-பகை, முதலானவற்றையும் அறிய முடிகிறது. எனவே 10 விதப் பொருத்தங்கள் இருந்து ஜாதக ரீதியிலான பொருத்தம் இருக்கவில்லையானால் தசவிதப் பொருத்தங்களில் 10 பொருத்தமுமே இருந்தாலும்கூட சேர்ப்பது நல்லதல்ல,

தினப் பொருத்தம் பற்றி :

ஶ்லோ. जन्मसम्पद्विपत्क्षेमः प्रत्यरः साधको वधः ।
मैत्रं परममैत्रं च जन्मादीनां पुनः पुनः ॥ ८९

वधूनक्षत्रमारभ्य वरर्क्षान्तं च गण्यते ।
समतारे(रं)शुभं प्रोक्तं दिनकूटं प्रशस्यते ॥ ९०

त्रिपञ्चसप्तमाः पापाः द्विजन्माष्टममध्यमाः ।
षट्चतुर्नवमाः श्रेष्ठास्तासः स्युस्त्रिविधाःस्मृताः ॥ ९१

தினப் பொருத்தமாவது : பெண்ணின் நக்ஷத்திரம் தொடங்கி, வரனின் நக்ஷத்திரம் வரை எண்ணவேண்டும். ஆனால் ஒரு சிலர் வரன் (மணமகன்) நக்ஷத்திரம் முதல் எண்ணவேண்டும் என்கிறார்கள். இதற்கு காலாமிருதம் எனும் நூலில் கூறப்பட்டுள்ள பக்ஷாந்தரக் கருத்தமைந்த

சுலோகம் ஒன்றை ஆதாரமாகச் சொல்வர். அங்கும்கூட **पुम्भान्तं गणयेत्** என்று வரனின் (புருஷனின்) நக்ஷத்ரம் முடிய எண்ண வேண்டும் என்றுதான் ஆசரியர் கூறுகிறார். அவர் அதே சுலோகத்தின் முடிவில் **पुम्भादीति अनु: परे** என்றுதான் என்றுதான் சொல்கிறார். ஒரு சிலர் ஆண் நக்ஷத்திரம் முதல் என்று கூறுகிறார்கள் என்று கூறுவதிலிருந்து அந்த (காலாமிருத நூலின்) ஆசிரியருக்கும் பெண் நக்ஷத்திரம் முதல் (பெண்ணின் நக்ஷத்திரம் எதுவாயினும் அதை ஒன்று எனக் கணக்கிட்டு) ஆண் நக்ஷத்திரம் முடிய எண்ணுவதே சரி என்பதுதான் சொந்தக் கருத்து. காலப்பிரகாசிகா, பிரயோக பாரிஜாதம் முதலான நூல்களிலும் பெண் நக்ஷத்திரம் முதல் ஆண் நக்ஷத்திரம் முடியக் கணக்கிட வேண்டும் என்றே கூறப்பட்டுள்ளது. அவ்வாறு பெண் நக்ஷத்திரம் முதலாக எண்ணும்போது,

| | | | | |
|---|---|---|---|---|
| அந்த | முதல் | நக்ஷத்திரத்திற்கு | ஜன்மம் | என்றும் |
| | இரண்டாம் | ,, | ஸம்பத்து | ,, |
| | மூன்றாம் | ,, | விபத்து | ,, |
| | நான்காம் | ,, | க்ஷேமம் | ,, |
| | ஐந்தாம் | ,, | ப்ரத்யாம் | ,, |
| | ஆறாவது | ,, | ஸாதகம் | ,, |
| | ஏழாவது | ,, | வதம் | ,, |
| | எட்டாவது | ,, | மைத்ரம் | ,, |
| | ஒன்பதாவது | ,, | பரம மைத்ரம் | ,, |

பெயர்கள் தரப்பட்டுள்ளன.

இவ்விதமே அனுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திர விஷயங்களிலும் எண்ணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அனுஜன்மம், த்ரிஜன்மம் என்றால் என்ன ?

| | | | | |
|---|---|---|---|---|
| அச்வினிமுதல் அயில்யம்வரை எண்ணினால் ஒன்பது ஆகும் | | | | |
| மகம் முதல் | கேட்டைவரை | ,, | ,, | ,, |
| மூலம் முதல் | ப்ரவதிவரை | ,, | ,, | ,, |

ஒரு பெண்ணுக்கு, ரோகிணி நக்ஷத்ரம் ஜன்ம நக்ஷத்ரம் என்றும் அப்பெண்ணுக்குத் திருமணத்திற்காகப் பார்க்கப் படும் ஆணின் நக்ஷத்திரம் அவிட்டம் என்றும் வைத்துக் கொள்வோம். பெண்ணின் நக்ஷத்திரம் ரோகிணியானதால் அதை முதலாகக்கொண்டு எண்ணினால் உத்திரம் முடிய 9 ஆகிறது. ரோகிணி முதல் உத்திரம் முடிய ஒன்பது நக்ஷத்திரங்கள் ஜன்மம் என்றும், அதைத் தொடர்ந்து ஹஸ்தம் முதல் உத்திராடம் முடிய 9 நக்ஷத்திரங்கள் அனு ஜன்மம் என்றும், திருவோணம் முதல் கார்த்திகை முடிய 9 நக்ஷத்திரங்கள் த்ரிஜன்மம் என்றும் சொல்லப்படும். இந்த ரோஹிணி நக்ஷத்திரத்திற்கும் (பெண்) அவிட்ட நக்ஷத்திரத் திற்கும் (ஆண்) தினப்பொருத்தம் பார்க்கும்போது, பெண்ணின் த்ரிஜன்ம நக்ஷத்திரமான திருவோணத்திற்கு இரண்டாவதாக ஆண் நக்ஷத்திரம் வருகிறது. இப்படியே ஒவ்வொரு பெண் ஆண் நக்ஷத்ர விஷயத்திலும் கணக்கிட வேண்டும். 27 நக்ஷத்திரங்களில் அச்விளியை முதலாகக் கொண்டு ரேவதி வரையில் ஜன்ம, அனுஜன்ம, த்ரிஜன்ம நக்ஷத்திரங்களாவன :

| ஜன்மம்<br>1ஆம் பர்யாயம் | அனுஜன்மம்<br>2ஆம் பர்யாயம் | த்ரிஜன்மம்<br>3ஆம் பர்யாயம் |
|---|---|---|
| அச்வினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்தரம் | உத்திராடம் |
| ரோஹிணி | ஹஸ்தம் | திருவோணம் |
| மிருகசீர்ஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | ஸ்வாதி | சதயம் |
| புனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்திரட்டாதி |
| ஆயில்யம் | கேட்டை | ரேவதி |

குறிப்பு: ஒருவருக்கு மகம் ஜன்ம நக்ஷத்திரமாகில் அது முதல் கேட்டை முடிய ஜன்மம் என்றும் (முதல் பர்யாயம் என்றும்), மூலம் முதல் ரேவதி முடிய அனுஜன்மம் (2ம் பர்யாயம்) என்றும், அச்வினி முதல் ஆயில்யம் முடிய த்ரிஜன்மம் என்றும் கணக்கிட்டுக்கொள்ளவும். ரோகிணி நக்ஷத்திர விஷயத்தில் ரோகிணி முதல் உத்திரம் முடிய ஜன்மம் 1வது பர்யாயம் என்றும். ஹஸ்தம்முதல் உத்திராடம் முடிய அனுஜன்மம் 2வது பர்யாயம் என்றும், திருவோணம் முதல் கார்த்திகை முடிய த்ரிஜன்மம் 3வது பர்யாயம் என்றும். இவ்வாறே பிற நக்ஷத்திர விஷயங்களிலும் கணக்கிட்டு அறியவும்.

ஜன்மம் ஸம்பத் முதலாக முன்பு கூறப்பட்ட ஒன்பது நக்ஷத்திரங்களுக்குள், மூன்றாவதாக வருகிற நக்ஷத்திரம் 'விபத்து' எனும் பெயர் கொண்டது என்பதாலும், ஐந்தாவதாக வருகிற நக்ஷத்திரம் 'ப்ரத்யரம்' எனும் பெயர் கொண்டது என்பதாலும், ஏழாவதாக வருகிற நக்ஷத்ரம். 'வதம்' எனும் பெயர் கொண்டது என்பதாலும் விலக்கத் தக்கவை. இரண்டாவதாக வருகிற நக்ஷத்திரம் "ஸம்பத்" எனும் பெயருள்ளது என்பதாலும் 1வது நக்ஷத்ரம் "ஜன்ம" நக்ஷத்ரம் என்னும் பெயருள்ளதாலும் எட்டாவதாக வருகிற நக்ஷத்ரம் "மைத்ரம்" எனும் பெயருள்ளதென்ப இம்மூன்றும் ஏற்கத்தக்கவையே. "மத்யமம்" என்று சொல்லப்படும் நான்காவதாக வரும் நக்ஷத்ரம் 'க்ஷேமம்' எனும் பெயருள்ளதாலும் 6வதாக வரும் நக்ஷத்ரம் 'ஸாதகம்' எனும் பெயருள்ளதாலும் ஒன்பதாவதாக வரும் நக்ஷத்ரம் பரம மைத்ரம் என்று பெயருள்ளதாலும் உயர்வானவை என்று மஹான்களால் கருதப்படுகிறது.

திருமணத்திற்கு ஜாதக - தசவிதப் பொருத்தம் பார்க்கும்போது. "वधूनक्षत्रमारभ्य वरक्षान्तं च गण्यते । समतारं शुभं प्रोक्तम्" கூறப்பட்டவாறு. பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம்

தொடங்கி, வரனின் (ஆணின்) நக்ஷத்ரம் முடிய எண்ண வேண்டும். அவ்வாறு பெண்ணின் நக்ஷத்திரம் முதல் எண்ணப்படும்பொழுது ஆணின் நக்ஷத்திரம் சம தாரையாக-இரட்டிப்பான நக்ஷத்திரமாக 2, 4, 6, 8 என்பதாக வந்தால் அவ்வாறான அந்த ஆணின் நக்ஷத்திரம் அந்தப் பெண்ணின் நக்ஷத்திரத்திற்குப் பொருத்தமுள்ளது என்றும், தினப்பொருத்தம் உள்ளது என்றும் அறியப்பட வேண்டும். இது பொதுவான விதிமுறையாகும்.

தினப்பொருத்தம் விஷயமாக மஹரிஷிகள் பலரும் வெவ்வேறு சிறந்த கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவற்றையும் நாம் அறிவது அவசியம். "ப்ரயோக பாரிஜாதம்" எனும் மிகவும் ப்ராமாணிகமான கிரந்தத்தை அனுசரித்து, தினப்பொருத்தம் முதலானது பற்றிய பிற கருத்துக்களும் இங்கு தரப்படுகின்றன.

"ப்ரயோக பாரிஜாதம்" எனும் நூலில் "ஸம்ஸ்கார ப்ரகரணம்" எனும் பகுதியில் விவாஹப் (திருமணப்) பொருத்தம் பற்றிக் கூறப்படுவதாவது:

**अथ विंशतिकूटनिर्णयः —**

तत्र वसिष्ठः—" ज्ञातव्या विंशतिर्वर्गाःसम्यग्दैवविदा सदा ।"

**तत्प्रश्नप्रकारमाह बृहस्पतिः —**

"विवाहसमये प्राप्ते सुखासीनं शुभप्रदम् ।
दैवज्ञं भक्तितो गत्वा सम्पूज्यादौ यथाबलम् ॥
उडुनी नामनी चोक्त्वा सम्पृच्छेत्सकृदेव तम्" इति ॥

**कूटनामान्युच्यन्ते —**

दिनं गणं च माहेन्द्रं स्त्रीदीर्घं योनिमेव च ।
राशी राश्याधिपो वश्यं रज्जुर्वेधाश्च ते दश ॥

पुनश्च वर्णकूटं च नाडीकूटमतःपरम् ।
पुनश्च भूतं लिङ्गं च जातिगोत्रखगास्तथा ।
योगिन्यायौ च दैवं च पुनर्दश विशेषतः ॥

பொருள்: திருமணப் பொருத்தம் பற்றி இருபது வகைப் பொருத்தங்களை உறுதி செய்வது பற்றி வசிஷ்டர் கூறுவது. ஜோதிஷ சாஸ்திரமறிந்தவர் மணம் செய்து கொள்ளவிருக்கும் ஆண்-பெண்களின் விவாஹப் பொருத்த விஷயமாக முதலில் 20 வகைப் பொருத்தங்களைக் கண்டு அறியவேண்டும்.

சோதிடரிடம் எவ்வாறு சென்று கேட்கவேண்டும் என்பது பற்றி "பிருஹஸ்பதி" கூறுவதாவது: திருமணத்திற்குரிய பருவம் வந்ததும், சுகாஸனத்தில் அமர்ந்துள்ள நல்லனவற்றை நல்கும் ஒன்பது கிரஹங்களின் ஸஞ்சார நிலையறிந்த சோதிடரை அணுகி, அவரை வணங்கித் தம் வசதி—அந்தஸ்திற்கு ஏற்ப அவருக்கு மரியாதை செய்து மணப்பெண், மணப்பிள்ளை இருவரின் பெயர்களையும், நக்ஷத்திரங்களையும் கூறிப் பொருத்தம் பற்றி விளக்குமுறக் கேட்கவேண்டும்" என்பதாக.

20 வகைப் பொருத்தங்களின் பெயர்கள்

1. தினம், 2. கணம், 3. மாஹேந்திரம், 4. ஸ்திரீ தீர்கம். 5. யோனி, 6. ராசி, 7. ராசி அதிபதி, 8. வச்யம், 9. ரஜ்ஜு, 10. வேதை ஆகிய 10 பொருத்தங்களும், 1. வர்ணம், 2. நாடி, 3. பூதம், 4. லிங்கம், 5. ஜாதி, 6. கோத்ரம், 7. பறவை, 8. யோகினி, 9. ஆயம், 10. தைவதம் என்பதாகப் பத்து பொருத்தங்கள் பற்றி ஆக 20 பொருத்தங்கள் பற்றிக் கேட்டறிய வேண்டும். அவற்றுள் தினப்பொருத்தம், பெயர்ப் பொருத்தம் பற்றியும் சில விசேஷ விதிகளையும் பற்றி 'பிரயோக பாரிஜாதம்' நூலில் கூறப்படுவதாவது,

वरस्य जन्मना सार्धं नाम वध्वा विचिन्तयेत् ।
न तु नाम्ना वरस्य स्यादङ्गनाजन्मचिन्तनम् ॥

"பெண்ணிற்கு ஜாதகமில்லை. பையனுக்கு ஜாதகம் இருக்கிறது" எனும் நிலையில் பெண்ணின் பெயருக்கேற்ப நக்ஷத்திரமறிந்து பிறகு பையனின் ஜனன கால கிரக நிலையறிந்து (ஜாதகம் கணிதம் செய்து) பொருத்தம் பார்க்க வேணும். பையனுக்கு ஜாதகமில்லை பெண்ணுக்கு ஜாதகம் இருக்கிறது என்கிற நிலையில் பையனின் பெயருக்கேற்ற நக்ஷத்திரமறிந்து பெண்ணின் ஜாதகத்துடன் பொருத்தம் பார்ப்பது சரியல்ல.

जन्मना जन्म योज्यं च नाम्ना नामैव योजयेत् ।

இருவருக்கும் ஜனன காலக் குறிப்பு இருப்பின் ஜாதகம் கணித்துப் பொருத்தம் பார்க்கலாம். இருவருக்கும் ஜாதகமில்லையெனும் நிலையில் பெயர் பொருத்தம் பார்த்துத் தீர்மானிக்கலாம்.

## अथ दिनकूटः

### தினப் பொருத்தம்

कन्यादिवरऋक्षान्तं पर्याये नव सङ्ख्यया ।
समतारा शुभं चैव दिनकूटः प्रशस्यते ॥

மணப்பெண் நக்ஷத்திரம் முதல் வரனின் நக்ஷத்திரம் முடிய ஒன்பது ஒன்பதாக எண்ண வேண்டும். அவ்வாறு எண்ணும்போது 2, 4. 6, 8, என்று வரும் இரட்டிப்பான எண்ணுள்ள பையனின் நக்ஷத்திரங்கள் அப்பெண்ணின் நக்ஷத்திரத்திற்குப் பொருத்தமுடையவை. மற்ற 3, 5, 7 என வரும் "ஒற்றைப்படை" நக்ஷத்திரமாக வரும் 3வது, 5வது, 7வது நக்ஷத்திரமாக வந்தால் பொருத்தமில்லை. இந்த 10 பொருத்தங்களில், தினப்பொருத்தம் மிகவும் முக்கியமானது ஆகும்.

"स्त्रियो वै जन्मतारायां विपत्प्रत्ययवैधनाः ।
पर्याये प्रथमे वर्ज्यां द्वितीय आद्यचतुस्त्रयः ।
पादास्त्याज्यास्तृतीये तु सर्वास्ताराः सुशोभनाः ॥"

பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம் முதற்கொண்டு எண்ணிவரும்பொழுது முதல் பர்யாயத்தில் (முதல் ஒன்பது சுற்றான நக்ஷத்திரத் தொகுப்பில்) 3வது, 5வது, 7வது நக்ஷத்திரங்கள் முற்றிலுமாக விலக்கத்தக்கது. இரண்டாவது சுற்றில் பெண்ணின் அனுஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணி வரும்பொழுது, 3வது நக்ஷத்திரமான 'விபத்' தாரையாக வந்தால் அந்த மூன்றாவது நக்ஷத்திரத்தில் முதல் பாதத்தில் புருஷன் பிறந்திருந்தால்தான் பொருத்தமில்லை. அனுஜன்மத்தில் விபத்தாரையான 3வது நக்ஷத்திரத்தின் பிற 3 பாதங்களில் பையன் பிறந்திருப்பின் பொருத்தமுண்டு இதுபோல் பெண்ணின் அனுஜன்ம நக்ஷத்திரம் முதல் 5வது தாரை (நக்ஷத்திரம்) யாக பையனின் நக்ஷத்திரம் வந்தால் அந்த ப்ரத்யர நக்ஷத்திரத்தின் 4வது பாதத்தில் பையன் பிறந்திருந்தால்தான் பொருத்தமில்லை. மற்ற 1, 2, 3 பாதங்களில் பையன் பிறந்திருந்தால் பொருத்தமுண்டு இதேபோன்று, பெண்ணின் அனுஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணும்போது வத தாரையாக இரண்டாவது சுற்றில் 7வது நக்ஷத்திரமாகப் பையனின் நக்ஷத்திரம் வந்தால் அந்த அனுஜன்ம நக்ஷத்திரத்திற்கு 7வது நக்ஷத்திரத்தில் 3வது பாதத்தில் பையன் பிறந்திருப்பின் பொருத்தமில்லை. மற்ற பாதங்களில் ஒன்றில் (1வது, 2வது, 4வது பாதங்களில் ஒன்றில்) பிறந்திருப்பின் பொருத்தமுண்டு என்பது விசேஷ விதியாகும்.

(காலப்ரகாசிகையிலும் இந்தக் கருத்து கூறப்பட்டிருக்கிறது. ஆனால் "விவாஹ ப்ரகரணத்தில்" கூறாமல் "சௌள ப்ரகரண"த்தில்

"आद्यांशो त्रिपदि त्याज्यः प्रत्यरे चरमोऽशुभः ।
वधे त्याज्यस्तृतीयांशः शेषास्त्वन्ये शुभावहाः ॥"

என்று கூறப்பட்டுள்ளது. இந்த ச்லோகத்தின் பொருள் இரண்டாவது பர்யாயத்தில் 3வது, 5வது, 7வது நக்ஷத்ரங்கள் பற்றியது. விவாஹ ப்ரகரணத்தில் தினப்பொருத்தம் பற்றிக் கூறுகையில் (கூறியது கூறல்" தோஷம் ஏற்படாது இருக்க) "द्वितीये वर्जिता यत्र:" இரண்டாம் பர்யாயத்தில் "சில பாதங்கள் விலக்கத்தக்கவை" என்று மட்டும் சொல்லப் பட்டது).

மூன்றாம் சுற்றாகிய த்ரிஜன்ம நக்ஷத்திரத்தில் எல்லா நக்ஷத்திரங்களுமே ஏற்கத்தக்கவையாகும். இரண்டாம் பர்யாயத்தில் சொல்லப்பட்ட கருத்தின் தொடர்பாக — "ப்ரஹஸ்பதி"யால்

"आद्यांशं त्रिपदाख्ये प्रत्यरे च चतुर्थकम् ।
वधाख्ये च तृतीयांशं विना शेषाः सुशोभनाः ॥"

என்று விளக்கமுறக் கூறப்பட்டுள்ளதால் விபத்தாரையில் முதல் பாதம் தவிர்த்த பிற பாதங்களும், ப்ரத்யர நக்ஷத்திரத்தில் 4வது பாதம் தவிர்த்த பிற பாதங்களும், வத தாரையில் 3வது பாதம் தவிர பிற பாதங்களும் சுபத்தைத் தருவனவேயாகும் என்று அறியமுடிகிறது. இவ்விடத்தில் வேறு எந்த நூலிலும் கூறப்படாத ஒருவிஷயம் கூறப் பட்டுள்ளதை வித்வான்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"स्त्रीदीर्घगणसद्भावे दिनं यदि न विद्यते ।
तत्रापि दिनमस्त्येव चन्द्रताराबलान्विते ॥"

முதலில் "தினப்பொருத்தம்" மிகவும் முக்யமானதெனக் கூறப்பட்டிருக்கிறது; அதற்கு "அபவாதமாக" இது கூறப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம். தினப்பொருத்தமில்லாவிட்டாலும், ஸ்த்ரீ தீர்க்கப் பொருத்தமும்—கணப் பொருத்தமும் இருந்து சந்திரபலம்—தாராபலம் இரண்டும் இருப்பின் தினப்பொருத்தம் இருக்கிறதாகவே கருதப்படலாம் என்று "ஸங்க்ரஹ"மெனும் நூலில் கூறப்பட்டுள்ளது. எல்லா விதிகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் விதிவிலக்கு (Exception) விசேஷ விதி. திருத்தம் (Amendment) என்றெல்லாம் இருப்பதுபோல் இந்த "விவாஹப் பொருத்தம்" பற்றிய விஷயத்திலும் இருப்பதையும் காணவேண்டியது அவசியமாகும்.

தினப்பொருத்தம் பற்றிய மேலும் பல முக்யமான விபரங்களை இந்நூலகத்தின் பதிப்பாக வெளிவரும் "காலப்ரகாசிகை" யெனும் நூலில் (மொழிபெயர்க்கப்பட்டது) விரிவாகக் காணலாம்.

## अथ गणकूट:

### கணப்பொருத்தம்

श्लो. अश्वीमृगशिरोहता: स्वातीपुष्यपुनर्वसू ।
मैत्रश्रवणरेवत्यो(त्य एते) देवगणाः स्मृताः ॥ ९२

भरणीरुद्रनक्षत्रं रोहिणीचोत्तरात्रयम् ।
पूर्वत्रयं नवैतानि मानुषोऽयं गणःस्मृतः ॥ ९३

चैत्राश्लेषामखामूलाविशाखाशततारकाः ।
धनिष्ठा कृत्तिका ज्येष्ठा राक्षसोऽयं गणःस्मृतः ॥ ९४

( मित्रशत्रुसमाक्रान्ते फलं तत्तत्समं विदुः )

| தேவகண நக்ஷத்ரங்கள் | மனுஷ்யகண நக்ஷத்ரங்கள் | ராக்ஷஸகண நக்ஷத்ரங்கள் |
|---|---|---|
| அச்வினி | பரணி | சித்திரை |
| மிருகசீர்ஷம் | திருவாதிரை | ஆயில்யம் |
| ஹஸ்தம் | ரோஹிணீ | மகம் |
| ஸ்வாதி | உத்திரம் | மூலம் |
| பூசம் | உத்திராடம் | விசாகம் |
| புனர்பூசம் | உத்திரட்டாதி | சதயம் |
| அனுஷம் | பூரம் | அவிட்டம் |
| திருவோணம் | பூராடம் | கிருத்திகை |
| ரேவதி | பூரட்டாதி | கேட்டை |

ஶ்லோ. सगणे चोत्तमा प्रीतिर्देवमानुषमध्यमः ।
कलहो देवरक्षःस्यान्मृत्युर्मानुषराक्षसौ ॥ ९५

ஸ்த்ரீ-புருஷ நக்ஷத்ரங்கள் இரண்டுமே ஒரே கணத்தைச் சேர்ந்தவையானால் இருவரிடையே அன்பு வளரும். ஸ்த்ரீ நக்ஷத்திரம் தேவகணமாகவும், புருஷ நக்ஷத்திரம் மனுஷ்ய கணமாகவும் இருப்பின் பொருத்தமுண்டு. மத்யமம் எனலாம். தீமை செய்யாது. ஸ்த்ரீ நக்ஷத்திரம் தேவகணமாயும், புருஷ நக்ஷத்ரம் ராக்ஷஸ கணமாயும் இருப்பின் இருவரிடையே கலஹம் ஏற்படும். ஸ்த்ரீ நக்ஷத்ரம் மனுஷ்ய கணமாகவும், புருஷ நக்ஷத்திரம் ராக்ஷஸ கணமாயும் இருப்பின் மரணம்.

ஶ்லோ. स्त्रीराक्षसं न कर्तव्यं कर्तव्यं नरराक्षसम् ।
स्त्रीराक्षसे न दोषोऽस्ति त्रयोदशदिनात्परम् ॥ ९६

பெண் நக்ஷத்திரம் ராக்ஷஸமாயிருந்து புருஷ நக்ஷத்திரம் ராக்ஷஸம் தவிர வேறு எந்த கணத்தைச்

சேர்ந்ததாக இருப்பினும் அவ்விருவருக்கும் திருமணம் செய்து வைக்கலாகாது. புருஷ நக்ஷத்ரம் ராக்ஷஸ கணமாக இருந்து ஸ்த்ரீ நக்ஷத்ரம் தேவ மனுஷ்ய கணமாக இருப்பினும் பாதகமில்லை, சேர்க்கலாம். பெண்ணின் ஜன்ம நக்ஷத்திரம் முதல் எண்ணிவரும்போழ்து புருஷனின் நக்ஷத்திரம் 13 நக்ஷத்திரங்களுக்கு மேற்படின் பெண் நக்ஷத்ரம் ராக்ஷஸ கணமானாலும் தோஷமில்லை.

தினப்பொருத்தம் போன்றே கணப்பொருத்தமும் முக்யமானதொன்று. இந்த கணப்பொருத்தம் விஷயமாக மேலே கூறப்பட்ட கருத்துக்களுக்கு விலக்கும் (Exeption) உண்டு.[1] ஏகாதிபத்யமுள்ள ராசிகள் விஷயத்திலும் மைத்ரம் (Friendship between the lords of signs). ஸமஸப்தமம் (If both the Rasis are diametrically opposite to each other in the horoscope) (பெண் ராசிக்கு 7வதாக புருஷ ராசியும், புருஷ ராசிக்கு 7வதாக ஸ்த்ரீ ராசியும் இருக்கும் நிலை) விஷயத்திலும் கணப் பொருத்தமில்லாவிடினும் அது தோஷமாகாது.

## अथ माहेन्द्रकूटः

### மாகேந்திரப் பொருத்தம்

श्लो. वध्वादीनां चतुःसप्तदशमश्च त्रयोदशः ।
षोडशैकोनविंशश्च द्वाविंशः पञ्चविंशतिः ।
एते माहेन्द्रयोगः स्युः(र्द)दम्पत्योः सम्पदः स्मृताः ॥ १७

---

1. प्रयोगपारिजाते Bombay Nirnayasagar Edition.
Page 320.

ग्रहमैत्रं च राशिश्च विद्यते नियतं यदि ।
न गणाभावजनितो दोषःकश्चन विद्यते ॥

கிரஹங்களுக்கு (ராசிநாதர்களுக்குள்) மைத்ரமும் இருந்து ராசிப் பொருத்தமும் இருந்தால் கணப்பொருத்தம் இல்லையென்ற தோஷம் இல்லை. (பிரயோக பாரிஜாதம்).

தம்பதிகளுக்குச் செல்வங்களை அளிக்கும் மாகேந்திரப் பொருத்தமாவது. பெண் நக்ஷத்திரம் முதல் ஆணின் நக்ஷத்திரம் 4, 7, 10, 13, 16, 19, 22, 25வது நக்ஷத்ரமாக வந்தால் மாகேந்திரப் பொருத்தம் உண்டு. [1]இதற்கும் கூட அபவாதம் உண்டு.

## अथ स्त्रीदीर्घकूटः

### ஸ்த்ரீ தீர்கப் பொருத்தம்

ஸ்லோ. कन्यादिवरऋक्षान्तं पर्यायस्तत्र गण्यते ।
तत्र त्रयोदशादूर्ध्वं स्त्रीदीर्घं बहुलं शुभम् ॥ ९८

பெண் நக்ஷத்திரம் முதல் வரனின் நக்ஷத்திரம் முடிய எண்ணும்போது பெண்ணின் நக்ஷத்திரத்திற்கு பதிமூன்று நக்ஷத்திரத்திற்கு மேல் வரன் நக்ஷத்திரம் அமையுமானால் ஸ்த்ரீ தீர்க்கப் பொருத்தமுண்டு. (சில வித்வான்களின் கருத்தின்படி பெண் நக்ஷத்திரம் தொடங்கி 7 நக்ஷத்திரங்களுக்குமேல் வரன் நக்ஷத்ரம் இருந்தாலும் இப்பொருத்தம் உண்டு என்றும் சாஸ்த்ர வசனம் இருக்கிறது. केचित्सप्तद्विनात्पूर्वं स्त्रीदीर्घमिति सूरयः (காலப்பிரகாசிகை 13வது அத்தியாயம், 30ம் ச்லோகம்), ராசிநாதர்களுக்கும், நக்ஷத்ராதிப கிரஹங்களுக்கும் பரஸ்பரம் மைத்ரம் இருப்பின் இந்த ஸ்த்ரீதீர்கம் இல்லையானாலும் தோஷப்படாது என்று 'பிரயோக பாரிஜாதம்', 'ஸம்ஸ்காரப்ரகரணத்'தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பொருத்தமும் முக்யமானவற்றில் ஒன்று.

---

1. ग्रहमैत्री च रज्जुश्च स्यातां सज्जनसम्मतौ ।
माहेन्द्रदोषो नास्तीति वाक्यमिन्द्रपुरोधसः ॥

மித்ரத்வமும், ரஜ்ஜுப் பொருத்தமும் நல்லோர் ஒப்புக்கொள்ளும் வகையில் அமைந்திருப்பின் மாகேந்திரப் பொருத்தமில்லாதிருப்பினும் தோஷமாகாது என்பது இந்திர குருவான ப்ரஹஸ்பதியின் கருத்தாகும்.

## अथ योनिकूटः

### யோனிப் பொருத்தம்

अश्वीभाजभुजङ्गभोगिशुनका मार्जारवस्ताह्वयो
मार्जारोन्दुरुमूषिकोष्ट्रमहिषव्याघ्रा महिष्यस्तथा ।
शार्दूलो हरिणः कुरङ्गशुनकौ शाखामृगो गोकपी
नार्यश्वौ नरगोगजाश्च कथिता भानां क्रमाद्योनयः ॥ १९

| நக்ஷத்திரம் | யோனியின் பெயர் | நக்ஷத்திரம் | யோனியின் பெயர் |
|---|---|---|---|
| அச்வினி | குதிரை | ஸ்வாதி | எருமை |
| பரணி | யானை | விசாகம் | புலி |
| கார்த்திகை | ஆடு | அனுஷம் | மான் |
| ரோஹிணி | பாம்பு | கேட்டை | மான் |
| மிருகசீர்ஷம் | பாம்பு | மூலம் | நாய் |
| திருவாதிரை | நாய் | பூராடம் | குரங்கு |
| புனர்பூசம் | பூனை | உத்திராடம் | பசு |
| பூசம் | செம்மறியாடு | திருவோணம் | குரங்கு |
| ஆயில்யம் | பூனை | அவிட்டம் | மனித ஸ்திரீ |
| மகம் | எலி | சதயம் | குதிரை |
| பூரம் | எலி (பெருச்சாளி) | பூரட்டாதி | ஆண் (மனிதன்) |
| உத்தரம் | ஒட்டகம் | உத்திரட்டாதி | பசு |
| ஹஸ்தம் | எருமை | ரேவதி | யானை |
| சித்திரை | புலி | | |

'गोव्याघ्रौ गजकेसरी(सिंह) वाजिमहिषाश्वैणं च बभ्रूरगौ
वैरं वानरमेषकौ च सुमहत्तद्वद्विडालोन्दुरू ।
लोकानां व्यवहारतोऽन्यदपि च ज्ञात्वा प्रयत्नादिदं
दम्पत्योर्नृपभृत्ययोरपि सदा वर्ज्याः शुभस्यार्थिभिः ॥ १००

एकयोनिषु सम्पत्तिर्दम्पत्योः सङ्गमं यदा ।
भिन्नयोनिषु मध्यं स्यादरिभावो न चेद्द्वयोः ॥ १०१

பகையோனிகளாவன :

| | | |
|---|---|---|
| *பசுவுக்குப் பகை* | — | *புலி* |
| *யானைக்குப் பகை* | — | *சிங்கம்* |
| *குதிரைக்குப் பகை* | — | *எருமை* |
| *நாய்க்குப் பகை* | — | *மான்* |
| *கீரிக்குப் பகை* | — | *பாம்பு* |
| *குரங்கிற்குப் பகை* | — | *ஆடு* |
| *பூனைக்குப் பகை* | — | *எலி* |

இவைகள் ஒன்றுக்கொன்று பகையுள்ளது என்பதால் திருமணப் பொருத்தத்தில் பகை யோனி நக்ஷத்திரங்கள் விலக்கத்தக்கவை. ஸ்திரீ—புருஷர்களுக்கு ஒரே யோனியாகில் ஸம்பத்து ஏற்படும். பகையுள்ள யோனியாகில் பொருத்தமில்லை. பகையில்லாத வெவ்வேறு யோனியாகில் பொருத்தமில்லையென்பதற்கில்லை. மத்யமம் என்று சொல்லப்படும்.

---

1. गोव्याघ्रं गजसिंहमश्वमहिषं श्वैणं च बभ्रूरगं
वैरं वानरमेषकं च सुमहत्तद्वद्विडालोन्दुरू ॥

என்று ஒரு பாடபேதம் உண்டு.

## राशिकूटः

### ராசிப் பொருத்தம்

श्लो. [1]द्विर्द्वादशे भवेन्मृत्युरायुर्द्वादशके द्विके ।
त्रिकमेकादशे दुःखं सुखमेकादशत्रिकम् ॥ १०१

चतुर्थदशमं वैरं प्रीतिर्दशचतुर्थकम् ।
पञ्चमं नव वैधव्यं नवपञ्च पतिव्रता ॥ १०३

षष्ठाष्टके पुत्रनाशो बहुपुत्राष्टषष्ठके ।
समसप्त शुभं प्रोक्तं राशिकूटविधिः क्रमात् ॥ १०४

ராசி என்பது என்ன? ஒருவருடைய ஜனன காலத்தில் சந்திரன் இருக்கும் இடம் எதுவோ, அதுவே ராசி எனப்படும். திருமணப் பொருத்தம் பார்ப்பதில் பெண்ணின் ஜன்ம ராசிக்கு இரண்டாவது ராசியாக புருஷன் ராசி வருவது பொருத்தமில்லை. பெண் ராசி புருஷ ராசிக்கு

---

1. ராசிகூடத்தில் சில அபவாதங்கள் (Excemptions) உண்டு.

द्विर्द्वादशाः शुभा ज्ञेया मीनादौ युग्मराशिषु ।
मेषाद्ययुग्मराशौ तु निधनं स्यान्न संशयः ॥

द्विर्द्वादशेऽप्यदोषः स्याद्दशकाद्दूरतः स्त्रियाः ।
पञ्चमनवमे शुभदौ मेषहरी कर्किवृश्चिकौ प्रोक्तौ ।
समसप्तकेऽप्यशुभदौ घटसिंहौ पाणिपीडने कथितौ ॥

द्विर्द्वादशे पञ्चनवमयोगे षष्ठाष्टके राक्षसयोषितश्चेत् ।
एकाधिपत्ये उभयोश्च मैत्रे विवाहयोगं शुभदं वदन्ति ॥

—प्रयोगपारिजातम्

Page. 321. Nirnayasagar Edition.

12வது ராசியாக வருவது சரியல்ல. சேர்த்தால் நாசம். பெண் ராசிக்கு புருஷ ராசி 12ஆவதாக வந்தால் தீர்க்காயுஸ். பெண்ணின் ராசிக்கு 3வது ராசியாக புருஷனின் ராசி வந்தாலும் பையனின் ராசிக்கு 11வதாக பெண்ணின் ராசி வந்தாலும் துச்கம். இந்நிலை மாறியிருப்பின், பெண்ணின் ராசிக்குப் பையனின் ராசி 11வதாக வந்தால் உத்தமம், ஸுகம் உண்டு. பெண்ணின் ராசிக்குப் புருஷ ராசி 4வதாகவும், பையனின் ராசியிலிருந்து பெண்ணின் ராசி 10வதாக வந்தாலும் தம்பதிகளுக்குள் பகை. இது மாறியிருப்பின் (10 – 4 ஆக இருப்பின்) சுகம் உண்டு. பெண்ணின் ஜன்ம ராசியிலிருந்து பையனின் ராசி 5ஆகவும், பையனின் ராசியிலிருந்து பெண்ணின் ராசி 9ஆகவும் வந்தால் வைதவ்யம். இது மாறினின் பதிவிரதாத்வம் மேலும் வலுப்படும். பெண்ணின் ராசியிலிருந்து பையனின் ராசி 6ஆவதாக வந்தாலும் (ஷஷ்டாஷ்டகம்) புத்ரநாசம். இதுமாறி இருப்பின் பல குழந்தைகள் பிறக்கும் (அஷ்டஷஷ்டகம்) பெண்ணின் ராசியிலிருந்து பையனின் ராசி 7வதாகவும், பையனின் ராசியிலிருந்து பெண்ணின் ராசி 7ஆவதாகவும் வந்தால், "ஸமஸப்தமம்" எனப்படும். இப்படி இருப்பின் தம்பதிகளுக்குள் மகிழ்ச்சியான வாழ்க்கையும் நீண்ட ஆயுளும் ஏற்படும். பெண்ணின் ராசியிலிருந்து பையனின் ராசி 8ஆவதாகவும் பையனின் ராசி முதல் பெண்ணின் ராசி 6ஆவதாகவும் வந்தால் புத்ர ஸம்பத்திற்குக் குறைவில்லை.

## शत्रुमित्रकूटः

### ராசிநாதர்களுக்குள் சத்ருத்வம் — மித்ரத்வம் (ராசியதிபதிப்) பொருத்தம்

ஸ்லோ. मेषवृश्चिकयोर्भौमस्तुलावृषभयोः सितः ।
धनुर्मीनद्वयोर्मन्त्री कन्यामिथुनयोर्बुधः ॥ १०५

सिंहस्याधिपतिः सूर्यः कर्कटस्याधिपः शशी ।
नक्रकुम्भकयोर्मन्दः राशिनाथा इमे स्मृताः ॥ १०६

மேஷத்திற்கும் விருச்சிகத்திற்கும் அதிபதி செவ்வாய் துலாத்திற்கும் ரிஷபத்திற்கும் சுக்ரன் அதிபதி. தனுஸிற்கும் மீனத்திற்கும் அதிபதி குரு. கன்னிக்கும் மிதுனத்திற்கும் அதிபதி புதன். ஸிம்ஹத்திற்கு அதிபதி சூரியன். கடகத்திற்கு அதிபதி சந்திரன். மகரத்திற்கும், கும்பத்திற்கும் அதிபதி சனி என இவ்வாறு ராசிநாதர்கள் ஆவர்.

शत्रू मन्दसितौ समः शशिसुतो मित्राणि शेषा रवेः
तीक्ष्णांशुर्हिमरश्मिजश्च सुहृदौ शेषाःसमा शीतगोः ।
जीवेन्दूष्णकराः कुजस्य सुहृदो ज्ञोऽरिःसितार्कौ समौ
मित्रे सूर्यसुतो बुधस्य हिमगुः शत्रुः समाश्चापरे ॥ १०७

सूरेः सौम्यसितावरी रविसुतो मध्योऽपरे बान्धवाः
सौम्यार्की सुहृदौ समौ कुजगुरू शुक्रस्य शेषावरी ।
शुक्रज्ञौ सुहृदौ समः सुरगुरुः सौरस्य चान्येऽरयः
ये प्रोक्ताः सुहृदस्त्रिकोणभवनास्तेऽमी मया कीर्तिताः ॥ १०८

மேலேயுள்ள ச்லோகத்தின்படி கிரஹங்களுக்குள் இருக்கும் மித்ரத்வ, சத்ருத்வ, ஸமத்வத்தைக் காட்டும் அட்டவணை.

| கிரஹம் | மித்ரர் | சத்ரு | ஸமன் |
|---|---|---|---|
| சூரியன் | சந்திரன், செவ்வாய், குரு | சனி, சுக்ரன், (ராகு, கேது) | புதன் |
| சந்திரன் | சூரியன், புதன் | (ராகு, கேது) | செவ்வாய், குரு சுக்ரன், சனி |

| கிரஹம் | மித்ரர் | சத்ரு | ஸமன் |
|---|---|---|---|
| செவ். | குரு, சந்திரன், சூரியன் | புதன் | சுக்ரன், சனி |
| புதன் | சனி | சந்திரன் | சூரிய., செவ்., குரு, சுக்ரர்கள் |
| குரு | சூரிய, சந்திர, செவ்வாய்கள் | புதன், சுக்ரன் | சனி |
| சுக்ரன் | சனி, புதன் | சூரிய, சந்திரன் | செவ்., குரு |
| சனி | சுக்ரன், புதன் | சூரிய., சந்திர., செவ்வாய்கள் | குரு |
| ராகு | | (சூரிய., சந்தி.) | |
| கேது | | (சூரிய., சந்தி.) | |

சூரியனுக்கு சனியும் சுக்ரனும் பகைவர், புதன் ஸமன். மற்றவர்கள் (குரு, செவ்வாய், சந்திரன் இவர்கள்) மித்ரர்கள். சந்திரனுக்கு சூரியனும் புதனும் மித்ரர்கள். மற்ற கிரஹங்கள் ஸமம்.

ஸ்லோ. उत्तमो मित्रवर्गस्तु समवर्गस्तु मध्यमः ।
अधमः शत्रु मित्रस्तु(?)वैरिवर्गो विनाशकृत् ॥ १०९

பெண் — புருஷர்களின் ராசிநாதர்கள் பரஸ்பரம் மித்ரர்களாகில் உத்தமம். சமத்வமுள்ளவர்களாகில் மத்யமம், சத்ருக்களாகில் நாசத்தைச் செய்வர்.

## वश्यकूटः

### வசியப்பொருத்தம்

श्लो. मेषस्य वश्यो सिह्मालौ वृषभस्य च कर्कटः ।
यमस्य कन्यका वश्या कर्किणश्चापवृश्चिकौ ॥ ११०

तुला सिह्मस्य वश्या स्यात्कन्याया यममत्स्यकौ ।
मृगकन्ये तु जूकस्य कर्किःस्याद् वृश्चिकस्य तु ॥ १११

मीनं चापस्य वश्यं स्यान्मकरो मीनवश्यकृत् ।
कुम्भस्य कन्या वश्या स्यान्मेषो मीनस्य वश्यकृत् ॥

एवं वश्यसमायोगे दम्पत्योः प्रीतिरुत्तमा ।
वश्याभावे तु दम्पत्योर्विवाहः कलहप्रदः ॥ ११३

| ராசிகள் | வச்ய ராசிகள் |
|---|---|
| மேஷத்திற்கு | சிம்மமும், விருச்சிகமும் |
| விருஷபத்திற்கு | கடகம் |
| மிதுனத்திற்கு | கன்னி |
| கடகத்திற்கு | விருச்சிகமும், தனுஸும் |
| சிம்மத்திற்கு | துலாம் |
| கன்னிக்கு | மிதுனமும், மீனமும் |
| துலாத்திற்கு | மகரமும், கன்னியும் |
| விருச்சிகத்திற்கு | கடகம் |
| தனுஸிற்கு | மீனம் |
| மகரத்திற்கு | மீனம் |
| கும்பத்திற்கு | கன்னி |
| மீனத்திற்கு | மேஷம் |

எனவே ஸ்த்ரீ — புருஷ ராசிகளுக்குள் வச்யப் பொருத்தம் இருப்பின், பெண் ராசிக்கு வச்யராசியாகப் புருஷ ராசி இருப்பின், தம்பதிகளுக்குள் ஒருவருக்கொருவர் அன்பும், ப்ரேமையும் உயர்வாக இருக்கும். வச்யப் பொருத்தமில்லையாகில் தம்பதிகளுக்குள் கலஹத்தைச் செய்யும்.

## रज्जुकूटः

### ரஜ்ஜுப் பொருத்தம்

श्लो. विभु(धु)बिम्बत्रयं कृत्वा तिर्यग्रेखाचतुष्टयम् ।
अश्विन्यादीनि ऋक्षाणि वामपार्श्वादि विन्यसेत् ॥ ११४

गलोदरकटीपादे रेखाः स्युर्यदि संस्पृशेत् ।
एकरेखा भवेन्नाशो भिन्नरेखासुशोभनः ॥ ११५

वैधव्यं गलरेखायां क्रोडरेखाऽनपत्यता ।
दरिद्रता कटीरेखा पादे वा जीवितं धनम् ॥ ११६

मुखे पतिं गले कन्यां क्रोडे स्वस्यात्मजान् हरेत् ।
दरिद्रता भवेत्कट्यां पादे च भ्रमणं भवेत् ॥ ११७

மூன்று சந்திரமண்டலங்கள் அமைத்து, அதன் குறுக்காக நான்கு ரேகை(கோடு)களை அமைக்கவும். அந்தக் கோட்டில் இடது பக்கத்தில் தொடங்கி அச்வினி முதலான 27 நக்ஷத்திரங்களையும் எழுதவேண்டும்.

பொருத்தம் பார்க்கும்போது, ஸ்த்ரீ — புருஷ நக்ஷத்திரங்கள் ஒரே கோட்டில் அமையுமானால் பொருத்தமில்லை, நாசம் ஏற்படும். ஸ்த்ரீ-புருஷ நக்ஷத்திரங்கள் வெவ்வேறு கோட்டில் அமையுமானால் உத்தமம்.

ஸ்த்ரீ-புருஷ நக்ஷத்ரங்கள் (தலை) முகத்திலுள்ள ரேகையில் ஒரே கோட்டில் அமைந்தால் கணவனைக் கொல்லும்.

கழுத்து ரேகையில் அமைந்தால் பெண்ணைக் கொல்லும். மார்பு, வயிற்றுப் பகுதியில் உள்ள நேர்க்கோட்டில் அமைந்தால், தன் பிள்ளைகளைக் கொல்லும். இடை. துடைப் பகுதியில் உள்ள நேர்க்கோட்டில் அமையுமானால் ஏழ்மை. கால் பகுதியில் உள்ள நேர்க்கோட்டில் அமையுமானால், ஒரு இடத்தில் நிலைத்திருக்க முடியாமல் அலைய வேண்டிய நிலை ஏற்படும். (பார்க்கும் விதம் : 93ம் பக்கம்)

## वेधाकूटः

### வேதைப் பொருத்தம்

ஸ்த்ரீ நக்ஷத்திரத்திற்கு வேதையுள்ள நக்ஷத்திரமாக புருஷன் நக்ஷத்திரம் இருக்கலாகாது. அவ்வாறிருப்பின் (வேதையுள்ள நக்ஷத்திரமாக அமையுமானால்) தம்பதி களுக்குக்கேடு ஏற்படும். பொருத்தம் பார்க்கும்போது பெண்ணின் நக்ஷத்திரத்திற்கு புருஷனின் நக்ஷத்திரம் வேதையில்லாத நக்ஷத்திரமாக இருந்தால் வேதைப் பொருத்தம் உண்டு எனக் கொள்ளவேண்டும். இல்லா விட்டால், அது மணப்பெண்ணையும் மணமகனையும் நாச மாக்கும். எனவே, வேதைப்பொருத்தம் பற்றி மிகவும் கவனமுடன் கூர்ந்து பார்த்து அறிய வேண்டுவது அவசியம்.

ஸ்ரோ. अश्वीन्द्रौ यममैत्रभे हरिहरौ शूर्पानलौ वाय्वजौ ।
मूलाही पितृपूषणौ गुरुजले देवप्रभूर्विश्वभे ॥ ११८

बुध्न्यर्क्षार्यमणौ दिनेशवरुणौ भाद्रर्क्षभाग्ये मिथो ।
वेधा नार्हति योगऋक्षयुगलं वस्विन्दुचित्राश्रयम् ॥ ११९

जन्मर्क्षवेधे कथितेऽत्र जाते
युक्तोऽपि वश्यादिगुणैर्बलिष्ठैः ।
पतिं च कन्यां च समूलघातं
निहन्ति षष्ठाष्टमराशियोगः ॥ १२०

| நக்ஷத்திரம் | வேதையுள்ள நக்ஷத்திரம் | |
|---|---|---|
| அச்வினி | கேட்டை | |
| பரணி | அனுஷம் | |
| திருவோணம் | திருவாதிரை | மிருகசீர்ஷம் |
| கிருத்திகை | விசாகம் | சித்திரை |
| ஸ்வாதி | ரோஹிணி | அவிட்டம் |
| மூலம் | ஆயில்யம் | இவைகளும் |
| மகம் | ரேவதி | ஒன்றுக்கொன்று |
| பூசம் | பூராடம் | வேதையுள்ளவைகளே. |
| புனர்பூசம் | உத்திராடம் | |
| உத்திரம் | பூரட்டாதி | |
| ஹஸ்தம் | சதயம் | |
| உத்திரட்டாதி | பூரம் | |

வசியம் முதலான பொருத்தங்கள் இருந்தாலும் வேதைப் பொருத்தம் இல்லாவிட்டால், அது மணப் பெண்ணையும், மணமகனையும் நாசமாக்கும். எனவே, வேதைப் பொருத்தம் பற்றி மிகவும் கவனமுடன் கூர்ந்து பார்த்து அறிய வேண்டுவது அவசியம்.

## नाडीकूट:

### நாடிப் பொருத்தம்

श्लो. कृत्तिका रोहिणी स्वाती मखाश्लेषा च रेवती ।
श्रवणश्चोत्तराषाढा विशाखाश्चैकनाडिकाः ॥ १२१

पूर्वफल्गुनिका चित्रा धनिष्ठा भरणी मृगा ।
पूर्वाषाढानुराधा च तिष्योऽहिर्बुध्न्य एव च ॥ १२१

मध्यनाडीगणाः प्रोक्ताः विवाहे क्लेशदायकाः ।
पूर्वाभाद्रपदा मूला ज्येष्ठा हस्ता पुनर्वसुः ॥ १२३

अश्विन्यार्द्रा शतभिषगुत्तराफल्गुनीगणाः ।
मध्यनाडी पतिं हन्ति पार्श्वनाडी तु कन्यकाम् ।
पार्श्व(भिन्न)नाडी सदा चिन्त्या दम्पत्योः शुभमिच्छता ॥

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்திரங்கள் வெவ்வேறு நாடியைச் சேர்ந்தவையாயிருந்தால் நாடிப்பொருத்தம் உண்டு என்று அறிய வேண்டும்.

| இடது நாடி | மத்யநாடி | வலது நாடி |
|---|---|---|
| கார்த்திகை | பூரம் | பூரட்டாதி |
| ரோகிணி | சித்திரை | மூலம் |
| ஸ்வாதீ | அவிட்டம் | கேட்டை |
| மகம் | பரணி | ஹஸ்தம் |
| ஆயில்யம் | மிருகசீர்ஷம் | புனர்பூசம் |
| ரேவதீ | பூராடம் | அச்வினி |
| திருவோணம் | அனுஷம் | திருவாதிரை |
| உத்திராடம் | பூசம் | சதயம் |
| விசாகம் | உத்திரட்டாதி | உத்திரம் |

இப் பொருத்தங்கள் யாவும் நக்ஷத்ர, ராசிப் ப்ரதானமானவையே. விவாஹப் பொருத்தம் பார்க்கிற விஷயத்தில் இந்தப் பொருத்தங்கள் மட்டும் போதுமானவையல்ல. ஸ்த்ரீ புருஷ ஜாதகங்களில் கிரஹங்களின் நிலையையும் கண்டு அனுகூலமான பொருத்தம் இருப்பதை உறுதி செய்துகொள்வது மிகவும் அவசியம். "தசவிதப் பொருத்தங்கள்" என்று சொல்லப்படும் பொருத்தத்தை விட, ஸ்த்ரீ புருஷ ஜாதகங்களில் கிரஹங்களின் பலாபலம், குண தோஷம் இவற்றைப் பரிசீலித்துப் பொருத்தமுள்ளதா என்று உறுதி செய்துகொண்ட பிறகு கூட தசவிதப் பொருத்தம் பார்த்தால் போதுமானதென்றும் சொல்லும் வகையில் விவாஹம் பொருத்தங்கள் விஷயத்தில் தசவிதப் பொருத்தத்தைவிட 'ஜாதகப் பொருத்தம்' மேலும் அதிக முக்யத்வம் பெறுகிறது எனலாம்.

பத்துவிதப் பொருத்தம் முற்றிற்று

## ரஜ்ஜுப் பொருத்தம் பார்க்கும் விதம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தலை | மிருகசீர்ஷம் | | சித்திரை | | அவிட்டம் | |
| கழுத்து | ரோஹி | திருவா | ஹஸ்த | ஸ்வாதி | திருவோ | சதயம் |
| நாபி | கார்த்தி | புனர்பூச | உத்தர | விசாகம் | உத்தி-ம் | பூரட்டா |
| துடை | பரணி | பூசம் | பூரம் | அனுஷ | பூராட | உத்திரட் |
| பாதம் | அச்வி | ஆயில்ய | மகம் | கேட் | மூலம் | ரேவதி |

இந்தப் பத்துவிதப் பொருத்தங்கள் தவிரவும் பூதகூடம், லிங்க கூடம், வர்ணகூடம், பக்ஷிகூடம், யோகினீகூடம் முதலான பொருத்தங்களும் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றையும் திருமணப் பொருத்தம்பற்றிய விஷயத்தில் விசாரித்து அறிந்து தீர்மானிப்பது விசேஷமே.

## अथ राशिगुणविचारः

### ராசிகுண விசாரம் (திருமண விஷயம்)

**राश्योरेकाधिपत्ये, अधिपत्योर्मित्रत्वे पञ्च गुणाः ।**

ஸ்த்ரீ புருஷர்களின் இரு ராசிகளுக்கும் அதிபதி ஒருவராக இருப்பினும், அல்லது இரு ராசிகளின் அதிபதிகள் ஒருவருக்கொருவர் "மித்ரத்வம்" உள்ளவர்களாக இருப்பினும் 5 குணங்கள். (5 Points).

**समत्वशत्रुत्वे अर्धगुणः ।**

ஸ்திரீ புருஷ ராசி அதிபர்களுக்குள் ஒருவர் ஸமத்வம் உள்ளவராயும் இன்னொருவர் சத்ருத்வமுள்ளவராயும் இருப்பின், அரை குணம் உண்டு.

**समत्वमित्रत्वे चत्वारः ।**

ஒரு ராசி அதிபதி ஸமத்வமுள்ளவராயும் இன்னொரு ராசி அதிபதி மித்ரத்வமுள்ளவராயும் இருந்தால், நான்கு குணங்கள் உண்டு.

**शत्रुमित्रत्वे एकः ।**

ஒரு ராசிநாதன் சத்ருத்வமும், இன்னொரு ராசிநாதன் மித்ரத்வமும் உள்ளவராயின் ஒரு குணம் உண்டு.

**द्वयोः समत्वे त्रयः ।**

இரு ராசிநாதர்களுமே, ஸமத்வமுள்ளவராயின் மூன்று குணங்கள் உண்டு.

**द्वयोः शत्रुत्वे गुणाभावः ।**

இரு ராசி அதிபதிகளுமே பரஸ்பரம் (ஒருவருக்கொருவர்) சத்ருத்வமுள்ளவராயின் குணமேதுமில்லை. ராசிநாதர்களுள் பரஸ்பரம் சத்ருத்வமிருத்தல் கூடாது.

॥ इति राशिगुणः ॥

இவ்வாறு ராசிகுண விசாரம் முற்றிற்று.

## अथ गणगुणविचारः

### கணகுண விசாரம்

(இதுவும் திருமணப்பொருத்தம் பற்றியதே)

**गणैक्ये षट् ।**

ஸ்த்ரீ—புருஷர்கள் இருவருமே ஒரு கணத்தைச் சேர்ந்தவராயின் 6 குணங்கள்.

**पुंस्त्री देवमानुषे च षड् गुणाः**

புருஷன் தேவகணமாயும் ஸ்த்ரீ மனுஷ்ய கணமானாலும் 6 குணம் உண்டு.

**स्त्रीपुंदेवमानुषे पञ्च**

ஸ்த்ரீ - தேவகணமாயும் புருஷன் மனுஷ்யகணமாயும் இருப்பின் 5 குணங்கள்.

**पुंस्त्रीराक्षसदैवे एकः**

புருஷன் ராக்ஷஸ கணமாக இருந்து ஸ்த்ரீ, தைவ கணமாயின் ஒரு குணம்.

**स्त्रीपुंराक्षसदैवे गुणाभावः**

ஸ்த்ரீ ராக்ஷஸ கணமாக இருந்து, புருஷன் தைவ கணமானால், குணமேதும் இல்லை.

**मनुष्यराक्षसेऽपि गुणाभावः**

ஸ்த்ரீ - மனுஷ்ய கணமானாலும், புருஷன் ராக்ஷஸ கணமானாலும் குணம் இல்லை.

॥ इति गणगुणविचारः ॥

கணகுண விசாரம் முற்றிற்று

## राशिकूटगुणविचारः

ராசிகூட குணவிசாரம்

**राशिकूटे सत्कूटे सप्त गुणाः**

ஸ்த்ரீ புருஷ ராசி அதிபர்கள், சுபர்களானால் 7 குணங்கள்.

**दुष्कूटे ग्रहमैत्रसमत्वे चत्वारः**

ஸ்த்ரீ புருஷ ராசி அதிபர்கள், அசுபர்களானாலும் ஒருவர் மித்ரராகவும் மற்றவர் ஸமனாகவும் இருப்பினும் நான்கு குணம்.

**अन्यथा एकः**

கீழே (இதற்கு முன்னால்) கூறப்பட்டுள்ளதற்கு மாறுபட்டிருப்பின், ஒரு குணம்.

**चरणैक्ये गुणाभावः**

ஸ்த்ரீ புருஷ நக்ஷத்ர பாதம் ஒன்றாக இருப்பின் குணமில்லை.

॥ इति राशिकूटगुणविचारः ॥

இவ்வாறு ராசிகூட குணவிசாரம் முற்றிற்று

## अथ नाडीगुणः

நாடிகுண விசாரம்

**नाड्यैक्ये मृत्युः ।**

ஸ்த்ரீ-புருஷர்களின் நாடி ஒன்றாக இருப்பின் மரணம்.

**नाडिभेदे अष्टगुणाः ।**

ஸ்த்ரீ-புருஷர்களின் நாடி வேறுபடின் 8 குணங்கள் உண்டு.

**नाड्यैक्यं वर्ज्यम् ।**

ஸ்த்ரீ-புருஷர்களின் நாடி ஒன்றாயிருப்பின் விலக்கத் தக்கது.

अत्र वर्ण, वश्यकूट, योनिकूटानां अल्पगुणत्वात् विवाहघटनाभावाच्च [ विवाहघटन उपयोगाभावाच्च ] स्वरूपं नोक्तम् ।

இங்கு வர்ணகூடம், யோனிகூடம் இவைகளின் குணம் சொற்பம் என்பதாலும், திருமணப் பொருத்தம் விஷயத்தில் உபயோகமில்லை யென்பதாலும் அவற்றின் குண ஸ்வரூபம் பற்றிக் கூறப்படவில்லை.

अत्र सर्वगुणमेलनेन विंशतिगुणसम्भवे मध्यमम् विंशत्यधिकगुणत्वे शुभम् । विंशत्यूनत्वे त्वशुभम् ।

திருமணப் பொருத்தம் விஷயத்தில் எல்லா குணங்களையும் கூட்டினால் 20 குணம் அமையுமானால் பொருத்தம் மத்யமம் என்றும். 20 குணங்களுக்கு அதிகமானால் உத்தமம், சுபம் என்றும் 20 குணங்களுக்குக் குறைந்தால் அசுபம் (பொருத்தமில்லை) என்றும் ஆகும்.

श्लो. दीर्घायुर्दिनसंज्ञकात्तनयपौत्राप्तिस्तु माहेन्द्रतः
स्त्रीदीर्घात्तु च मङ्गलाप्तिरनिशं सम्पत्स्थिरा योनितः ।
अन्योन्यं रमणीयता तु गणतस्तद्वन्मनोहारिता
दम्पत्योर्वयसानुकूलत इति प्रोक्तं फलं किञ्चन ॥

தினப்பொருத்தமிருப்பின் நீண்ட ஆயுளையும், மாகேந்திரப் பொருத்தமிருப்பின் பிள்ளை, பேரன் என வம்ச விருத்தியையும், ஸ்த்ரீ தீர்க்கமிருப்பின் ஸகல மங்களங்களையும் யோனிப் பொருத்தம் இருப்பின் நிலையான லக்ஷ்மீ கடாக்ஷத்தையும் அளிக்கும். கணப் பொருத்தமிருப்பின் ஒருவருக்கொருவர் அழகுடன் விளங்குவதான உணர்ச்சியும், வயது முதிர்ந்தாலும் ஒருவருக்கொருவர் அழகுடன் ளிளங்குவதான உணர்ச்சியும், வயது முதிர்ந்தாலும் ஒருவருக்கொருவர் அனுகூலமாக நடந்து கொள்வதனால் மன நிறைவும் ஏற்படும்.

ஶ்லோ. यस्यां मनः समायुक्तं तामेव विवहेद्बुधः ।
सर्वानुगुणभङ्गेभ्यो मनोऽनुगुणताऽधिका ॥ १२६

அறிவாளியாக இருப்பவன் எந்த ஸ்த்ரீயிடத்தில், மனம் ஒன்றுபட்டு நிலைத்து இருக்கிறதோ அந்த ஸ்திரீயையே திருமணம் செய்துகொள்ளவேண்டும். கீழே சொல்லப்பட்டுள்ள மற்ற பொருத்தங்கள் பொருத்தமில்லாமை முதலான விசாரத்தைவிட, *ஒருவருக்கொருவருடைய மனம் பரஸ்பரம் அனுகூலப்பட்டிருப்பின் அதுவே உயர்வானது.

ஶ்லோ. षष्ठाष्टमे वा नवपञ्चमे वा द्विद्वादशे राक्षसकन्यकायाः ।
एकाधिपत्ये भवनेशमैत्रे विरञ्चिपाणिग्रहणं प्रशस्तम् ॥

ப்ராம்மம், தைவம், ஆர்ஷம் முதலான பலவகை விவாஹங்களில் ப்ராம்ம விவாஹத்தில் ஜாதகப் பொருத்தம் பார்க்கப்பட வேண்டும். அதில் ஸ்த்ரீ புருஷர்களின் ராசிநாதர்கள் ஒருவரேயானாலும், ராசி அதிபதிகள் ஒருவருக்கொருவர் மித்ரனாக இருந்தாலும் ராசிகள் 6x8ல் என்பதையோ, 9x5ல் என்பதையோ, 2x12ல் என்பதையோ ஸ்த்ரீராக்ஷஸம் என்பதையோ பார்க்கவேண்டியதில்லை

---

* இங்கு இவ்வாறு கூறப்பட்டதின் உண்மைக் கருத்து — மற்ற எல்லாப் பொருத்தங்களுடன் மனப்பொருத்தம் என்பதும் முக்யமாக கவனிக்கப்படவேண்டியது என்பதேயன்றி மற்றப் பொருத்தங்கள் பார்க்கப்படுவதை நிஷேதம் செய்வதாகக் கொள்ளலாகாது. பொருத்தம் விஷயத்தில் சொல்லப்பட்டுள்ள குணங்கள் அதிகம் இருப்பினும் "மனப்பொருத்தமும் முக்யமானதே" என்பதால் மனப் பொருத்தமில்லையாகில் பொருத்தமில்லை என்றும், குணங்கள் சற்றே குறைவாக இருப்பினும் "மனப்பொருத்தம்" கூடிவரின், பொருத்தம் உள்ளதென்றும் கருதவேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டது என்று கருதப்படவேண்டும்.

திருமணப் பொருத்தம் விஷயமாகச் சிந்திக்கும் பொழுது தினப் பொருத்தம் விஷயமாகப் பல 'விதிவிலக்குகள்' மஹர்ஷிகளால் கூறப்பட்டுள்ளன. அது பற்றி இந்த ஸரஸ்வதி மஹால் நூலகத்தில் வெளியிடப்பட்ட 'கால ப்ரகாசிகை' (தமிழ் உரையுடன்) யெனும் நூலில் உள்ள கருத்துக்களையும் ஆராய வேண்டுவது அவசியம். முக்கியமானதொன்று கூறப்படவேண்டும். நக்ஷத்திரங்கள் விஷயத்தில் பலர், தவறான எண்ணமுடன் இருப்பதால், அது பற்றிக் கூறுகிறோம். ஸ்த்ரீ புருஷர்களுக்குள் பொருத்தம் பார்க்கும் பொழுது மூலம். ஆயில்யம், கேட்டை, விசாகம் இவை முக்யத்வம் பெறுகின்றன. மூலம். ஆயில்யம் ஆயின் பெண்ணாயினும் ஆணாயினும் விலக்கி விடுகிறார்கள். அது சரியல்ல. பெண்ணுக்கு மூலம். ஆயில்யம், கேட்டை, விசாகம என்றால்தான் புருஷனின் பெற்றோர் யோசிக்கவேண்டும். புருஷனுக்கு மூலமாயினும் ஆயில்யமாயினும், விசாகம், கேட்டையாயினும் தோஷமில்லை. தோஷமே இல்லை. தோஷமே இல்லை

मूले सार्पे विशाखायामिन्द्रभे चोद्भवः पुमान् ।
न दोषकृद्विवाहेषु स्त्रियः सर्वत्र गर्हिताः ॥

இதன் பொருள்: மூலத்திலோ ஆயில்யத்திலே விசாக நக்ஷத்திரத்திலோ, கேட்டையிலோ பிறந்த புருஷன் பெண்ணின் வீட்டாருக்கு எதுவும் தீங்கு செய்துவிட மாட்டான். ஆனால் கூறப்பட்ட நக்ஷத்திரத்தில் பிறந்தது பெண்ணானால் பிள்ளை வீட்டாருடன் இணைந்துவிடுகிற காரணமாக "அவிபக்த குடும்பமானால் சில தீமைகளைச் செய்யலாம்.

| | | |
|---|---|---|
| மூலம் | பெண்ணாகில் | மாமனாருக்கு ஆகாது. |
| ஆயில்யம் | ,, | மாமியாருக்கு ஆகாது. |
| விசாகம் 4ம் பாதமாகில் | ,, | மணப்பெண்ணின் கணவரின் தம்பிக்கு மட்டும் ஆகாது. |

கேட்டை பெண்ணாகில் மணப்பெண்ணின்
புருஷனின் மூத்த
சகோதரனுக்கு ஆகாது.

என்பதை அறியவேண்டும். மூலம், ஆயில்யம், விசாகம், கேட்டை ஆணின் நக்ஷத்திரமானால் தோஷமில்லை.

திருமணப் பொருத்தம் — சம்பந்தமாகச் சிந்திக்கும் பெற்றோருக்கும், பொருத்தம் பார்க்கும் தைவக்ஞருக்கும் ஒரு முக்யமான பொறுப்பு உண்டு அது யாதெனில், ஸ்த்ரீ–புருஷ ஜாதகங்கள் சரியாகக் கணிக்கப்பட்டிருக்கின்றனவா. இரு ஜாதகங்களும் ஒரே மாதிரியான பஞ்சாங்கம் கொண்டு கணிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதை முதலில் உறுதி செய்துகொண்ட பிறகு பொருத்தம் பார்ப்பதே சரியாகும். 'ஆயிரங்காலத்துப் பயிர்' என்று சொல்லார்கள். திருமணமாகிவிட்டால் மாற்றம் செய்யமுடியாதே. எனவே, "சரியான ஜாதகங்களா" என்பதை இக்காலத்தில் உறுதி செய்துகொள்ள "கம்ப்யூட்டர்கள்" பேருதவியாகவுள்ளன என்பதால் ஸ்த்ரீ-புருஷ ஜாதகங்களை சரியாகக் கணித்துப் பின்பு பொருத்தம் பார்ப்பது அவசியம்.

## ॥ कुजदोषस्तत्परिहारश्च ॥

செவ்வாய் தோஷமும் அதற்கான பரிஹாரமும்

श्लो. धने व्यये च पाताले जामित्रे चाष्टमे कुजे ।
स्त्रीणां भर्तृविनाशः स्याद्भर्तॄणां दारनाशनम् ॥ १२८

लग्नेन्दुशुक्राद्दुःस्थाने यद्यस्ति क्षितिसम्भवः ।
तद्दशापाकसमये दोषमाहुर्मनीषिणः ॥ १२९

திருமணப் பொருத்தம் பற்றிக் கூறி வந்த ஆசிரியர் ஸ்த்ரீ புருஷ ஜாதகத்தில் செவ்வாய் கிரஹத்தின் தோஷம்

பற்றியும் கூறுகிறார். (இங்கு செவ்வாய் தோஷம் பற்றிச் சுருக்கமாகவே கூறப்படுகிறது). ஒருவருடைய ஜாதகத்தில், 2, 12, 4, 7, 8 என்ற ஐந்து ஸ்தானங்களில் ஏதேனும் ஒன்றில் செவ்வாய் இருந்தால் அது தோஷமாகும். (லக்னத்தில் இருந்தாலும் தோஷமே. ஸ்த்ரீ ஜாதகத்தில் 2, 12, 4, 7, 8 ஆமிடங்களுள் ஏதேனும் ஓரிடத்தில் செவ்வாய் இருந்தால் அதனால் புருஷனுக்கு நாசம் ஏற்படும். புருஷ ஜாதகத்தில் முன் கூறப்பட்டது போல் 2, 12, 4, 7, 8ல் செவ்வாய் இருப்பின் அவனுடைய ஸ்த்ரீக்கு (பத்னிக்கு) நாசம் ஏற்படும். ஜன்ம லக்னம், சந்திர லக்னம் சுக்ரன் இருக்கும் இடம் ஆகியிலிருந்து 2, 4, 7, 8, 12 ஆமிடங்களில் ஏதேனும் ஓரிடத்தில் செவ்வாய் இருப்பின், செவ்வாயின் மஹா தசையோ, புக்தியோ நடக்கும் சமயம் முன்னால் சொல்லப்பட்டவாறு தோஷம் ஏற்படும் என வித்வான்கள் கூறுகிறார்கள்.

ஶ்லோ. दम्पत्योर्जन्मकाले व्ययधनहिबुके सप्तमे लग्नरन्ध्रे
लग्नाच्चन्द्राच्च शुक्रादपि भवति यदि भूमिपुत्रो द्वयोर्वै ।
तत्साम्ये(स्याम्) पुत्रमित्रप्रचुरधनपती दम्पती दीर्घकाल
त्वेको हीनस्तदन्ये भवति मृतिरिति प्राहुरत्रात्रिमुख्याः ॥

ஒரு ஸ்த்ரீ-புருஷ ஜோடியின் (தம்பதியரின்) பிறந்த சமயத்தில் ஜன்ம லக்னம் சந்திர லக்னம், சுக்ரன் இருக்குமிடம் இதற்கு 12, 2, 4, 7, 1, 8 ஆமிடத்தில் (ஏதேனும் ஓரிடத்தில்) இருவருடைய ஜாதகங்களிலுமே செவ்வாய் இருந்தால் (தோஷ பாவம் ஸமமாவதால்) அத் தம்பதிகள் புத்ரமித்ரர்கள் மிகுந்த தனங்களுக்கு அதிபதியாகப் பல்லாண்டு காலம் ஜீவித்திருப்பர். இது தம்பதியருடைய ஜாதகங்களில் இரண்டிலும் செவ்வாய் தோஷம் ஸமமாக இருப்பதை பொருத்தது. அவ்வாறில்லாமல் தம்பதியருள் ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் முன் கூறப்பட்டவாறு இருந்து. மற்றவருடைய ஜாதகத்தில் இல்லாதிருப்பின், செவ்வாய் தோஷமில்லாதவருக்கு மரணம் சம்பவிக்கும்

என்று இவ்விஷயத்தில் அத்ரி முதலான முனிவர்கள் கூறுகிறார்கள்.

எனவே, ஜாதகத்தில் 1, 2, 4, 7, 8, 12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருப்பின் அது தோஷமாகும் என்பது ஸித்தம்.

ஸ்லோ. चतुःसप्तमगे भौमे मेषकर्कालिनक्रगे ।
यदा राशौ शुभ प्रोक्तं कुजदोषो न विद्यते ॥ १३१

ஸ்த்ரீ — புருஷ ஜாதகங்களில் செவ்வாய் மேஷம், கடகம், விருச்சிகம், மகரம் (மேஷமும், விருச்சிகமும் செவ்வாயின் சொந்த இடம், கடகம் செவ்வாயின் நீச ஸ்தானம், மகரம் செவ்வாயின் உச்சஸ்தானம்.) இவற்றுள் ஏதேனும் ஒன்றில் இருந்து அந்த ராசிகள் ஜன்ம, சந்திர, சுக்ர லக்னத்திற்கு 4 அல்லது 7 ஆமிடமாகவோ அமையுமானால் அப்போது அப்போது செவ்வாய் சுபன் ஆகிறான் என்பதால் 4 ஆமிடம், 7 ஆமிடத்தில் செவ்வாய் இருப்பதால் ஏற்படக்கூடிய தோஷம் நேரிடுவதில்லை என்பது பொருள். * இங்கு ஒரு கேள்வி எழுகிறது தம்பதிகளில் ஒருவருடைய ஜாதகத்தில் செவ்வாய் தோஷமே இல்லை. மற்றவருடைய ஜாதகத்தில் மேஷம், விருச்சிகம், கடகம், மகரம் இந்த இடங்களில் ஒன்றில் செவ்வாய் இருக்கிறது. அந்த இடம், 4 அல்லது 7 ஆமிடமாகவும் ஆகிறது. எனவே செவ்வாய்

---

* இங்கும் தோஷம் உண்டு என்பதே சரியான பதிலாகும். தம்பதிகளில் ஒருவருக்கு ஜாதகத்தில் தோஷமே இல்லை என்பதால் அது நிர்தோஷ ஜாதகமாகிறது. மற்றவருக்கு ஜாதகத்தில் 4—7ல் செவ்வாய் இருப்பதால் தோஷமுள்ள ஜாதகமாகிறது. ஆனால் செவ்வாய் இருக்கிற இடம் மேஷம், கடகம், விருச்சிகம், மகரமாக இருப்பதின் காரணமாக அது தோஷத்திற்குப் பரிஹாரமாக அமைகிறது. எனவே இது பரிஹாரமுள்ள செவ்வாய் தோஷமுடன் உள்ள ஜாதகம் என்றாகிறது. ஒருவருடைய ஜாதகம் நிர்தோஷம் உள்ளது. மற்றவருடைய ஜாதகம் "பரிஹ்ருத தோஷம்" உள்ள ஜாதகம் ஆகிறது எனவே பொருத்தப்படாது.

தோஷம் உண்டா? இல்லையா? இவ்விரண்டு ஜாதகங்களையும் சேர்க்கலாமா? சேர்ப்பதால் தீமை ஏற்படாதா? என்றால் கூறப்பட்ட சாஸ்திரப்படிக்கு மேஷம் முதலான நான்கு ராசிகளில் ஏதேனும் ஒன்றில் செவ்வாய் இருப்பதால் அது 7 அல்லது 4 ஆமிடமாக அமைவதால் தோஷம் இல்லையென்றுதான் பதில் சொல்லியாகவேண்டும்.

श्लो. चरराशिगतो भौमश्चतुर्थेऽव्यये द्वये ।
लग्ने पापविनाशः स्यात्छेषे पापो विशेषतः ॥ १३२

*1, 2, 4, 7, 8, 12* ஆகிய இடங்களில் ஏதேனும் ஒன்றில் செவ்வாய் இருந்து, அந்த இடம் சரராசியாக இருப்பின் "செவ்வாய் தோஷம்" இல்லை என்று பொருள். அவ்வாறின்றி *1, 2, 4, 7, 8, 12* ஆகியவற்றில் ஒன்றில் செவ்வாய் இருந்து, அது சரராசியாக இல்லாமல் ஸ்திர ராசியாகவோ உபய ராசியாகவோ ஆகுமானால் செவ்வாய் விசேஷமாகப் பாபியாகிவிடுகிறான்.

श्लो. [1]पञ्चकस्थानगे दोषे लग्नेन्दुगुरुसंस्थिते ।
बुधे स्थिते न दोषोऽस्ति दृष्टे दोषं न चिन्तयेत् ॥ १३३

*1, 2, 4, 8, 12* ஆகிய ஐந்து இடங்களில் ஏதேனும் ஒன்றில் செவ்வாய் இருந்து அங்கு குரு இருந்தாலும் அவ்விடத்தை குரு பார்த்தாலும் அல்லது அங்கு புதன் இருந்தாலும் அல்லது புதனால் பார்க்கப்பட்டாலும் செவ்வாய் தோஷம் ஏற்படாது. இங்கும் ஒரு முக்யமான விஷயம் பரிசீலனைக்குரியது. இதில் ஐந்து இடங்களில் செவ்வாய் இருப்பதால் ஏற்படும் தோஷத்திற்கு பரிஹாரம் கூறப்படுகிறது. அந்த ஐந்து இடங்கள் யாவை? *2, 4, 7, 8, 12* என்று பொருள்கொள்வதா? அல்லது *1, 2, 4, 8, 12* என்று

---

1 மேலேயுள்ள ச்லோகம் பிழையுள்ளதாக இருக்கிறது. கூறப்பட்டு உள்ள பொருளுக்கு ஏற்றபடி ச்லோகம் இல்லை, உரிய பொருள்களைக் கருவாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கவேண்டும்.

பொருள்கொள்வதா? 1, 2, 4, 7, 8, 12 இந்த ஆறு இடங்களில் எதை விலக்குவது? எதைச் சேர்ப்பது? [illegible]-காலே எனும் ச்லோகத்தில் 1, 2, 4, 7, 8, 12 எனும் ஆறு இடங்களில் செவ்வாய் இருப்பின் தோஷம் உண்டு எனக் கூறப்பட்டுள்ளதாலும் [illegible] என்று கூறப்பட்ட ச்லோகத்தில் "ஐந்து இடங்களில் செவ்வாய் இருப்பதால் ஏற்படும் தோஷம்" எனக் கூறப்பட்டாலும் ஏதோ ஒரு ஸ்தானத்தில் உள்ள செவ்வாய்க்கு குரு, புதன் இருவருடைய சம்பந்தம் ஏற்பட்டாலும் கூட தோஷம் விலகாது என்பதாகத் தீர்மானிக்கப்படவேண்டும். ஆகையால் யோசித்துப் பார்த்தால், இது திருமண விஷயம் என்பதாலும் 7 ஆமிடம் களத்ரஸ்தானம் மிக முக்யமானது என்பதாலும் 7 ஆமிடத்திற்கு செவ்வாயின் சம்பந்தம் ஏற்பட்டு இருப்பின் அந்த தோஷம் பரிஹரிக்க முடியாத தோஷம் ஆகும் என்று பொருள் கொள்ளும் விதத்தில் அர்த்தம் கல்பிக்கலாம். இது விஷயம் மஹனீயர்களின் பரிசீலனைக்குரியது. செவ்வாய் தோஷம் பற்றி வேறுபல கருத்துக்களும் உண்டு. அவற்றையும் அறிந்து தீர்மானம் செய்யவேண்டும். செவ்வாய் கிரஹம் ஸ்வபாவத்தில் க்ரூர கிரஹம் என்பதால், தன் ஸ்வபாவத்திற்கேற்ப மிகுந்த தோஷத்தைச் செய்யவே செய்வார். இதுபோல், ஒரு ஜாதகத்தில் லக்னத்தில் செவ்வாய் இருந்தாலும் களத்ர ஸ்தானத்தில் பாதகாதிபதி இருந்தாலும், (பாதகாதிபதி நைஸர்கிக சுபனாக இருந்தாலும்கூட) அந்த ஜாதகருக்குத் திருமணம் மிகவும் சிரமத்தின் பேரில்தான் நடைபெறுகிறது. இதே போல் களத்ர ஸ்தானத்தில் கேதுவோ சனியோ, சூரியனோ இருப்பினும் விவாஹ விஷயமான பிரச்னைகள் அல்லது தாமதித்த விவாஹம் அமையவே செய்கிறது. ஸமதோஷம் உள்ள ஜாதகங்களாகில் பொருத்தம் ஏற்பட்டு, திருமண வாழ்க்கை மங்களகரமாக அமைகிறது.

ஜாதக சந்திரிகை முற்றிற்று

சுபம் பூயாத்